
தமிழ் சாகித்திய விழா
சிறப்பு மலர்-2008
மத்திய மாகாணம்
500
2012
"கல்வியால் உயர்வடைவோம்"
மத்திய மாகாண கல்வி (தமிழ்)
இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு


# தமிழ் சாகித்திய விழா
# மத்திய மாகாணம்

# சிறப்பு மலர்
# 2008

இதழாசிரியர்
ஆர். மகேஸ்வரன்

கல்வியால் உயர்வடைவோம்

மத்திய மாகாண கல்வி (தமிழ்), இந்து கலாசார அலுவல்கள்,
தோட்ட உட்கட்டமைப்பு, கைத்தொழில், விளையாட்டு,
மகளிர் விவகாரம், கிராம அபிவிருத்தி அமைச்சு



தமிழ் சாகித்திய விழா
சிறப்பு மலர்~2008
மத்திய மாகாணம்
500
2012
"கல்வியால் உயர்வடைவோம்"
மத்திய மாகாண கல்வி (தமிழ்)
இந்து கல சார அலுவல்கள் அமைச்சு



எஸ். அருள்சாமி = கௌரவ அமைச்சர்

மாண்புமிகு இலங்கை சனாதிபதியின்

## வாழ்த்துச் செய்தி



தமிழ் சாகித்திய விழா நடைபெறுவது எமக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயமாகும். காரணம் இவ் விழாவானது தேசத்தின் சாகித்தியத்தினதும், தமிழ் சாகித்தியத்தினதும் அபிவிருத்தியின் பொருட்டு பாரிய பங்களிப்பினை வழங்கும் ஒரு விழா என்பதாகும்.

சிறந்ததொரு பிரஜையை சமூகத்திற்கு உருவாக்க சாகித்தியமும் அவ்வாறான நூல்களின் பக்கத்துணையும் பெரிதும் உறுதுணையாக அமைகின்றது. இதன் காரணமாகவே புதிய இலங்கையை உருவாக்கும் பொருட்டு "மகிந்த சிந்தனை" வேலைத் திட்டத்தின் ஊடாக கலை கலாசார விழுமியங்களின் அபிவிருத்தியின் பொருட்டு அதிகப்படியான கவனத்தினை செலுத்த பல வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மனிதன் பௌதீக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் அடையும் அபிவிருத்தியே உண்மையான அபிவிருத்தி என நான் கருதுகின்றேன். சிறந்ததொரு பிரஜை உருவாக மத ரீதியான அனுகூலம் எவ்வாறு உறுதுணையாகின்றதோ அது போன்றே சிறந்த நூல்களும் இவ் விடயத்தில் மிக மிக உறுதுணையாக இருக்கின்றது. அவ்வாறான ஒருவர் உண்மையிலேயே சமூகத்தை நேசிப்பவரும் மற்றயவருக்கு மதிப்பளிக்கும் நற்பிரஜையாகவும் இருக்கின்றார்.

சாந்தியும், சமாதானமும் விரும்பும் ஒரு சமூகத்தை உருவாக்க நாம் மேற்கொண்டு வரும் இவ்வேலைத் திட்டங்கள் வெற்றிகரமான பாதையை நோக்கி சென்று கொண்டிருப்பது நீங்கள் யாவரும் அறிந்த விடயமே. தமிழ் சாகித்திய விழாவின் ஊடாக ஏற்படும் சாகித்திய உத்வேகமானது எமது நோக்கத்தை மேலும் வலுப்படுத்த உறுதுணையாக அமையும் என நான் நம்புகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் அர்ப்பணிப்புடன் ஏற்பாடுகளை பிரதானமாக மேற்கொண்டு வரும் அமைச்சர் அருள்சாமி உட்பட மற்றும் மத்திய மாகாணத்தின் சகல இலக்கியவாதிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் சாகித்திய விழா சகல விதத்திலும் வெற்றிகரமாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஸ

# வாழ்த்துச் செய்தி



சாகித்தியம் சகவாழ்வுக் கலாச்சாரத்திற்கு வழிவகுக்கின்றது. தமிழ் என்பது உலகின் உயிரோட்டமுள்ள மொழிகளில் மிக மிகத் தொன்மையானதும் அழியாத் தன்மை கொண்டதுமான இலக்கிய சம்பிரதாயத்தை தனதாக்கிக் கொண்ட சில மொழிகளில் ஒன்று என்பது பலரின் கருத்தாகும்.

மொழி என்பது அதி உன்னத இலக்கியம் மற்றும் சாகித்தியத்தை உருவாக்குவதற்கு தேவையான அடிப்படை சாதனமாகும் .

அவ்வாறானதொரு தொன்மை வாய்ந்த தமிழ் இலக்கியம் கவிதை வடிவில் தான் இருந்ததென்பது ஒரு பிரபல கருத்தாகும்.

கி.பி. 17ம் நூற்றாண்டின் காலத்தில் தமிழ் எழுத்து இலக்கியம் ஆரம்பித்ததென்பது வரலாற்று அறிஞர்களின் கூற்றாகும்.

இன்று புழக்கத்தில் உள்ள அதி தொன்மையான தமிழ் நூல் சங்க கால இலக்கியத்திற்கு உரித்தாவதோடு சங்க கால இல்கியம் என்பது தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆரம்ப காலம் என்பது அறிஞர்களின் கூற்றாகும்.

சங்க கால இலக்கியமானது அக்கால தமிழ் இராச்சியங்களின் அரசியல், சமூக, கலசார பொருளாதார மற்றும் கல்வி ஆகிய துறைகளின் பொருட்டு நிறைவான பங்களிப்பினை பெற்றுக்கொடுத்ததென ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தமிழ் நாட்டின் பயிபல் என்பது திருக்குறளாகும். பிற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களினுள் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்ட அளவு வேறு எந்தவொரு நூலும் மொழி பெயர்க்கப்படவில்லை என நம்பப்படுகின்றது.

“சிலப்பதிகாரம்“ மற்றும் “ மணிமேகலை“ போன்ற நூல்கள் தமிழ் இலக்கியத்தின் முதன்மை பெறும் மகா காவியங்களாகும். தமிழ் இலக்கியத்தின்

ஊடாக சிங்கள இலக்கியம் பெற்ற பிரதிபலிப்பினை உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் அன்றும் இன்றும் சான்று பகிர்கின்றன. பொலன்னறுவ யுகத்திற்குரிய தேசிய (அட்டுவா) கவிதை தொடரில் இக் கவிதையும் இடம் பெற்றுள்ளது என்பது அறிஞர்களின் கருத்தாகும். தம்பதெனி யுகத்தைச் சார்ந்த சத்தர்ம ரத்னாவலிய எனும் காவியத்தில் தமிழ் மொழியில் இடம் பெறும் வசனங்கள் உபயோகப்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகா பாரதம், இராமாயணம், பஞ்ச தந்திரம் போன்ற இலக்கிய நூல்களை சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதும் தமிழ் இலக்கியத்தின் ஊடாகவாகும். சிங்கள இலக்கியம், சிங்கள நாடகம் ஆகியவை தொடர்பான விடயங்களை ஆராயும் போது இவ் விடயங்கள் காணக் கூடியதாகவுள்ள தென்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இதற்கு பல காரணிகள் இருந்திருக்கலாம். ஆனால் பாரிய கலாசாரங்கள் இரண்டின் இணைப்பானது பழைமையானதும் பிலபல்யமானதும் ஆகும்.

உறவு முறைகளாலும், சக வாழ்வாலும் விரிசலடையும் சமூகங்கள், மீண்டும் உறுதியுடன் இணைய இவ்வாறான பெருமிதமுள்ள சாகித்தியங்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளலாம் என்பது எனது நம்பிக்கையாகும்.

இலக்கிய பிரவாகத்தில் மூழ்கி பூரித்து குழுங்கும் இக் கால கட்டத்தில் அதன் பொருட்டு காலடி வைத்து முன்நோக்கிச் செல்ல நடவடிக்கை மேற்கொண்டிருப்பது காலத்திற்குகந்த செயற்பாடாகும் என்பது எனது கருத்து.

அதன் பொருட்டு தலைமைத்துவம் தாங்கி நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் மத்திய மாகாண சபைக்கும் எஸ். அருள்சாமி அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியுணர்வை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2008ம் வருடத்திற்கான தமிழ் சாகித்திய விழா செயற்பாடுகள் யாவும் சகல விதத்திலும் வெற்றிகரமாக அமைய வேண்டும் எனவும், இந் நிகழ்வின் ஏற்பாடுகள் யாவும் தங்கு தடையின்றி நிறைவேறவும் உளமார வேண்டுகின்றேன்.

புத்துணர்ச்சிமிக்க மனிதர்களை உருவாக்குவது சாகித்தியமும், கலையுமாகும்.

அவ்வாறான கலை அம்சங்களை இவ்வாறு விழாக்கோலத்துடன் கொண்டாடுவதன் மூலம் சகவாழ்வு உறுதிப்படுத்தப்படுகின்றது.

**ரத்னசிரி விக்கிரமநாயக்க.**
**பிரதமர்.**

# வாழ்த்துச் செய்தி



அதி உன்னத விழாக்கோலத்துடன் இவ்வருடமும் நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவின் பொருட்டு ஆசிச் செய்தி வழங்க வாய்ப்பு கிட்டியமையை பெரிதும் மதிக்கின்றேன்.

தமிழ் மொழிக்கு ஆயிரமாயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்த ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெருமை உள்ளது. துட்டகைமுனு மற்றும் பராக்கிரமபாகு அரச கால கட்டத்திலும் விஷேடமாக தம்பதெனிய, கோட்டை மற்றும் கண்டி இராச்சியங்களின் காலங்களிலும் சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சிக்கு தமிழ்ப் புலவர்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளமை வரலாற்றை நோக்கும் போது நமக்கு தெளிவாகும் ஒரு விடயமாகும்.

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்கள் "மகிந்த சிந்தனை" வேலைத் திட்டத்தின் ஊடாக நம் தேசத்தில் வாழும் சகல இனங்களினதும் கலை, கலாசார மற்றும் இலக்கிய நிகழ்வுகளை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு, அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் ஐக்கிய நாட்டு சபையின் 60 வருட கால வரலாற்றில் முதன் முறையாக தமிழ் மொழி மூலம் சபையில் உரையாற்றிய உலகின் முதலாவது தலைவராக அவர் ஒரு பாரிய உதாரணத்தினை எமக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார். மேலும் அரச சாகித்திய பெரு விழாவினை 2009ம் வருடத்தில் கிளிநொச்சியில் நடத்த மேற்கொண்டுள்ள தீர்மானமானது, தற்போதைய அரசாங்கம் தமிழ் சாகித்தியத்தின் அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளும் பொறுப்புமிக்க கைங்கரியத்தினை மீண்டும் ஒரு முறை பிரகாசிக்கச் செய்கிறது.

மத்திய மாகாணத்தினை பிறப்பிடமாகக் கொண்டு வாழும் பெருந்தோட்ட சகோதர தமிழ் மக்களின் பண்பாட்டினை வெளிக்காட்டி அவர்களின் திறமைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு இவ்வாறான விழாக்களை நடாத்துவதன் ஊடாக பாரிய சேவையொன்று வழங்கப்படுவதுடன், இவ்வாறானதொரு உயர் ரக விழாவினை வருடாந்தம் நடாத்த அர்ப்பணிப்புடன் செயலாற்றும் மத்திய மாகாண சபையின் தமிழ் கல்வி மற்றும் இந்து கலாசார அமைச்சர் கௌரவ எஸ்.அருள்சாமி அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர் குழுவிற்கும் எனது உளமார்ந்த பாராட்டினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டிக்கிரி கொப்பேகடுவ**
**மத்திய மாகாண ஆளுநர்**

## வாழ்த்துச் செய்தி



2008 ஒக்டோபர் மாதம் 18ம், 19ம் திகதிகளில் நுவரெலியா "சினிசிட்டா மண்டபத்தில்" நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மத்திய பிரதேச தமிழ் மக்களின் தமிழ் சாகித்திய விழாவின் பொருட்டு வெளியிடப்படவிருக்கும் விழா மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்க வாய்ப்பு கிடைத்தமையிட்டு மத்திய மாகாண முதலமைச்சர் என்ற ரீதியிலும் கல்வி அமைச்சர் என்ற ரீதியிலும் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முக்கியமாக மத்திய மாகாணம் என்பது சிங்கள, தமிழ், முஸ்லீம் போன்ற பல்வேறு மக்கள் சமூகங்கள் தமது பிறந்த மண்ணாகக் கொண்டு சமாதானமுடனும் ஒற்றுமையுடனும் வாழும் ஒரு பிரதேசமாகும்.

தமிழ் சாகித்திய விழாவானது தமிழ் மக்களினது மட்டுமல்லாது மொழி ரீதியாக வேறுபட்டாலும் சிங்கள, முஸ்லீம் போன்ற சகல மக்களினதும் சாகித்திய விழாவாக கருத வேண்டும் என்பதில் நான் எவ்வித தவறையும் காணவில்லை. மனித சமூகம் கலாசார ரீதியாக பல யுகங்களைக் கடந்து தற்கால நூதன சமுதாயத்தினை நோக்கி நகரும் இச் சந்தர்ப்பத்தில், அவர்களின் வாழ்க்கை நிலைகள், பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் மற்றும் எண்ணங்கள் போன்றவை காலத்திற்கேற்ற வகையில் சிற்சில மாற்றங்களுக்கு பாத்திரமாகினாலும் , யாவரும் மனிதர்கள் என்ற எண்ணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வோமாயின் நாம் யாவரும் ஒரே மக்கள் பிரவாகத்தின் பங்காளர்களாவோம்.

ஆதலால் தமிழ் சாகித்திய விழாவானது எம் யாவருக்கும் கலாசார ரீதியாக பொதுவானதொரு முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மொழி ரீதியாக வேறுபட்டாலும் தமிழ் மொழி மூலம் வெளியிடப்படும் நூல்களிலும் காணப்படுவது மனித நேயமும் அனுபவங்களும் பற்றியேயாகும்.

2008ம் வருட தமிழ் சாகித்திய விழாவின் சகல நடவடிக்கைகளும் எல்லா விதத்திலும் வெற்றியடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

"வரலாற்றுக்கு நன்மை பயக்கும் விடயங்களையே உள்ளடக்க யாவருக்கும் ஊக்கமும் சக்தியும் கிடைக்கட்டும் !!!".

**சரத் ஏக்கநாயக்க.**
**முதலமைச்சர் - மத்திய மாகாணம்**

# வாழ்த்துச் செய்தி



தமிழின மக்களின் நகமும், சதையும் போல தொன்று தொட்டு வரும் சமூ ரீதியான நன்நடத்தையே கலாசாரம். இன்று உலகில் கலாசாரத்திற்கு கட்டுப்பட்டு வாழும் இனம் எமது தமிழினமே. தமிழினம் ஆரம்பமான காலத்திலேயே கலாசாரம் என்பது தமிழ் மக்களின் உள்ளத்தில் செதுக்கப்பட்டதாகும் செதுக்கப்பட்டவை ஆண்டாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் மக்களை நினைக்கச் செய்து அதன்படி நடக்கவும் செய்பவை சாகித்திய விழாக்களே. அந்தவகையில் நான் அமைச்சரான கலத்திற்குள் எனது தலைமையில் கீழ் நடாத்தப்படும் நான்காவது தமிழ் சாகித்திய விழா இம்முறையும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மா நகரில் மிகவும் கோலாகலமாக கொண்டாடப்படுவதையிட்டும் அவ்விழாவில் வெளியிடப்படும் விழா மலருக்கு நான் ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

இம்முறை சாகித்திய விழா தொனிப்பொருளாக "கல்வியால் உயர்வடைவோம்" என கல்விக்கு முதலிடத்தை கொடுத்திருக்கின்றேன். இன்று எமது மலையகம் நாளைய புதிய சமூகத்தை தோற்றுவிக்க கல்வியே பிரதானமாகும் பல பட்டதாரி மாணவர்களை மலையகத்தில் உருவாக்க வேண்டும் என்பது எனது கனா. அவர்கள் பல துறைகளில் திறம்பட சிறந்து விளங்கவேண்டும் என்பது எனது அவா.

இச் சாகித்திய விழாவிலே இம்முறை ஆன்மீகத்துறை, கல்வித்துறை, கலைத்துறை, ஊடகத்துறை எழுத்துத்துறை சார்ந்த 25 சாதனையாளர்களுக்கு சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்படவிருப்பது வளர்ந்து வரும் அவர்களின் திறமைக்கு ஒரு வெற்றியாக அமையும் என்பதில் ஐயமில்லை. "கவரி மான் தன் உடம்பிலிருந்து ஒரு முடி கொட்டினாலும் உயிரை விடுமாம்" அதுபோல் தமிழர் தமிழ் கலாசாசாரத்திற்காக அதை கட்டிக்காப்பதற்காக எதையும் செய்வார்கள். எனவே இன்னும் இந்த புவி அழியும் வரையில் தமிழ் கலாசாரத்தை அழிக்க முடியாது அது மென்மேலும் உறுதியாகிக் கொண்டே செல்லும்.

நாம் வாழும் சமூகம் பல்லினச் சமூகமாகும். இதனால் எமது தனி கலை கலாசார பண்புகளை பல்லினச் சமூகத்துக்கிடையில் நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் தோன்றவே செய்கின்றன. எப்படியோ முற்று முழுதாக எமது கலாசார விழுமியங்கள் அருகிப் போகாமல் ஓரளவு இப்படியான சாகித்திய விழாக்கள் மூலம் பாதுகாக்கப்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது பண்பாட்டு கலாசாரம் மறைந்து போகமல் இருப்பதற்கு ஒவ்வொரு மலையக குடிமகனும் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு கல்வியே பிரதான காரணமாய் அமைகின்றது.

எனவே நாம் ஒவ்வொருவரும் எமது முன்னோரின் பொக்கிஷமாகிய கலாசாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி பின்பற்றினால் நிச்சயம் எமது மலையகம் இன்னும் பல புதிய சாதனைகள் பல படைத்கும். இம் மலர் சிறப்பாக வெளிவரவும், எமது தமிழ் சாகித்திய விழா வீறுநடை போட்டுவர அல்லும், பகலும் அயராது பாடுபட்ட அனைவருக்கும் எனது உளம் கனிந்த பாராட்டையும் நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

"வளர்க தமிழ் வாழ்க அதன் பணிகள்"

**எஸ். அருள்சாமி**
**அமைச்சர்**

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண கைத்தொழில், விளையாட்டு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய அபிவிருத்தி, மகளிர் விவகார, இந்து கலாசார அலுவல்கள் மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சின் ஊடாக வருடாந்தம் நடாத்தப்படும் தமிழ் சாகித்திய விழா இம்முறையும் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கான ஆசிச் செய்தியினை வழங்க வாய்ப்பு கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பிரபல்யமிக்க தமிழ் இலக்கிய கலை கலாசார நிகழ்வுகளை வழங்கி இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்ச்சியடையச் செய்வதன் பொருட்டு இவ் விழா உறுதுணையாகவிருப்பது அதற்கான காரணமாகும்.

ஓர் இனத்தின் கலாசாரம் என்பது தொன்று தொட்டு ஓர் இனத்திற்குரிய தேசிய, சமயம், கல்வி, கலை கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், நடத்தை போன்ற எல்லா விடயங்களினதும் கலவையாகும். எல்லா இனங்களுக்கும் அவர்களுக்கே உரிய பெருமை வாய்ந்த சரித்திர முக்கியத்துவமும் கலாசாரமும் உண்டு. ஒவ்வொரு குடிமகனுக்கும் தமது கலாசாரத்தை பற்றி பெருமையடைய வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இனத்திற்கும் ஆடம்பரத்துடன் நினைவுகூறக் கூடிய வீரர்கள், நூல்கள், கலாசார மற்றும் சமய ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மட்டு மன்றி கலைகள், தேசிய போட்டி நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகள் பல உள்ளன. இவற்றை ஒரு போதும் பணத்தால் மதிப்பிட முடியாது என்பதுடன் அவற்றை மனதை விட்டு அகற்றி விடவும் முடியாது.

சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் தொடர்பு ஆரம்பத்திலிருந்தே இருந்ததென்பதற்கு வரலாற்று சான்றுகள் பல உள்ளன. முற் காலத்தில் சிங்கள இலக்கியவாதிகள், தமிழ் இலக்கியம் தொடர்பான சிறப்பான புரிந்துணர்வுடன் இருந்தமை அனுராதபுர யுகத்திலிருந்து கண்டி யுகம் வரை பல நூல்களினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சாகித்திய விழாவானது எம் தேசத்தின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை மேலும் வளர்க்கவும், தமிழ் இலக்கியத்தைச் சார்ந்த கலை கலாசார மற்றும் சமய ரீதியிலான விழுமியங்களை இனங் காணவும் கிடைத்த ஒரு பாரிய சந்தர்ப்பமாகையால் இவ் விழா எல்லா விதத்திலும் வெற்றிகரமாக அமையப் பிரார்த்திக்கின்றேன்.

**R.M.C.B. ரத்நாயக்க.பா.உ.**
**கால்நடை அபிவிருத்தி அமைச்சர்**

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண சபையின் முதலாவது சாகித்திய விழாவை நாம் நடாத்தி 12 ஆண்டுகள் நிறைவடைகின்ற இவ்வேளையில் கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி இவ்வமைச்சை பொறுப்பேற்று 4வது சாகித்திய விழாவை நடத்துகின்றார். இவ்விழா எல்லா வளங்களும், நலங்களும் பெற்று சிறப்பாக திகழ வேண்டும் என்று மனமாற வாழ்த்துகிறேன்.

இன்று உலகில் எல்லா இனங்களும் தமது பாரம்பரியங்களையும், கலாசார விழுமியங்களையும் போற்றி பேணி பாதுகாத்து வருகின்றது. அவ்வகையில் எமது சமூகம் இந்நாட்டின் ஒரு தனித் தேசிய இனம் என்ற வகையில் எமது கலை, கலாசார பாரம்பரியங்களை வெளிக்கொணர்ந்து, மொழிக்கும், இலக்கியத்திற்கும் மெருகூட்டுபவர்களை கௌரவிப்பது சிறப்பம்சமாகும். இன்று மேற்குலகிலும், அமெரிக்க நாடுகளிலும் எமது கருப்பின சகோதரர்கள் தமது பழைய பண்பாடுகளை மேலுயர்த்தி உலகறிய செய்யும் வகையில் செயற்படுவதை பார்க்கின்றபோது நாம் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டி உள்ளதை உணர்கின்றேன்.

உலகில் பல்வேறு பகுதியில் வாழ்கின்ற இந்திய வம்சாவழியினர் தமது பொருளாதார மேம்பாட்டினால் பல்வேறு மாநாடுகளை நடத்துவதைக் காண்கின்றோம். ஆனால் எமது மலையகத்திற்கென்று எவரும் எதுவுமே செய்வதில்லை.

எனவே இவ்வாறான விழாக்களை சர்வதேச ரீதியில் இணைய தளங்களின் மூலமாக அரங்கேற்ற வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் எமக்கு எல்லாவற்றையும் தர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**வீ.புத்திரசிகாமணி ஜே.பி., பா.உ.**
**நீதி சட்ட மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்**

வாழ்த்துச் செய்தி



I am happy that the Tamil Sahithiya Festival would be celebrated on 18-19 October 2008. The Festival is an important opportunity to showcase the best in Sri Lankan Tamil Iyal, Isai, Natakam through cultural events and exhibitions to bring out the rich cultural diversity and literary traditions of the language.

It is also noteworthy that scholars and writers who have contributed to the cause of Tamil art, literature and upliftment of the people would be accorded recognition for their yeoman service at the Sahitiya Award Ceremony.

I take great pleasure in wishing the programme a success and congratulate all those associated with this endeavor.

**ALOK PRASAD**
**High Commissioner of India to Sri Lanka**

# வாழ்த்துச் செய்தி



ஆலம் விதை சிறியது. மிக மிகச் சிறியது. அவ் வித்து வளர்ச்சி பெற்று பூரண விருட்சமாகி விட்டால் அதன் பிரமாண்டமான தோற்றம் எம்மை திகைக்க வைக்கிறது. அதன் பயனும் அளவிடற்கரியது. அதே போல் மலையகத்தவர்களின் உள்ளத்தில் இது போன்ற சிறு சிந்தனைகள் தூண்டப்பட்டு விட்டால், ஒளியேற்றப்பட்டு விட்டால் அதன் பலனை இவ் வையகம் முழுவதுமே ஆனந்தமாக அனுபவிக்கும்.

நுவரெலியாவில் நடைபெறும் சாகித்திய விழா சிறப்பாக நடைபெறுவதற்கும் அது தொடர்பாக வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கும் நல் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**ஜேம்ஸ் எட்வின்**
**இந்திய உதவித் தூதுவர்**
**கண்டி.**

# வாழ்த்துச் செய்தி



மலையக சாகித்திய விழா நுவரெலியாவில் நடைபெறுவதையொட்டி முதல் பிரஜை என்ற வகையில் பெருமையடைகின்றேன். இந்த சாகித்திய விழாவிற்கு நுவரெலியா வரும் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

தமிழ் சாகித்திய விழா மூலம் தமிழர்களது கலை கலாசாரம் வளர வாழ்த்துகின்றேன்.

இந்த விழாவினை நுவரெலியாவில் நடத்தத் தீர்மானித்தமைக்காக கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமிக்கு வாழ்த்துக்களையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சந்தனலால் கருணாரத்ன**
**நகர பிதா - நுவரெலியா**

# வாழ்த்துச் செய்தி



தமிழர்களின் கலை கலாசாரம் என்பது அவர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகும். எமது மூதாதையர்கள் இந்த கலாசாரத்தை மிகவும் சிறப்பாகப் பேணி பாதுகாத்து வந்ததுள்ளனர். ஆனால் இன்று எமது இளைய தலைமுறையினர் அவற்றை மறந்து செயல்படுவது மிகவும் மனவருத்தத்திற்குரிய ஒன்றாகும். எனவே இவ்வாறான விழாக்கள் மூலம் எமது பாரம்பரிய கலை கலாச்சாரங்களை பாதுகாக்க மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்கள் மேற்கொள்ளும் இந்த முயற்சியை பாராட்டும் அதேவேளை விழா வெற்றி பெற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

**கிருஸ்ணசாமி சந்திரசேகரன்**
**பிரதி நகர முதல்வர்**
**மாநகர சபை**
**நுவரெலியா.**

# வாழ்த்துச் செய்தி



வருடந்தோறும் மத்திய மாகாணத்தில் நடைபெறும் சாகித்திய விழா சமூகத்தில் சிறந்த சேவையாற்றும் முன்னோடிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்குவதும் அவர்களை ஊக்குவிப்பதும் பாடசாலை பிள்ளைகள் மற்றும் தோட்டப்புற கூத்துக்களை ஊக்குவிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இந்த சாகித்திய விழா என்பது வருடந்தோறும் மாகாண சபையில் நிதி ஒதுக்கப்பட்டு மலையக மக்களின் படைப்புகளையும், எழுத்தாளர்களின் படைப்புகளையும் ஊக்குவிக்கும் நோக்கம் இதன் மூலம் ஈடேறுகின்றது.

கடந்த காலங்களில் எவ்வித அரசியல் தொழிற்சங்க பேதமற்று நான் அமைச்சராக இருந்த காலத்தில் செய்யகூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதை தொடர்ந்து அதே வழியில் செய்ய இன்றைய அரசை வேண்டுகின்றேன். மேலும் விழா வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

**தேசமான்ய**
**வி. இராதாகிருஷ்ணன்**
**மத்திய மாகாணசபை**

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண சபையினால் நடாத்தப்பட்டு வரும் வருடாந்த தமிழ் சாகித்திய விழாக்களின் பயனாக மாகாணத்துக்குள் மாத்திரம் அல்லாது முழுதீவகத்திலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமிழ் எழுச்சியும் தமிழ் ஆர்வமும் ஏற்படுகிறது என்றால் அது மிகையாகாது. கலை, கலாசாரம், பாரம்பரியங்கள் போன்றவைகளுக்கு பெயர் பெற்ற தமிழினம் தமது சிறப்புக்களை மீட்டிப்பார்க்கும் ஒரு விழாவாக சாகித்திய விழா நடைபெறுகிறது.

கலைஞர்களும், கல்விமான்களும், எழுத்தாளர்களும், அறிஞர்களும் கௌரவிக்கப்பட்டு தமிழ் வாழ, தலைத்தோங்க வழிகோலும் இத்தமிழ் சாகித்திய விழா இனிதே நடைபெற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**துரை மதியுகராஜா**
**மத்திய மாகாண சபை உறுப்பினர்**
**உப தலைவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்**
**மேலவை உறுப்பினர் பேராதனை பல்கலைக்கழகம்**

# வாழ்த்துச் செய்தி



தமிழ் சாகித்திய விழா மலையக தமிழரின் எழுச்சிக்கு வழிவகுக்கும்

மத்திய மாகாணத்தில் இயற்கை எழில் நிறைந்து இனிய தமிழ் மணம் கமழும் நுவரெலியா மாநகரில் நடைபெறும் சாகித்திய நிகழ்வானது எனது மனதிற்கு இதமானதே. இந்த வகையில் மூவின மக்கள் இணைந்து வாழ்கின்ற இந்த மலையக பிரதேசத்தின் தமிழரின் கலை கலாசாரம் மறைந்து விடாது பேணிக்காப்பதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும். மேலும் இந்துக்களால் தீயசக்திகளை அழித்து வெற்றி பெறும் முப்பெரும் தேவியர்களுக்கும் விழாவெடுக்கும் இக் காலப்பகுதியில் இச் சாகித்திய விழாவை நடாத்துவது கூட எமது சமூகத்தில் நிகழும் தீய சக்திகளை அழித்து உய்வுபெற உதவும் என்பதனை கூறிக்கொள்கின்றேன். எமது சிற்றிலக்கியமாகிய இராமாயணத்தில் இடம்பெறும் நூரலை மாநகரத்தில் இச் சாகித்திய விழா நடைபெறுவது தமிழர்களாகிய நாம் பெருமைப்படுவதுடன் எமது இனத்தின் தனித்துவத்தினையும் எடுத்து காட்டுவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக நாம் கொள்ளலாம்.

மலைகளை அரனாக கொண்டு காணப்படும் மலையக பிரதேசத்தில் கலைகளும் பாரம்பரியங்களும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக மறைந்தும், மருவியும் வருவது கண்கூடு. இருப்பினும் இளம் சமூகத்தினர் தமது பாராம்பரியங்களை கட்டிகாக்கவும் ஏனைய சமூகத்தவர் எமது சமூக பாராம்பரிய அம்சங்களை காணவும் எடுத்துரைக்கவும் அருமையான சந்தர்ப்பம் இதுவன்றி வேறில்லை எனக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

மேலும் எமது சமூகத்தின் கலை, கலாசார பாரம்பரிய அம்சங்கள் இளம் சமூதாயத்தினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஓர் அம்சமாகவும் அழிந்து வரும் பாரம்பரிய அம்சங்களை கட்டிக்காக்கும் ஒரு கூடமாகவும் ஏனைய சமூகத்திற்கு எமது கலாசார பாரம்பரிய அம்சங்களை எடுத்துரைக்கும் ஓர் நிகழ்வாகவும் எமது சான்றோர்களின் இலக்கிய பொக்கிஷங்களை அடுத்த தலை முறையினருக்கு கையளிக்கும் ஒரு செயற்பாடாக இது திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை. எனவே இச் சாகித்திய விழா முடங்கிக் கிடக்கும் எமது கலை கலாசார பாரம்பரியங்களை எழுச்சிபெற செய்யும் நிகழ்வாக அமையும் என்பதை கூறிக் கொள்வதில் பெருமை கொள்கின்றேன்.

விழா சிறப்படைய வாழ்த்துக்கள்

**பி. எம் நடராஜபிள்ளை**
**ம. மா. சபை உறுப்பினர்**
**மலையக தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர்**

# வாழ்த்துச் செய்தி



வருடம் தோறும் மத்திய மாகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்டுவரும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா இம்முறையும் அக்டோபர் 18,19ம் திகதிகளில் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழின் பெருமையையும் தமிழர்களின் பண்பாடுகளையும் அவர்தம் பாரம்பரியங்களின் சிறப்புக்களையும் உலகிற்கு உணர்த்த தமிழ் சாகித்திய விழாக்கள் வழிகோள்கின்றன. இவ்வகையில் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் தமிழ் சாகித்திய விழா இதற்கு மேலும் மெருகூட்டி எமது சிறப்புக்களை மிளிரச் செய்வதில் பெரும் பங்களிப்பை செய்து வருவதையிட்டு தமிழினம் பெருமை அடைகின்றது.

ஆகவே இம்முறை நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா முன்னைய ஆண்டுகளை விடவும் மேலும் சிறப்பாகவும் அர்த்தபுஸ்டி உள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் இனிதே நடைபெற எனது உளமார்ந்த நல் வாழ்த்துக்களை சாகித்திய விழா ஏற்பாட்டுக் குழுவிற்கும் அதனை வழிநடாத்திச் செல்லும் கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**தேசமான்ய கே.பி.கோவிந்தராஜா (ஜே.பி.)**
**மத்திய மாகாண சபை உறுப்பினர்**
**ஆலோசகர் - கால்நடை அபிவிருத்தி அமைச்சு**
**அமைப்பாளர் - ஸ்ரீ.ல.சு.க.(கண்டி மாவட்டம்)**
**தலைவர் - ஸ்ரீ.ல.சு.க. (தோ.ப.) (கண்டி மாவட்டம்)**

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலருக்கு எனது செய்தியொன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சாகித்தியம் என்பது சமூகத்தின் பண்பாடுகளை பிரதிபலிக்கும் படைப்புக்களாகும். மனிதகுல வாழ்வியல் வரலாற்றை இன்றும் உறுதிசெய்து கொண்டிருப்பது இலக்கிய படைப்புக்களே. தமிழ் சமூக வரலாறு கூட சங்ககாலம் தொடங்கிய இலக்கிய படைப்புக்களை ஆதாரமாகக் கொண்டே எடுத்துச் சொல்லப்படுவதோடு இன்றைய எமது வாழ்க்கைக்கூட இன்றைய இலக்கிய படைப்பாளர்களின் பதிவுகளைக் கொண்டே நாளை வரலாறாக ஆவணப்படுத்தப்படுகின்றது.

அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் இரண்டறக்கலந்த தொடர்பும் இருந்தே வந்துள்ளது. மன்னர் காலத்தில் இருந்தே அவைப்புலவர்களும் படைப்பாளிகளும் அரசியலின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளனர். அந்த வகையில் அரசு சார் அமைச்சு என்ற மத்திய மாகாண கல்வி கலாசார அமைச்சு சாகித்திய விழாவினை கொண்டாடுவது வரவேற்கக்கூடியதே.

மலையக படைப்பாளிகளை பொறுத்தவரையில் பெருமளவிலானோர் தமது படைப்புக்களை வெளிக் கொணர்வதில் பாரிய நிதிப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர். இந்த தடைகளையும் தாண்டி பலர் தமது படைப்புக்களை வெளிக்கொண்டு வருகின்றனர்.

சாகித்திய பரிசுகள் அறிவிக்கின்ற போது தவிர்க்க முடியாதவகையில் படைப்புக்களை எப்படியேனும் வெளிக்கொணரும் படைப்பாளிகள் மீண்டும் மீண்டும் கௌரவம் பெறும் அதே வேளை பரிசுகள் வேண்டாம் தமது படைப்புக்களையாவது வெளிக்கொணர முடியாதா? என்ற ஏக்கத்தோடு பல படைப்பாளிகள் இருப்பதை பார்க்கக்கூடியதாகவுள்ளது.

எனவே படைப்புக்களை தந்த படைப்பாளிகளை தொடர்ந்தும் கௌரவிப்பதற்கு மேலாக புதிய படைப்பாளிகளை வெளிக்கொணர்வதற்கான களமாகவும் சாகித்திய விழாக்கள் அமைய வேண்டும் எனும் வேண்டுகோளை முன்வைக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் என நினைக்கிறேன். அவ்வாறு இல்லாது போனால் ஒரு சில படைப்புகளும் ஒரு சில படைப்பாளர்களும் மாத்திரம் நாளைய வரலாறுகளாகிவிடும் திரிபு நிலை வந்துவிடக் கூடும்.

இனிவரும் சாகித்திய விழாக்கள் புதிய படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களது படைப்புக்களையும் அறிமுகம் செய்யும் விழாவாக அமையும் என எதிர்பார்த்து விழாவுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ப.திகாம்பரம்**
**மத்திய மாகாண சபை உறுப்பினர்**
**தலைவர் - தொழிலாளர் தேசிய சங்கம்**

# வாழ்த்துச் செய்தி



தமிழ் மக்களின் கலை, கலாசார மற்றும் இலக்கியத் துறைகளின் அபிவிருத்தியின் பொருட்டு பணி புரிந்த கலைஞர்களை கௌரவித்து அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவும், பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்கள் அழிந்து விடாது பாதுகாப்பதற்காகவும், அவர்களை கௌரவித்து விருது மற்றும் சான்றிதழ் வழங்குவதற்காகவும் 2008 ஒக்டோபர் மாதம் 18ம், 19ம் திகதிகளில் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் (நகர மண்டபம்) மத்திய மாகாண சாகித்திய விழா நடைபெறுகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களை எதிர்கால சந்ததியினர் கண்டு களிக்க சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு சாகித்திய விழாவோடு தொடர்புடையதாக பிரதேச பாடசாலை மாணவர்களையும் இணைத்துக்கொண்டு கலாசார கண்காட்சியொன்றினையும் நடாத்த வாய்ப்பு கிடைத்தமையை பெரும் பாக்கிமாக கருதுகின்றேன்.

இதன் பொருட்டு உரிய வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கிய எனது கௌரவ அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்வதோடு விழா நிகழ்வுகள் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**ஷிராணி வீரகோன்.**
**செயலாளர்.**
**கைத்தொழில் மற்றும் இந்து கலாசார அமைச்சு,**
**மத்திய மாகாணம்.**

# வாழ்த்துச் செய்தி



ஒரு சமுதாயத்தின் கலை கலாசார இலக்கிய பண்பாட்டு விழுமியங்களை தொடர்ந்தும் பாதுகாத்து அதற்குப் புத்துயிர் ஊட்டி அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டே சாகித்திய விழா மத்திய மாகாணத்தில் நடாத்தப்படுகின்றது.

பெருந்தோட்டங்களை அதிகமாகக் கொண்ட மலையக மக்கள் செறிந்து வாழும் மத்திய மாகாணத்தில் தமிழ் மக்களின் கலை கலாசார பாரம்பரியங்களை பாதுகாத்து வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மத்திய மாகாணத்தில் தமிழ் கல்வி, இந்து கலாசார அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்கள் மிகச் சிறப்பாகவும், கோலாகலமாவும், கருத்துச் செறிந்த வகையிலும் சாகித்திய விழாக்களை நடத்தி வருவது போற்றுதலுக்குரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் பொருள் பொதிந்த புதிய தலைப்பிலும், சிந்தனை நோக்கிலும் இச்சாகித்திய விழாவினை அமைத்து நடத்தி வருவது பாராட்டிற்குரியது. முதலாவது நுவரெலியாவில் "புதிய சிந்தனை புதிய மலையகம்", இரண்டாவது கண்டியில் "புறப்படு மலையகமே புதுயுகம் நோக்கி", மூன்றாவது ஹட்டனில் "விழித்தெழு மலையகமே விடுதலை தொலைவில் இல்லை" என்ற அரிய பொருள் பொதிந்த கருப்பொருளைக் கொண்டு மிகச் சிறப்பாக சாகித்திய விழா நடாத்தப்பட்டது.

இவ்வாண்டு சாகித்திய விழா "கல்வியால் மடமையை அழிப்போம்" என்ற தலைப்பில் மீண்டும் நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளமையை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். இச்சாகித்திய விழா தொடர்பாக வெளியிடும் சாகித்திய விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன். கண்காட்சிகள், சாதனையாளருக்கான விருது வழங்கல் எனபவையும் இவ்விழாவில் இடம் பெறவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

சமுதாயம் ஒன்று முன்னேறுவதற்கு கல்வியே அடித்தளமிடுகின்றது. கல்வியால் சிறந்த சமூகம் ஒன்று உருவாகும் போது கலை, கலாசாரம், பண்பாடு என்பவை கூடவே வளர்ந்து விடும். எனவே மலையக மக்களின் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற அரிய நோக்குடன் மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்கள் ஒழுங்கு செய்துள்ள இச்சாகித்திய விழா மிகச் சிறப்பாக நடைபெறவும், சாகித்திய விழாவின் நோக்கத்திற்கமைய மலையக மக்களின் வாழ்வு, கல்வி, கலை கலாசாரத்துறைகள் இன்னும் துரிதமாக மேம்பாடு அடையவும் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**
**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**248 காலி வீதி**
**கொழும்பு-4**

# வாழ்த்துச் செய்தி



"கல்வியால் உயர்வடைவோம்"

கடந்த நான்கு ஆண்டு காலமாக வெகு சிறப்பாகவும், அனைவரும் மெச்சும் விதத்தில் எமது கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களின் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட இச் சாகித்திய விழா இவ்வாண்டும் எமது பாரம்பரியங்களையும், கலை கலாசாரங்களையும் கட்டிப் பேணி வளர்க்கும் நன் நிலமாக மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை 2008ம் ஆண்டுக்கான தமிழ் சாகித்திய விழா நடப்பது பெருமைக்கும், போற்றுதற்குரியதுமாகும். இவ்விழாவையொட்டி வெளியிடப்படும் சாகித்திய விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

மேலும் இவ்வாறான தமிழ் சாகித்திய விழாக்களை ஏற்பாடு செய்து தமிழரின் கலாசார பண்பாடுகள் அழிந்து விடாமல் பேணிப்பாதுகாப்பது நாம் தமிழருக்கு ஆற்றிவரும் பெரும் சேவைகளில் அளப்பரியது. இதன் பொருட்டு தமிழராகிய நாம் அனைவரும் பெருமிதம் அடைகின்றோம். இவ்வாறு தமிழுக்கு பெருமை சேர்க்கும் விழாக்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

அத்துடன் இவ்விழாவில் தமிழ் அன்னைக்கு தொண்டாற்றிவரும் படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு சாகித்திய விருது வழங்கி கௌரவிப்பது இவ்விழாவின் சிறப்பம்சமாகும்.

**க.புனிதவதி**
**கௌரவ அமைச்சரின் இணைப்புச் செயலாளர்**

# வாழ்த்துச் செய்தி



அழகிய நகராம் நுவரெலியா நகரினிலே செந்தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதை வலியுறுத்தும் ஒரு நிகழ்வாக இவ்வாண்டு சாகித்திய விழா கொண்டாடப்படுவதையிட்டும், விழாவிலே வெளியிடப்படும் சாகித்திய மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தன் மேனியில் ஐம்பெரும் காப்பியங்களை பூட்டித் திளைத்த தமிழ் அன்னைக்கு ஒரு விழா. இது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய ஒரு விடயம் என நான் கருதுகின்றேன். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றான் தீந்தமிழ் கவிஞன். பண்டைய புலவர்கள் கண்ணின் கருமணியாய் பேணிப்பாதுகாத்த தமிழ் இனிமையை, கலை நுட்பத்தை பாதுகாத்து வளர்க்க வேண்டியது தமிழ் மக்களின் தனிப் பெரும் கடமையல்லவா. அதற்கு இவ்வாறான விழாக்களே சான்றுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மொழியை வளர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எம்மவர் தமிழனுக்கு மட்டுமே உண்டு. இவ்வாண்டு எமது அமைச்சினால் கொண்டாடப்படும் சாகித்திய விழா சிறப்புறவும், இவ்விழாவில் வெளியிடப்படும் சாகித்திய விழா மலர் சிறப்புற அமையவும் எனது வாழ்த்துக்களை நல்குகின்றேன்.

**எம்.பத்மநாதன்**
**கௌரவ அமைச்சின் பிரத்தியேக செயலாளர்.**

# வாழ்த்துச் செய்தி



கல்வியால் உயர்வடைவோம் என்ற தொனிப்பொருளில் இவ்வாண்டு தமிழ் சாகித்திய விழாவானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ம்,19ம் திகதிகளில் நுவரெலியா சினிசிட்டா அரங்கில் நடைபெறவுள்ளது. கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்கள் தமிழ்க் கல்வி, இந்து கலாசார, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக பொறுப்பேற்று நடாத்தும் நான்காவது பிரமாண்டமான தமிழ் சாகித்திய விழா இதுவாகும்.

இந்நிகழ்வின் முக்கிய கருதுகோளாக மலையக பாரம்பரியங்கள், கலாசாரங்கள், பண்பாட்டு அம்சங்கள் போன்றவை எம் மூதாதையர்களோடு முடிந்து விடாமல் மேலும் எழுச்சி அடைவதற்கான வழியாகும்.

மலையத்தைப் பொறுத்தவரையில் இந்த நாண்கு ஆண்டு காலமாக கல்வித்துறையில் பாரிய திருப்பு முனையொன்றை ஏற்படுத்தி மலையக மாணவர்களை கல்வியின்பால் கடக்கச் செய்து கல்வித்துறையினை மலர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்ற மகத்தானவரும், பிரதிபலனை எதிர்பாராமல் பணியாற்றும் சமூக நல சேவகரான எங்கள் அமைச்சர் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் அவரது பணி மேலும் தொடர எனது உளமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு என்.ஆர்.இராமகிருஷ்ணன்**
**கௌரவ அமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி**
**அகில இலங்கை சமாதான நீதவான்**

## வாழ்த்துச் செய்தி



எழில் கொஞ்சும் மலையகத்தின் சகலரையும் கவரும் நுவரெலிய மாநகரிலே "கல்வியால் உயர்வோம்" என்ற தொனிப் பொருளில் இவ்வருட மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா கௌரவ மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சரின் தலைமையில் கொண்டாடப்படுவது சிறப்பம்சமாகும். மலையகத்தின் மலர்ச்சியைத் தீர்மானிப்பது கல்வியே. அதனையே தொடர்ந்து நடந்து வரும் சாகித்திய விழாக்கள் உறுதிப்படுத்துகின்றது. எமது மலையக சமூகத்தினர் ஏனையவர்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிப்பதற்கு இவ்விழா ஒரு சான்றாகும்.

அந்த வகையில் எமது மலையக சமூகத்தின் கலை, கலாசார, இலக்கிய, பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்புவதற்கு பெரிதும் உதவி வருவது மத்திய மாகாண சாகித்திய விழா என்பது சிறப்பம்சமாகும். அந்த வகையில் கௌரவ அமைச்சர் அவர்கள் சகல துறைகளிலும் பிரகாசிப்பவர்களை கௌரவப்படுத்துவதும் மலையக சமூகத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாகும். அது மட்டுமல்லாது இம்முறை கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது எதிர்கால மலையகத்தை வளர்ச்சிப் பாதை நோக்கி இட்டுச் செல்லும்.

**திரு. சரவணபவநாதன்**
**அமைச்சரின் உதவியாளர்**

# வாழ்த்துச் செய்தி



தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தமிழ் தாய்க்கு விழா எடுக்கப்படுகின்றது. எமது நாட்டிலும் பல்வேறு பிரதேசங்களில் தமிழ் தாய்க்கு விழா எடுக்கப்பட்டு வருவதைக் காணலாம். அவ்வகையிலே தமிழினத்தின் தனித்துவ அம்சங்களை புலப்படுத்துவதற்காக தமிழ் சாகித்திய விழா எமது மலையகத்தின் நுவரெலியா மாநகரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதையிட்டும், விழாவிலே வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மலையக மக்களின் வாழ்க்கையில் பிடிப்பினையும், பற்றுதலையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிப்பதில் கலைகளும், பண்பாட்டம்சங்களும் முக்கிய இடத்தைப் பெறுவதைக் காணலாம். இவ்வாறான சாகித்திய விழாக்களின் மூலம் மலையகத்தில் எழுச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களின் பேராசையாகும். அத்துடன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பலர் கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள்.

கலைஞர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள் மற்றும் பலர் இவ்விழாவிலே கௌரவிக்கப்படுவது போற்றத்தக்கதாகும்.

"தேன்மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்பதற்கிணங்க பலதரப்பட்ட விடயங்களைக் கொண்ட ஆக்கங்கள் சேர்க்கப்பட்ட இவ் விழா மலர் பட்டை தீட்டிய வைரத்தின் பொழிவுடன் மிளிரவும், 2008ம் ஆண்டு சாகித்திய விழா எல்லா வகையிலும் சிறப்புற்று அமைய வாழ்த்துகிறேன்.

"நான் காற்றைக் கைதுசெய்யப் பார்க்கின்றேன்
ஏனெனில் அதில் தமிழ் மணத்தை நுகர்வதற்காக"

எஸ்.நீதிராஜா
இணைப்புச் செயலாளர்
தமிழ் கல்விப் பிரிவு

## சிறப்பு மலர் பற்றி மலர் ஆசிரியர்



ஈழத் திருநாட்டிலே கிட்டத்தட்ட 200 வருட வரலாற்றினைக் கொண்ட தோட்டத் தொழிலாளர் எனக் கூறப்படும் இந்திய வம்சாவழி மக்களினதும், வர்த்தக நோக்கங்களுடன் இங்கு குடியேறிய இந்திய வம்சாவழி மக்களினதும் இலக்கியமே மலையக தமிழ் இலக்கியமாகும்.

மலையக தமிழ் இலக்கியத்திற்கு மகுடம் வைப்பதாகவே மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா நடைபெற்று வருகின்றது. இவ்வரலாற்றுடன் கல்வித்துறை சார்ந்த கட்டுரைகளோடு சாகித்திய விழாவிலே சாகித்திய விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டு வருகிறது. இம் மலரினை தொகுத்து வெளியிடும் பொறுப்பினை நம்பிக்கையோடு கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி மீண்டும் ஒருமுறை என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

மலையகம் தொடர்பான கட்டுரைகளோடு கல்வித்துறைக்கு ஏற்ற கட்டுரைகளோடு இம்முறை இம்மலர் வெளியிடப்படுகிறது. இந்த மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய அனைத்து படைப்பாளர்களுக்கும், வாழ்த்துச் செய்திகளைத் தந்த மாண்புமிகு சனாதிபதி, பிரதமர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு நன்றிகள் பல உரித்தாகட்டும்.

இம்மலரை சிறப்பாக வெளியிட அனைத்து ஊக்கமளித்த அமைச்சின் செயலாளர் சிராணி வீரகோன், பிரத்தியேக செயலாளர் எம்.பத்மநாதன், இணைப்புச் செயலாளர் எஸ்.நீதிராஜா, அமைச்சின் உத்தியோகத்தர்கள், அச்சகத்தார் ஆகியோருக்கும் நன்றிகள்.

இம்மலரில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகளினதும், தரவுகளுக்கும் அந்தந்த ஆக்கங்களை எழுதியவர்களே பொறுப்பாளர்களாகும். இவ்விழாவிற்கான சுலோக தலைப்பினை வழங்கியும், ஆலோசனைகளை வழங்கியும் பரந்த மனதுடன் விட்டுக்கொடுப்புகளுடன் சேவையாற்றும் அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களுக்கு மீண்டும் நன்றிகள்.

சாகித்திய விழா நிகழ்வுகள் அன்றுடன் மறைந்து விடும். ஆனால் மலரின் ஆக்கங்கள் வரலாற்றினை பறை சாற்றி நிற்கும். எனவே ஆக்கங்களை தந்துதவியவர்களினது ஆக்கங்களை வாசித்து பயன்பெற வேண்டும். மலையகத்தில் வாசிப்புத் தன்மை குறைவடைந்துள்ளது. மலையகம் கல்வியில் முன்னேற வேண்டுமாயின் வாசிப்பு இன்றியமையாதது. எனவே ஆவலுடன் உங்கள் பரம்பரை பற்றி, வந்த சுவடுகளைப் பற்றி நிறைய வாசியுங்கள். இது எமது சமூக முன்னேற்றத்திற்கும் வழிசமைக்கும். சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கள்.

ஆர்.மகேஷ்வரன்



## ஓவியனின் சிந்தனைத் துளிகள்

கல்வித் துறையில் எமது மலையகம் அண்மைக்காலங்களில் முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைத்திருப்பதை நாமறிவோம்.

அதன் வேகத்தை அதிகரிக்கவும் ஊக்குவிக்கவும் பல்வேறு கோணங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதில் ஒன்றாக. இவ்வாண்டு மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு நடாத்தும் தமிழ் சாகித்திய விழா "கல்'வியால் உயர்வடைவோம்" எனும் மகுடவாசகத்தை தாங்கி கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

2012ம் ஆண்டு 500 மாணவர்களை மத்திய மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதே மத்திய மாகாண கல்வி அமைச்சின் இலக்காகும்.

இந்த இலக்கினை கருத்துப்படமாக, முகப்புப் படமாக தூரிகையினாலும், கணனியினாலும் வடித்துள்ளேன்.

இவ்விழா சிறப்புற உளமாற வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

சி.செல்லதுரை
அதிபர்
எஸ்கடேல் தமிழ் வித்தியாலயம் - கந்தப்பளை

# அமில மழையின் சூழலியற் தாக்கங்கள்

பேராசிரியர் வை. நந்தகுமார்,
பேராதனைப் பல்கலைக் கழகம்

அமில மழை பொழிதல் இன்று உலகின் பல பகுதிகளிலும் பெரும் அச்சுறுத்தலாக அமையப்பெற்று வருகின்றது. மின் உற்பத்தி நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும், உந்து ஊர்திகளிலும் எரிபொருட்கள் எரிவதால் உண்டாகும் மாசாக்கிகள் வளிமண்டலத்தில் மழை நீருடன் கலந்து, கந்தக மற்றும் நைட்ரிக் அமிலமழையைப் பொழிகின்றன. இந்த அமிலமழை, மீன் முதலிய நீர் வாழ் உயிரினங்களையும், பயிர்விளைச்சல்களையும், தாவரங்களையும், கட்டிடங்களையும் பாதிப்படையச் செய்கின்றன. மேலும் தாஜ்மஹால் போன்ற உலகின் தலை சிறந்த சின்னங்களும் இதனால் பாதிப்புக்குட்படுகின்றன. மக்களின் உடல் நலத்திற்கும் கேடு விளைவிக்கின்றது.

ஸ்டொக் ஹோமில் 1972 இல் இடம்பெற்ற மனிதச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஐ.நா.மகாநாட்டில் அமில மழையை ஒரு பன்னாட்டுச் சிக்கலாக சுவீடன் எழுப்பியது. சுவீடனின் கருத்தை முதலில் பல நாடுகள் முக்கியமாக மாசாக்கிகளை அதிகளவில் வெளியிடும் நாடுகள் ஏற்க மறுத்தன. எனினும், இன்று இது மாபெரும் உலகளாவிய சுற்றுப்புறச் சூழல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், அமிலமழை பற்றி பன்னாட்டளவில் பெருமளவில் தீவிர ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. சுற்றுப்புறச் சூழல் அமிலத்தன்மையடைவது குறித்து 1982 இல் ஸ்ட்டொக்ஹோமில் ஒரு தனி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் இதற்கு முன் கிடைத்திராத பெருமளவு அறிவியல் தகவல்கள் குறித்து ஆராயப்பட்டன.

ஐரோப்பாவின் சில பகுதிகளிலும், வட அமெரிக்காவிலும் அமில மழை பொழிதல் ஒரு சுற்றுப்புறச் சூழல் பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்தக் கண்டங்களில் 50 - 100 இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. புகை படிவ எரிபொருட்கள் எரிவதால் - முக்கியமாக மின்உற்பத்தி நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும், உந்து ஊர்திகளிலும் எரிபொருட்கள் எரிவதனால் உண்டாகும் மாசாக்கிகள் மழை நீருடன் கலந்து, கந்தக மற்றும் நைட்ரிக் அமிலமழையை பொழிவிக்கின்றன.

## அமிலமழையைத் தோற்றுவிக்கும் காரணிகள்:

மனிதனின் பல்வேறு செயற்பாடுகளட காரணமாக நைதரசனின் ஒட்சைட்டுக்களும் ($NO_x$), $SO_2$ $SO_3$ போன்ற கந்தகத்தின் ஒட்சைட்டுக்களும் வழமைக்கு மாறாக வளிமண்டலத்தில் திரட்சியடைந்து நீராவியுடனும் ஒட்சிசனுடனும் கலந்து pH=5 அல்லது 5 இலும் குறைவான அமிலத்தன்மையை உருவாக்குகின்றன. இவை புவியின் மேற்பரப்பினை மழை, பனி கலந்த மழை, மழைப்பனி, உறைபனி, புகார் முதலான படிவுவீழ்ச்சி வடிவங்களாக வந்தடைகின்றன. அமிலப்படிவானது எல்லாச் சூழல்களையும் பாதிப்பதனால் அது இன்று மிகப்பெரிய சூழல் அச்சுறுத்தலாக உள்ளது. மழை, மழைப்பனி, புகார் என்பவற்றுடன் கலந்த அமிலப்படிவானது புவிமேற்பரப்பில் ஈரத்தன்மையான வண்டலாகப் படிகின்றது. ஒரு நாட்டில் வளிக்கு செலுத்தப்படும் அசுத்த வாயுக்கள் அயல் நாட்டினையும் பாதிப்படையச்

செய்கின்றன. (உ+ம்) ஐக்கிய அமெரிக்காவின் மாசடைந்த வளி, கனடாவில் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அமிலமழையாகப் பெய்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

கந்தகவீரொட்சைட்டும் ($SO_2$), நைதரசனின் ஒட்சைட்டுக்களும் ($NO_x$) வளிமண்டலத்தில் சேர்ந்து, நீராவியுடனும் ஒட்சிசனுடனும் கலந்து அமிலத்தன்மையை தோற்றுவிக்கின்றன. அதாவது $H_2SO_4$ வையும் $HNO_3$ ஐயும் தோற்றுவிக்கின்றன. இவை எவ்வாறு இரசாயனத் தாக்கத்திற்கு உள்ளாகின்றன என்பதை பின்வரும் இரசாயனத் தாக்கங்கள் விளக்குகின்றன.

1. கந்தகவீரொட்சைட்டு நீராவியுடனும் ஒட்சிசனுடனும் தாக்கமுறுதல்.
   - $SO_2 + H_2O \rightarrow H_2SO_3$.
   - $H_2SO_3 + [O] \rightarrow H_2SO_4$
   - $SO_2 + O_2 \rightarrow SO_3 \rightarrow H_2SO_4$
   - $SO_3 + H_2O \rightarrow H_2SO_4$

2. அவ்வாறே நைதரசனின் ஒட்சைட்டுக்களும் நீராவியுடன் தாக்கமுற்று நைத்திரிக்கமிலமாக மாற்றமடைகின்றது.
   - $2NO + O_2 \rightarrow 2NO_2$
   - $NO_2 + H_2O \rightarrow HNO_3 + HNO_2$
   - $HNO_2 + [O] \rightarrow HNO_3$

உலகின் கைத்தொழில் நாடுகளில் கைத்தொழில்புரட்சிக்கு முன் இருந்ததை விட இப்பொழுது அதிக அளவில் அமிலமழைப் பொழிவு ஏற்படுகின்றது. கந்தகமும் நைட்ரஜன் கூட்டுப்பொருட்களும் இயற்கையாகவும் காற்றுடன் கலக்கின்றன. எந்த அளவிற்கு இவை காற்றுடன் கலக்கின்றன என திட்டவட்டமாகக் கூறமுடியாது. கந்தகவீரொட்சைட்டுகள் வடிவத்தில் ஆண்டுதோறும் 7.8 மில்லியன் முதல் 28.4 மில்லியன் வரையில் கந்தகமும், நைட்ரஜன் ஒக்ஸைட்டுக்களின் வடிவத்தில் ஆண்டுதோறும் 2 மில்லியன் முதல் 9 மில்லியன் வரையில் நைட்ரஜனும் வளிமண்டலத்தில் காற்றுடன் கலப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தின் அமிலத்தன்மைகளை அதிகரிப்படையச் செய்வதில் பின்வரும் செய்முறைகள் காரணிகளாகின்றன:

- புகை கக்குகின்ற தொழிற்சாலைகள், உயிர் சுவட்டெரிப்பொருட்கள் (நிலக்கரி, பெற்றோலியம்) எரிதல், மோட்டார் வாகனங்கள் என்பன எளிதாக வளிமண்டலத்தில் அமிலத்தன்மையைச் சேர்த்துவிடுகின்றன.

- நிலக்கரி, பெற்றோலியம் ஆகிய எரிபொருட்களைப் பல்வேறு தேவைகளுக்கு எரிப்பதால், காபனீரொட்சைட்டும் நைட்ரஜன் ஒக்ஸைட்டும் வளிமண்டலத்தில் சேர்கின்றன.

- மின்சக்தி உற்பத்திக்காக அதிகளவில் உயிர் சுவட்டுஎரிபொருட்கள் எரியூட்டப்படுகின்றன. இதனால் 7% $SO_2$ உம் $NO_2$ உம் வளியைச் சென்றடைகின்றன. 400 இறாத்தல் நிலக்கரி எரியூட்டப்படும் போது, 12 இறாத்தல் காபனீரொட்சைட்டும், நைத்திரிக் ஒட்சைட்டும் வளிமண்டலத்தில் சேர்கின்றன எனக் கணித்துள்ளனர். வாகனங்கள் நாளாந்தம் கக்குகின்ற பெற்றோலிய

எரிபொருள்களினால் வளிமண்டலத்தில் 40% மான $NO_2$ சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

- தொழிற்சாலைகளிலிருந்து உருவாகும் அமிலத் துகள்களாலும் அவை வளிமண்டலத்தில் சேர்வதனாலும் அமிலத்தன்மை உருவாகின்றது.

- வளிமண்டலத்தில் அமிலமழைத் தோற்றத்திற்குக் காரணமான நைதரசனை அதிகரிப்பதில் விவசாயத்திற்கு உதவுகின்ற நைதரசன் உரம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் உபயோகத்தினால் வளிமண்டலத்தில் வருடாவருடம் 0.25மூ நைதரசன் ஒட்சைட்டு சேரக்கப்படுகின்றன.

மனிதன் வெளியேற்றுகின்ற மாசுப்பொருட்களில் 60% மானது நிலக்கரியை எரிப்பதனாலும், 30% மான மாசுக்கள் தொழிற்சாலைகளினாலும், மீதமுள்ள 10% மாசுக்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகள் மூலமும் வெளியிடப்படுகின்றன. ஐரோப்பிய பொருளாதார ஒன்றியத்து நாடுகளின் வளிமாசடைதலின் 75% மானவை மின்உற்பத்தி நிலையங்களினாலும், தொழிற்சாலைகளினாலும், எரிபொருள் எரிப்பதானாலும் உருவாகின்றது. புகைபடிவ எரிபொருள் எரிவதனால் ஆண்டுதோறும் சுமார் 2 கோடி தொன் நைட்ரஜன் வளிமண்டலத்திற்கு வெளியிடப்படுகின்றது.

இந்த வாயுக்கள் வளிமண்டலத்தில் எவ்வளவு காலம் தேங்கி நிற்கின்றனவோ அதே அளவிற்கு அவை அமிலமழையாக மாறுகின்ற வாய்ப்பும் அதிகரிக்கின்றது. அதேசமயம் இந்த தீயவாயுக்கள் வளிமண்டலத்தில் பல்லாயிரம் கீ.மீ தூரம் வரை பரந்து சென்று படிகின்றன.

### சாதாரண மழைநீரும், அமிலமழையும்

சாதாரன மழையின் போதும் மிகத் துல்லியமானளவு அமிலத்தன்மையுள்ளது. மழைநீரில் காணப்படும் அமிலத் தன்மையை pH அலகின் அடிப்படையில் அளவிடலாம். நீரின் pH அலகு அதிகமாக இருக்குமானால் அந்த மழையில் அமிலத்தன்மை குறைவாகக் காணப்படுவதாக் கருதப்படும். சாதாரன மழைநீரின் pH அளவு 5.6 ஆகும். மழைநீரில் மிகமிக அதிக அமிலத்தன்மை காணப்படுமேயானால், pH அளவு 0 ஆகும். மழைநீரில் அமிலத்தன்மை முற்றாக இல்லையென்றால் அதன் pH அளவு 14 ஆகும். pH பெருமானம் 7 ஆகக் காணப்பட்டால் அதனை இடைத்தரமானது எனலாம்.

அமெரிக்காவின் பேரோரிப் பிரதேசம், நியூஇங்கிலாந்துப் பிரதேசம், டென்மார்க் ஆகிய பகுதிகளின் மழைநீரில் pH அளவு 4.0 இலும் குறைவாகும். எனவே இப்பிரதேசங்கள் அமிலமழையால் அதிகம் பாதிப்படைகின்றன. கிழக்கு அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளில் பெய்கின்ற மழைநீரின் pH அளவு 4.0 - 4.5 ஆகும். கிழக்கு சீனாவின் மழைநீரின் pH அளவு 4.5 - 5.0 ஆகும். எனவே அப்பகுதிகள் மிக மோசமான அமிலமழையால் தாக்கப்படும் பிரதேசங்களாக உள்ளன.

## அமிலமழையினால் ஏற்படும் பாதிப்புக்கள்

### ஏரிகள், ஆறுகள் மற்றும் நீர் நிலகள் பாதிப்படைதல்

அமிலமழையினால் முதலில் பாதிக்கப்படுபவை ஏரிகளும், ஆறுகளுமாகும்.

ஸ்க்கெண்டிநேவியாவிலும், வடகிழக்கு அமெரிக்காவிலும், தென்கிழக்கு கனடாவிலும், தென்மேற்கு ஸ்க்கொட்லாந்திலும் நூற்றுக்கணக்கான ஏரிகள் அமிலத்தன்மை அடைந்துள்ளன. இந்தப் பகுதிகளின் மண்ணும், அடிப்பாறையும், கருங்கல், படிகக்கல் போன்ற கனியங்களினால் ஆனவை. எனவே இவை எளிதில் தின்னலுக்குட்படுவதில்லை. எனினும், பொழியும் அமிலத்தின் ஆற்றலை இழக்கச் செய்யும் ஆற்றல் இப்பாறைகளுக்கில்லை. ஆகவே, இப்பகுதிகளில் அமில மழைக்கு எதிரான பாதுகாப்பு இல்லை.

நீரில், லீற்றருக்கு 0.2 மில்லிகிராம் அளவு அலுமினியச் செறிவு இருந்தால் கூட, மீன்கள் இறந்து விடும். இதனால் சுவீடனில் உள்ள சில ஏரிகளில் மீன்கள் பெருமளவில் இறந்து போயிருக்கின்றன. இந்த மீன்கள் இறந்ததற்கு, அதிக அமிலத்தை தன்மையை விட அலுமினிய நஞ்சே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், நீரில் தாவரங்களுக்கு ஊட்டமளிக்கும் பொஸ்பேட்டுக்கள், அலுமினியத்துடன் இணைந்து விடுவதால் நீரிலுள்ள அலுமினியத்தின் அளவு பெருகுவதுடன், நீரியல் உயிர்களுக்குத் தேவையான அடிப்படை பொருட்களின் அளவு குறைவடைகின்றது. மேலும் நீரில் கூடுதலான அமிலம் சேரும்போது கட்மியம், துர்நாகம், ஈயம், பாதரசம் போன்ற மற்ற உலோகங்களும் அதிக அளவில் கரையும் தன்மையைப் பெறுகின்றன. இவற்றுள் பல நச்சுத்தன்மையுடையவை. இவற்றை நீர் வாழ் உயிரினங்கள் உணவாக உட்கொண்டால், அவை இறக்க நேரிடுகின்றன. மேலும் நீரின் அமிலத்தன்மையின் அதிகரிப்பால் மீன்களின் உணவான பிளாங்டனின் உற்பத்தியும் பாதிப்படைகின்றன.

## மண்ணில் ஏற்படும் பாதிப்புக்கள்

ஏரிகள், ஆறுகள், நீரோடைகள் ஆகியவற்றைவிட மண்ணுக்கு அதிக அளவில் அமிலத்தை எதிர்க்கும் ஆற்றல் இருக்கிறது. எனவே, ஓரளவிற்கு, உயிரியல் சூழல் எவ்வித பாதிப்பும் ஏற்படாமலேயே மண் அதிக அமிலத்தை ஏற்றுக்கொள்கிறது. எனினும், மண்ணின் வகையினையும், மண்ணின் அடியிலுள்ள பாறையின் வகையினையும், அதனை மனிதன் பயன்படுத்தும் முறையினையும் பொறுத்து மண்ணின் அமிலத்தன்மையின் பாதிப்புக்களை நோக்க முடிகிறது. மண்ணில் சுண்ணாம்புச்சத்து குறைவாக உள்ள நிலங்களும், பாதுகாப்பு பொருள்களின் செறிவு மிகக் குறைவாகவுள்ள மண் படைகளைக் கொண்ட நிலங்களும் மிக எளிதில் பாதிக்கப்படுகின்றன. ஸ்க்கெண்டிநேவியாவில் பெரும்பகுதி இவ்வாறு இருக்கின்றன.

## காடுகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

காடுகள், வெட்டுமர உற்பத்தி ஆகியவற்றின் மீதான அமிலத்தன்மையின் பாதிப்புக்கள் குறித்து 1970 களில் தீவிர ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அமிலமழையினால் நுண்ணுயிர்கள், வேதியியல், தாவரங்கள் ஆகியவற்றில் முக்கிய விளைவு ஏற்படுகின்றதென்றாலும், மரங்கள், தாவரங்கள் மீதான விளைவுகள் இன்னும் தெளிவாக அறியப்படவில்லை. நைட்ரஜன் படிவுகளினால் காடுகளுக்கான ஊட்டச்சத்துப் பொருட்கள் அதிகரிக்கக்கூடுமென விவாதிக்கப்பட்டாலும், 1950 - 1974 இல் தெற்கு சுவீடனில் இது பற்றி நடாத்திய ஆராய்ச்சிகள் இதனை உறுதிசெய்யவில்லை. மேற்கு ஜேர்மனியில், 1982 இல் காற்றின் மாசுக்கள் படிவதன் விளைவாக காடுகளுக்கு நோய் ஏற்பட்டு பாதிப்படைந்தமையை நோக்கவேண்டியுள்ளது.

இயற்கையாக உற்பத்தியாகும் அமிலம், கடும் மழை அல்லது குறைவான மழை, மிகுந்த குளிர் அல்லது கடும் வரட்சி போன்ற வெப்பநிலை மாறுபாடுகள், வளி மண்டலத்தில் அமிலம் படிதல் போன்ற பல காரணங்களாலும் இந்தக் காடுகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவை மண்ணில் அலுமினியத்தைப் படியச் செய்கின்றன. அந்த அலுமினியம் மண்ணில் கலந்து மரங்களின் நுண்ணிய வேர்களை சேதப்படுத்திவிடுகின்றது. அதனால் மரங்களை மக்கிடச்செய்யும் ஒருவித நோய் பீடிக்கின்றது. இந்த மரங்கள் இலேசான

காற்று வீசினாலும் சாய்ந்து விடுகின்றன. காற்று மண்டலத்தில் கந்தக ஒக்சைட் செறிவுகள் அதிகளவில் இருக்குமாயின் இலைகள் சேதமடைந்து மரத்தின் உற்பத்தித்திறன் குறைகிறது. மலைப்பகுதிகளில் அமில மூடுபனி பல நாட்கள் படிந்திருப்பதாலும் மரங்களுக்கு சேதம் உண்டாகின்றது.

அமிலமழையானது உயிரினங்களை அதிகளவில் பாதிக்கின்றது. அதனடிப்படையில் தாவரங்கள், விலங்குகள் என்பதனைக் கூறிக்கொள்ளலாம். காட்டுச்சூழலில் உள்ள தாவரங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன. தரையில் வாழும் தாவரங்கள், நீரில் வாழும் தாவரங்கள் என இரு பிரிவுகளும் தாக்கத்திற்குள்ளாகின்றன. 4.5 pH பெறுமானத்திற்குக் குறைவான அளவு நீரில் காணப்படுமாயின் அந்நீர் தாவரங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவே அமையும். அதேவேளையில் தரை, மற்றும் நீர்வாழ் உயிரினங்களும் பாதிப்படைகின்றன. அமிலத்தன்மையால் மாசாக்கப்பட்ட நீரைப் பருகுவதனால் பெருமளவிலான உயிரினங்கள் அழிவடைகின்ற நிலை தோன்றும்.

## மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

அமிலமழையின் காரணமாக பிற உயிரினங்கள் மட்டுமன்றி மனிதரின் உடல்நலத்திற்கும் அபாயம் நேரிடுகின்றது. கந்தகடையக்சைட்டும், நைதரசனொட்சைட்டும் மனித உடல்நலனுக்கு மிகவும் கெடுதலானவை. அமிலமழையினால் உருவாகின்ற அமிலத்தன்மை வாய்ந்த நீர் மனிதனுக்கு உகந்ததல்ல. உடல்நலத்திற்கு மறைமுகமாகவும் வேறுபல கெடுதல்கள் உண்டாகும். மண்ணிலிருந்து வெளிப்படும் ஈயம், தாமிரம், துத்தநாகம், காட்மியம் போன்றவற்றினால் அமிலத்தன்மை அதிகரிப்பதனாலும் இந்த விளைவுகள் ஏற்படும்.

குடிநீராகப் பயன்படுத்தப்படும் தரைக்கீழ் நீரிலும், ஆறுகள், நீரோடைகள் போன்ற பல நீர்நிலைகளிலும் அமிலம் கலந்துவிடுகின்றன. தாவரங்கள் இவற்றை உட்கொண்டு மனிதருக்கு ஆபத்து விளைவிக்கும். முக்கியமாக காட்மியத்தால் அமிலத்தன்மை அதிகமாகி மனிதனின் உணவுகளில் கலந்துவிடுகின்றன. செம்பு போன்றவற்றிலான நீர்க்குழாய்களை அமிலம் அரிப்பதால் குடிநீரில் அமிலம் அதிகமாகிவிடும். அபிவிருத்தியடைந்த நாடுகளில், பொது நீர்ப்பாசனப் பணிமானங்களின் வாயிலாகவே குடிநீர் பெரும்பாலும் வழங்கப்படுவதனால் அங்கு தக்க யுக்திகள் மூலம் இச்சிக்கலுக்கு முடிவு கண்டுள்ளார்கள். ஆனால் வளர்முக நாடுகளால் இச்சிக்கலுக்கு உரிய தீர்வினைக் காணமுடியவில்லை. இதனால் மனிதன் மீதான அமிலமழையின் தாக்கத்தினைக் குறைப்பதில் பல பலவீனமான கொள்கைகளைக் கொண்டதாகவே இந்நாடுகள் காணப்படுகின்றன.

## ஏனைய பாதிப்புக்கள்

பாலங்கள், கட்டிடங்கள், அணைக்கட்டுகள், தொழிற்சாதனங்கள், தரையடி

நீர்த்தேக்கங்கள், நீர்மின் உருளைகள், மின் மற்றும் தொலைச்செய்தித்தொடர்பு வட்டங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான பொருள்களின் அரிமானத்தை அமிலம் தீவிரப்படுத்துகிறது. வரலாற்றுச் சின்னங்கள், வரலாற்றுக் கட்டிடங்கள், சிற்பங்கள், அணிகலன்கள் மற்றும் பண்பாட்டுப் பொருட்கள் ஆகியவற்றையும் அமிலமழை சேதப்படுத்துகிறது. எதன்சிலுள்ள பார்த்தினான், ரோமில் உள்ள ரோஜான் பெருந்தூண்கள் போன்ற உலகின் அரிய பண்பாட்டுக் கருவூலங்களை அமிலமழை நாசப்படுத்தியிருக்கின்றது. கிராமப்புறங்களைவிட நகரப்புறங்களின் அரிமானம் 2 - 10 மடங்கு அதிகமாக இடம்பெறுகின்றது.

அமிலமழையின் தோற்றுவிக்கும் வாயுக்களின் தாக்கத்தினால் நகர்ப்புறங்களின் மேல் காணப்படும் வளிமண்டலப்பகுதி பெரிதும் காலைப் பொழுதினை விடவும் மாலை நேரமாகும்போது புகை மூடிய பிரதேசங்களாகக் காட்சியளிப்பதனை காணக்கூடியதாக உள்ளது. இதனைப் பின்வரும் படம் காட்டுகின்றது.

## பாதுகாப்புச் செயற்பாடுகள்

### சுண்ணாம்பின் அளவை அதிகரிப்பதன் மூலம்

ஏரிகளிலும் ஆறுகளிலும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் சுண்ணாம்பின் அளவை அதிகரிப்பதன் மூலம் அமிலமழையினால் விளையும் சேதத்தைக் குறைக்கலாம். அமிலத்தை நீக்குவதற்கு காரச்சோடா, சோடியம் காபனேற்று, சுண்ணாம்புக்கல், நீர்ச்சுண்ணாம்பு, டொலமைற் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம். இவற்றுள் சுண்ணாம்புக்கல்லும் நீர்ச் சுண்ணாம்பும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சுவீடனில் சுண்ணாம்பு தூவும் திட்டம் 1796 இல் குளிர்காலத்தில் தொடங்கியது. 1982 ற்குள் 1,500 ஏரிகளில் 1.5 கோடி டொலர் செலவில் சுண்ணாம்பு தூவப்பட்டது.

சுண்ணாம்பு தூவலால் அமிலத்தன்மையாதலின் சில நோய் அறிகுறிகள் நீக்கப்படுகின்றன. எனினும் முழுமையான தீர்வாகமுடியாது. பெரும்பான்மையான ஏரிகளிலும், ஓடும் நீரிலும் சுண்ணாம்பு தூவிவிட முடியாது. எனவே இதனை ஒரு இடைக்கால நடவடிக்கையாகவே கருதலாம்.

### வெளியேறும் மாசுப்பொருட்களின் அளவினைக் குறைத்தல்

வெளியேறும் மாசுப்பொருட்களின் அளவினை முதலிலே குறைப்பதே நிரந்தரமான தீர்வாக அமையமுடியும். நீர்நிலைகளையும் காடுகளையும் பாதுகாப்பதற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படல் வேண்டும். அரிமானத்தைத் தடுப்பதன் மூலமாகவும் பல கோடி டொலரை மிச்சப்படுத்த முடியும். மாசுப் பொருட்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு 13 ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளினால், ஆண்டு தோறும் அரிமானத்தால் ஏற்படும் 12 கோடி டொலர் இழப்பினைத் தவிர்க்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### கந்தகம் மிகக் குறைவாக இருக்கும் எரிபொருள்களைப் பயன்படுத்தல்

கந்தகம் மிகக் குறைவாக இருக்கும் எரிபொருள்களை பயன்படுத்துவது, மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு மிக எளிய வழியாகும். ஆனால், உலகில் இந்தவகை எரிபொருள்கள் மிகக் குறைவு. எனவே இந்த வழியை நெடுங்காலம் கையாள முடியாது. புகை வடிவ எரிபொருள்களை பயன்படுத்துவதும் எரியாற்றல் சிக்கன முறைகளைக் கையாள்வதும் மாற்று வழிகளாகும்.

எண்ணெய் எரிபொருள்களிலிருந்து கந்தகத்தை வெளியேற்றுவதற்கு ஒரு தொன்னுக்கு 20 - 40 டொலர் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு மெகாவோட் மணி எரியாற்றலுக்குமான உற்பத்திச் செலவில் 5 - 10 டொலர் கூடுதலாகும். மின் உற்பத்திச் செலவு 10 - 20 வீதம் அதிகமாகும். தொழில்களுக்கு ஒவ்வொரு தொன் எண்ணெய்க்கும் 40 - 85 டொலர் கூடுதல் செலவாகும்.

## மின் உற்பத்தி நிலையங்களில் எரிபொருள்களை எரிக்கும் முறையை மாற்றுவதன் மூலம்

மின்உற்பத்தி நிலையங்களில் எரிபொருள்களை எரிக்கும் முறையை மாற்றுவதன் மூலம் நைட்ரஜன் ஒக்சைட் வெளியாகும் அளவினைக் குறைக்கலாம். உள்ளெரி வெப்பத்தை 1500 பாகை செல்சியஸ்க்கும் கீழே குறைப்பது அல்லது அமிலமழையின் தீய விளைவுகள் ஏரிகளிலும் ஆறுகளிலும் தான் தெரியவந்தன. சுவீடனில் அமில விளைவினால் மீன்களுக்கு ஏற்பட்ட தீங்கு 2,500 ஏரிகளிலும் அமிலம் கலந்த நீர் 6,500 ஏரிகளிலும் காணப்பட்டன. தென் நோர்வேயிலுள்ள 5,000 ஏரிகளுள் 1,700 ஏரிகளில் எல்லா மீன்களும் இறந்துவிட்டன. மற்றும் 900 ஏரிகள் பெரிதும் பாதிப்படைந்தன. கனடாவில் அண்டாரியோவில் இதுவரை சோதிக்கப்பட்ட ஏரிகளுள் 20 சதவீத ஏரிகளில் அமிலம் கலந்துள்ளது அல்லது அதன் விளைவுகள் காணப்படுகின்றன. தென்மேற்கு குவபேக்கிலுள்ள 30 - 10 வீதம் ஏரிகளில் அமில விளைவுகள் ஓரளவு அல்லது பெரிதும் தென்படுகின்றன. கனடாவின் அட்லாண்டிக் மாநிலங்களில் கடந்த இருபது ஆண்டுகளில் பல ஏரிகளில் 10 - 30 மடங்கு அமிலம் கலந்துள்ளது.


## அமிலமழை பொழிவதை தடுப்பதற்கான முறைகள்

வளிமண்டலத்தில் சேர்கின்ற $SO_2$ வையும் $NO_2$ வையும் எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது சிக்கலான பிரச்சினையாகும். கந்தகவீரொட்சைட்டும் நைதரசன் ஒட்சைட்டும் எவ்வாறு அமிலமழையாக மாறுகின்றன என்பன குறித்து சரிவர விடை கிடைக்கவில்லை. எனினும் அமிலமழைக்குக் காரணமான $SO_2$, $NO_2$ என்பன வளியில் கலப்பதைக் கூடியவரை குறைக்க வேண்டும். இதற்குப் பல நாடுகளும் முயன்று வருகின்றன. ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அதிக புகையினை வெளியிடுகின்ற வாகனப் பயன்பாடுகளைக் குறைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அமிலமழையால் ஏற்படும் எதிர்விளைவுகளைக் குறைக்கவும் முயலவேண்டும். அமில மழையை எதிர்த்து தாக்குப்பிடிக்கக்கூடிய பயிர்கள், மரங்கள், மீன்கள் என்பவற்றைக் கண்டறியவும் வேண்டும் என வழிவகை கூறப்படுகின்றது. மற்றும் சூரியசக்தி, நீர்ச்சக்தி போன்ற மாற்றீட்டு எரிபொருள் முதல்களைக் கண்டுபிடித்து பயன்படுத்தவேண்டும். அதுமட்டுமன்றி உயிர்வாய்வு போன்ற மாற்றீட்டு எரிபொருள் முதல்களைக் கண்டுபிடித்து பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு நாடு தனக்குரிய சக்தி, சூழல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இன்னொரு அயல்நாடு இதன் விளைவாக மாசடைவிற்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. பூமி ஒரு இடத்தில் மாசடையும்போது அது படிப்படியாக புவியெங்கும் பரவிவிடக்கூடிய நிகழ்வாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையில் இத்தகைய பிரச்சினை இன்றும் நிகழ்ந்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்க வளிமண்டலத்தில் சேர்கின்ற $SO_2$, $NO_2$ வும் கனடாவில் அமிலமழையாகப் பொழிகின்றது. தேசியவிஞ்ஞானக்கழகம் வளிமண்டலத்தில்

## அமிலமழையால் ஏற்படுகின்ற சூழலில் தாக்கங்கள்



$SO_2$ வும் $NO_2$ வும் சேர்வதனைக் குறைக்கும் வரை இப்பிரச்சினைக்குத் தீர்வில்லை எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான விடயங்களோடு அமிலமழையினை ஏற்படுத்துகின்ற வாயுக்களான $SO_2$ வையும் $NO_2$ வையும் குறைப்பதற்கான தேசிய ரீதியிலான பல ஒப்பந்தங்களும் சட்டங்களும் காணப்படுகின்றன.

## தேசிய ரீதியிலான சட்டங்கள்

அமிலமழை வாயுக்களை கட்டுப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்ட பல தேசிய ரீதியிலான சட்டங்கள் காணப்படுகின்றன. அதனடிப்படையில் ஐக்கிய அமெரிக்காவில் ஞரகரச னழைஎனைந மற்றும் ளேைவாசழபநெ ழுஒைனைநள என்பதனைக் கட்டுப்படுத்துவதற்கென "தூய காற்றிற்கான பாதை" (Passage of the clean Air) Act of 1970 உருவாக்கப்பெற்றது. இவை கைத்தொழில் நடவடிக்கைகளால் வளிமண்டலத்தினை சென்றடைகின்ற வாயுக்களை அடிப்படையாக கொண்டதாகக் காணப்பட்டது.

அடுத்ததாக 1990 களில் Congress இனால் கொண்டுவரப்பட்ட சட்டத்தில் மனித நடவடிக்கைகளின் கட்டுப்பாடுகளால் இவ்வாயுக்களின் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதாக உள்ளது. இதன் முக்கிய குறிக்கோளாக புவியில் இருந்து வளிக்கு அனுப்பப்படுகின்ற 23.5 million tons அளவான சல்பர் ஒட்சைட்டினை 2010 ஆம் ஆண்டில் 16 million tons எனும் அளவாகக் குறைப்பதனையே கொண்டுள்ளது. அதேவேளையில் 7.5 million தொன்னாகக் காணப்படும் நைத்திரொட்சைட்டினை 2010 களில் 5 million தொன்னாகக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு காணப்பட்டது.

பொதுவாக இச்சட்டங்களை இயற்றும்போது பல கம்பனிகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து எதிர்ப்புக்களும் தோன்றுகின்றன. கனடாவானது அமில மழையினால் அதிகளவில் பாதிக்கப்படும் நாடாக உள்ளது. இங்கு சுமார் 2.3 million tons Sulfer dioxide ஏழு மாகாணங்களிலும் காணப்படுகின்றன. இங்கு இதனால் அதிகளவு தாக்கங்கள் ஏற்படுகின்றன.

## சர்வதேச உடன்படிக்கைகள்

அமிலமழையானது சர்வதேச எல்லைகளையும் தாக்குகின்றது. இதனால் சர்வதேச ரீதியில் பல பிரச்சினைகளும் தோன்றுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் $SO_2$, $NO_2$ வெளியேற்றத்தினால் அதிகளவானவகையில் கனடாவே பாதிப்புக்குள்ளாகியது. கிட்டத்தட்ட 50% மான பாதிப்புக்கள் இங்கு ஏற்பட்டன. மற்றும் பிரிட்டன், ஜேர்மனி, போலந்து, ரஷ்யா போன்ற நாடுகளில் வெளியிடப்படும் $SO_2$, $NO_2$ வினால் நோர்வே மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஊாைெ வின் ஏற்படும் வளிமண்டல மாசடைவானது ஜப்பானில் அமிலமழையாகத் தாக்குகின்றது. இவ்வாறான நிலைமைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சர்வதேச அமைப்புக்கள் பல தமது முயற்சிகளை மேற்கொண்டும், தற்போது மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

- 1988 ☛ வளி மாசாக்கி உடன்படிக்கை (Long Range Transboundary Air Pollution Agreenment.) அமெரிக்காவில் கைச்சாத்திடப்பட்டது. இதில் 24 ஏனைய நாடுகளும் கையொப்பமிட்டன.

- 1991 ☛ ஐக்கியஅமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகள் வளியின் தரம் உடன்படிக்கையில் (Air Quality) கைச்சாத்திட்டது. இதில் சக்தி உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றின் விளைவாக வெளிட்டப்படுகின்றன $SO_2$ மற்றும் $NO_2$ வினை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை உறுதிபூண்டது.

* 1994 ☛ ஒஸ்லோ, நோர்வே உள்ளிட்ட 12 ஐரோப்பிய நாடுகள் சல்பர் ஒட்சைட்டின் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

உலகளாவிய ரீதியில் நோக்குகின்றபோது இந்த உடன்படிக்கைகள் மற்றும் சட்டங்களால் முற்றுமுழுதான நன்மை கிடைக்காவிட்டாலும் கூட சிறிதளவிலேனும் குறித்த இலக்கினை அடைந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அதனடிப்படையில் 1980 தொடக்கம் 1994 வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பாவில் சல்பர் வெளியேற்றத்தில் 40% மான வீழ்வு ஏற்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் நோர்வேயில் 75% மாக இத்தன்மை காணப்பட்டது.

1980 களில் இருந்து ஐக்கிய அமெரிக்காவில் சராசரியான சல்பர் ஒட்சைட்டின் அளவானது 26 million ton இல் இருந்து 18.3 million தொன்னாகக் குறைவடைந்தது.

மேலே கூறப்பட்ட சட்டங்களும் ஒப்பந்தங்களும் அமிலமழையினைத் தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான வழிவகைகளைக் கொண்டமைந்த சட்ட ஏற்பாடுகளாகக் காணப்படுகின்றன. பொதுவாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இப்பிரச்சினையின் தார்ப்பரியம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் அமிலமழையின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்பது ஆராயக்கூடிய தொன்றாகும். தென்மேல் பிரதேச தொழிற்சாலைகளும் அளவிற்கு அதிகமாகிவிட்ட வாகனங்களும் வளிமண்டலத்தில் $SO_2$ உம் $NO_2$ வையும் சேர்த்துவிடுகின்றன. இலங்கையின் வாகனங்களின் எண்ணிக்கை வருடாவருடம் கூடிக்கொண்டே செல்கின்றது. இந்தியாவில் கோயம்புத்தூர் பகுதியில் விரைவாக அதிகரிக்கும் ஆலைகள் இலங்கையின் வளிமண்டலத்தில் அச்சுறுத்தலாகின்றன. எனவே இலங்கைக்கும் எதிர்காலத்தில் அமிலமழையைப் பெறுகின்ற துர்ப்பாக்கியமுள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு இந்நாடுகளின் அரசுகள் அவை தொடர்பான அக்கறையினை இப்பொழுதே செலுத்துமாக இருந்தால் எதிர்காலத்தில் இப் பிரச்சினையினை குறைத்துக் கொள்ளலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


1. Jonathan Covie, 2007, Climate Change Biological and Human Aspects, First Edition, UK: Cambridge University Press.

2. Jose. L. Lozan, Hartmut Grabi, Peter Hupter, Climate of the 21th century.

3. Sinha . P.C, 1998, Global warming. New Delhi : Anmol publications (pvt) LTD.

1. apn . gr . jp / en / Products / lore prts / 2003 / html.
2. news / mongabay . com / 2006 / 0828 - China html.
3. elmhurst . edu / chm / chembook / effects . html.
4. Library / thinkquest . org / effect html.
5. Science . howstuffworks . com / acid rain ht main.

# புலம்பெயர் இலக்கியத்தின் முன்னோடியாக மலையக வாய்மொழிப் பாடல்கள்

- கலாநிதி. வ. மகேஸ்வரன் -

"ஊரான ஊரிழந்தேன், ஒத்த பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே பெத்ததாயும் நாமறந்தேன்"

இது பிரபலமான மலையக வாய்மொழிப்பாடலொன்று. தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரினதும் சோகக் குரலாக இதனை அடையாளப்படுத்தலாம். ஒருவர் அல்லது ஒரு சமூகம் ஏதோவொரு காரணத்தால் தன் இருப்பை விட்டுப் புலம்பெயர்ந்தபோதும் புலம்பெயர் தேயங்களில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை முகங்கொள்ளும் போதும் இவ்வாறு தமது பண்டைய இருப்புபற்றிய நினைவும், சோகமும், தாம் புலம்பெயர்ந்த தேயத்தில் அனுபவிக்கும் இன்னலும் ஒருசேர இணைந்து துயரம் தோய்ந்த வாய்மொழியாகவோ, ஆக்க இலக்கியங்களாகவோ வெளிவருவதுண்டு.

புலம்பெயர் அனுபவங்கள் தமிழுக்குப் புதியனவல்ல. இன்று மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்ததோர் எழுதுகிற இலக்கியங்களைப் "புலம்பெயர் இலக்கியம்" என்று வரையறை செய்கின்றோம். ஆயின் இந்தப் புலம்பெயதல் அவலம் தமிழ்ச் சூழலில் பண்டைக் காலத்திலேயே நிகழ்ந்துவிட்டது என்பது தான் உண்மை. வீரயுகம் என்று பேசப்படுகின்ற சங்ககாலத்தில் போரினால் அரசர்களும், அவர்தம் குழுமங்களும், பொது மக்களும் புலம்பெயர்ந்தனர். அவை உள்நாட்டுப் புலப்பெயர்வு எனினும் - புலம்பெயர்தல் - என்பது "இருப்பை விட்டு வெளியேறுவதையே" குறித்து நிற்கிறது. பறம்புமலைப் பாரிமகளிர் பாடியதாகக் கருதப்படும்

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையும் உடையேம்,
எம் குன்றும் பிறர்கொளார், இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்,
வென்று எரி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்,
யாம் எந்தையும் இலமே.."

என்ற பாடலும், பாரியை நினைத்துக் கபிலர் பாடியதாகக் கருதப்படும் (புறம் - 116)

தீநீர்ப் பெருங்குண்டு தனைப் பூத்த குவளை......பாடலில்
"மயிலினம் சோலையிலே ஆட, குரங்கினம் மலை முகடுகளிலே தாவி விளையாட, அக்குரங்கினம் அனைத்தும் கூடித் தின்றும் தீராத கனிவகைகள் கணக்கற்று எங்கும் விளங்கியன. அவ்வளமலையிலே உயர்ந்த அதன் உச்சியேறி நின்று தம் தந்தையினை வெல்ல வகை அறியாதவராய்ப் போரேற்று வந்த மன்னர்களின் குதிரைகளை, முன்னர் வேடிக்கையாக எண்ணும் இவர்கள்.....இன்றோ வேலி சூழ்ந்த சிற்றில் முன்றத்திலே உள்ள சிறிய மனையிடத்தே பீர்க்கு முளைத்த, சுரைக்கொடி படர்ந்த இடத்திலே, ஈச்ச இலைகள் சிதறிய குப்பைமேல் ஏறிநின்று அவ்வழியே உமணர்களின் உப்பு மூட்டைகளை ஏற்றிச் செல்லும் வண்டிகளை எண்ணுகின்றனர்... அந்த நிலையை எண்ணி எண்ணி வருந்துகிறேன் என ஆயுள் இப்பொழுதே கெடுவதாக... என்ற கருத்தை வலியுறுத்தும் புறநானூற்றுப் பாடலும் பண்டைய புலப்பெயர்வின் அவலத்தின் வெளிப்பாடுகளாகும். போரினால் ஏற்பட்ட புலப்பெயர்வு அது. அதனைப் பாரிமகளிர் கபிலர் ஆகியோர் சரியாகப் பதிவு செய்தனர் என்றே குறிப்பிடலாம்.

இடைக்காலத்துப் புலவரான சத்திமுற்றப் புலவரது "நாராய் நாராய் செங்கால் நாராய்....." என்று பொருள் வயின் புலம்பெயர்ந்த, இன்னோர் புலமையாளனின் புலம் பெயர் அனுபவமாகவே அமைந்துள்ளது. அவரது பாடலை வெறுமனே அவரது மனைவிக்கான தூதுப்பாடலாகமட்டும் கவனத்தில் கொள்ள முடியாது.

"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழுவி
பேழையுள் இருக்கும் ஏழையாளனான பாம்பென உயிர்க்கும்"

புலவன் - பொருள்தேடி மதுரைக்குப் புலம்பெயர்ந்தவர் அவர் தமது இயலாநிலை / அல்லது / புலம்பெயர் தேயத்தில் தான் பெற்ற அவலமான அனுபவங்களை விரிப்பதாகவே அப்பாடல் அமைகின்றது.

இவ்வாறான பின்புலத்தின் வழியாகத்தான் தமிழகத்திலிருந்து ஈழத்து மலையகம் நோக்கிப் "பஞ்சம் பிழைக்கப்" புலம்பெயர்ந்தவர்களின் வாய்மொழிப் பாடல்களையும் நோக்கமுடியும். இன்று மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் நமது உள்நாட்டுப் போரின் அநர்த்தத்தால் தாமாகப் புலம்பெயர்ந்தனர். மலையகத் தமிழரோ பஞ்சம் போக்க என்று ஆங்கில ஏகாதிபத்தியத்தால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக அழைத்து வரப்பட்டவர்கள். அல்லது தமது இருப்புகளில் இருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் ஏமாற்றப்பட்டுக் கிழ்ப்பி வரப்பட்டவர்கள். வந்த **இடம்புதிது, தட்ப வெட்ப நிலை புதிது, தொழில்புதிது, தொழில் முறைமைகள் உறவுகள் புதிது.** இந்தப் பின்னணியிலே அவர்கள் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றை அவர்களால் வெளிப்படையாகச் சொல்லவோ எழுதவோ முடியாதளவிற்கு அடக்குமுறை நிலவியிருக்க வேண்டும். எழுதுவதற்கும் அவர்களது எழுத்தறிவு இடங்கொடுக்கவில்லை. எனவே தமது உள்ளக்கிடக்கைகளை தமது எதிர்ப்புக் குரல்களை, மனத்துயர்களைத் தமக்கே உரித்தான வாய்மொழி இலக்கியங்களில் பதிவு செய்தனர். (இந்த வாய்மொழிப் பாடல் மரபு நீண்ட காலமாகவே வாய்மொழியாகவே, புலம் பெயர்ந்த மக்களிடையே நிலவியது என்பதையும மனங்கொள்ளல் அவசியம். மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஒரு அவலமான அடக்குமுறைச் சூழலிலேதான் அவர்கள் வாழ்ந்தனர் என்பதுதான் இது புலப்படுத்தும் உண்மையாகும்.

தமிழ்நாட்டின் குறிப்பாக தென் தமிழ்நாட்டின் நிலவியல் பற்றி அறிந்தவர்களுக்கு அதன் சமதரைத்தன்மை புரியும். பரந்த வெளிகளையும், குட்டைக் காடுகளையும், குளங்களையும் ஆங்காங்கே கிளை பிரிந்து ஓடும் காட்டாறுகளையும் கண்மாய்களையும் வைகை, தாமிரபரணி நதிகளையும் அவர் அறிவர். ஆயின் இலங்கையின் குறிப்பாக மலையகத்து நில அமைப்பியல் அதற்கு எதிரானது. குன்றுகள், மலைத்தொடர்காளல் ஆனது இந்த நிலத் தோற்றம். இப்போது இந்த மாற்றத்தை அவர்கள் அவதானிக்கிறார்கள். அது அவர்களுக்கப் பதிய அனுபவமாகவும் அவலமாகவும் அமைந்தபோது பாடல் பிறந்தது.

கூடை எடுத்ததில்லை – நாங்க
கொள்ளிமலை பார்த்ததில்லை
கூடை எடுக்கலாச்சு – நாங்க
கொழுந்து மல பார்க்கலாச்சு

கோணக்கோண மலையேறி
கோப்பிப்பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதச்சானய்யா சின்னத்துரை

கூனி அடிச்சமலை
கோப்பிக் கண்ணு போட்டமலை
அண்ணனைத் தோத்தமலை
அங்க தெரியுதெடி

ஏத்தமடி பெத்துராசி
எறக்கமடி ராசாத்தோட்டம்
தூரமடி தொப்பித் தோட்டம்
தொடர்ந்தது வாடி நட்பு போவோம்

என அனுபவத்தையும், இயலாமையையுமே பதிவு செய்தனர்.

புதிய தட்பவெட்பநிலைகளும் அவர்களைப் பாதித்திருக்கின்றது. அடைமழை, குளிர், இன்னும் அதனால் ஏற்படுகின்ற நோய்கள் யாவற்றுக்கும் அவர்கள் பெரும்பாலும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. பெரும்பாலும் வெயில் வாழ்க்கைக்கே பழக்கப்பட்டவர்கள் அவர்கள். ஓரிடத்தில் இதனில் அவர்கள் மழையைக் குதூகலமாக வரவேற்று இருக்கிறார்கள்.

சொலு சொலுன்னு மழைபெய்ய
துப்பட்டித் தண்ணி அலைமோத – என்றும்

கலகலன்னு மழை பெய்ய
கம்பளித் தண்ணி அலைமோத – என்றும்

பாடியுள்ளனர். ஆயின் சில இடங்களில் மழையே சோகமாகவும் பாடப்படுகின்றது.

அருவா எடுத்ததில்லை
**அடை மழையும் பார்த்தில்லை**
அரும்பு குரைஞ்சுதுன்னு
அரை பேரு போட்டார்கள்

எனப்பாடுகின்றனர்.

பனிபொழியும் காலங்களில் மேற்குநாடுகளில் புலம்பெயர்ந்த நம்மவர்கள் (அயனவலயத்தார்) எதிர்கொள்ளும் தட்பநிலையை எதிர்கொள்ளலுக்குச் சமமானது இந்த அனுபவம்.

இனி அவர்களைப் பெரிதும் பாதித்த விடயம் அவர்களது உற்பத்தி முறைமையும் உற்பத்தி உறவுகளும் தான்.

வயற்காடு, படப்பைக்காடு, பருத்திக்காடு என நன்செய், புன்செய், (அவர்களது பாஷையில் நஞ்சை புஞ்சை நிலங்களில்) உழைத்த இம்மக்களுக்கு, றபர், கோப்பி, தேயிலைச் செய்கையும். கவ்வாத்தும், முள்ளுக்குத்துதலும், நெரைபுடித்தலும், கோப்பிப் பழம் பறித்தலும், கொந்தராத்தும், புதியவையாகவும் புதிய அனுபவங்களையும தந்தன. இந்த தொழில்களுடன் அவர்களால் திடுமென ஒன்றித்துப் போக இயலவில்லை. பல இடர்ப்பாடுகளுக்கு அவர்கள் முகங்கொடுத்தனர். அப்போதும் வாய்மொழி மூலமாக அவற்றைப் பதிவுசெய்தனர்.

"கூடை எடுத்ததில்லை – நாங்க
கொள்ளி மலை பாத்ததில்லை
கூடை எடுக்கலாச்சு – நாங்க
கொழுந்து மலை பாக்கலாச்சு "

"அறுவா எடுத்ததில்லை – நாங்க
அடைமழையும் பாத்ததில்லை
அரும்பு கொரைஞ்சுதுன்னு
அரை பேருபோட்டார்கள் "

"பாலும் அடுப்பினிலே பாலகனும் தொட்டிலிலே
பாலனை பெத்தெடுத்த பாண்டியரும் **முள்ளுக்குத்த**"

"ஆத்தோரம் **கொந்தராப்பு**
அது நெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ என்
வல்லாண்மை குறைஞ்சுதையா "

"கோணக்கோண மலையேறி
**கோப்பிப்பழம் பறிக்கையிலே**
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதச்சானய்யா சின்னத்துரை"

"**கொங்காணி** போட்டும் பழக்கமில்ல
**கொழுந்தெடுத்துப்** பழக்கமில்ல
சில்லறைக் கங்காணி சேவுமோ எங்களை
சீமைக்கு அனுப்புங்க சாமி சாமி"

என்பதாக அப்பாடல்கள் அமைந்துள்ளன. இனி இந்த உற்பத்தியில் பிரதான பங்கு வகிக்கும் கண்டக்கர், கங்காணி, துரைமார் ஆகிய நிர்வாகக் கட்டமைப்பினர் இவர்களை அடிமைக் கூலிகளாக நடத்தினர். அவர்களது உபரி உழைப்பை உறிஞ்சினர். தோட்டத்துரைமாரின் விசுவாசிகளான கங்காணிமார் இவர்கள் மீது மேலாண்மை செய்தனர். இவ்வாறான அனுபவங்களையும் அவர்கள் பதி செய்தனர்.

"எண்ணிக் குழி வெட்டி
இடுப்பொடிஞ்சு நிக்கையிலே
வெட்டுவெட்டு எங்கிறானே
வேலையத்தக் **கங்காணி.**

வேலை முடிஞ்சிடுச்சி
வீடுபோக நேரமாச்சு
வேலையத்த **கண்டாக்கையா**
வெரட்டுறாரு எங்களைத்தான்

கோணக்கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஓதச்சானய்யா **சின்னத்துரை**

இதற்குமேலாக – ஆங்கிலேய அதிகாரிகளாலும் அவர்கள் இம்சைப்படுத்தப்பட்டனர்.

றப்பர் மரமானேன்
நூலுபக்கம் வாதானேன்
எரிக்க விறகுமானேன்
**இங்கிலீசுக் காரனுக்கு**
ஏறிப்போகக் காரானேன்

புலம்பெயர்ந்த மலையக மக்களின் சோக அனுபவங்களைப் பதிவு செய்ததில் இப்பாடலுக்கு முக்கிய பங்குண்டு. புதுமைப்பித்தனின் - துன்பக்கேணி சிருஷ்டிக்கும் மருதி /வெள்ளையம்மாள் பாத்திரங்கள் பட்ட அவலத்தை இவ்விடத்தில் நினைவு கூரமுடியும்.

மேற்குறித்த விடயங்களைவிட புலம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக எவ்வாறான பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். மற்றும் இலங்கையில் வாழ்ந்த சுதேசிகளான மக்கள் அவர்களை எவ்வாறு எதிர்கொண்டனர் என்பவை தொடர்பாகப் புனைகதைகள் பதிவு செய்தளவிற்கு வாய்மொழிப்பாடல்களில் அறியமுடியவில்லை. ஆயின் இவ்வாறான வாய்மொழிப்பாடல்கள் அம்மக்களிடையே மிகவும இரகசியமான முறையிலேயாவது நிலவியிருக்க வேண்டும். ஆயின் அவை பதிவு செய்யப்படவில்லை. அதுபற்றிய நுணுக்கமாக ஆய்வு அனுகுமுறை நம்மிடையே இல்லாமைதான் இதற்கான காரணம் எனலாம். இதுபோலவே லயங்கள் அல்லது லயக்காம்பராக்கள் என்ற அவர்களது குடியிருப்புகள் தொடர்பான அவர்களது மனப்பதிவு என்ன? (இப்போது நகரமயமாகிவிட்டவர்களின் மனப்பதிவு வேறானது) அந்த அமைப்பு அவர்களுக்கு உவப்பாக இருந்ததா அல்லது வெறுப்பைத் தந்ததா என்பது பற்றிய பதிவுகளையும் நம்மால் அறிந்துகொள்ள இயலவில்லை.

சிறு குடில் வாழ்வும், குழும வாழ்வும் நிலவிய தமிழகத்துக் கிராமக் குடியிருப்பு, சிறுகுடில் வாழ்வில் இருந்து இந்த லயன்கள் அவர்களை எவ்வாறு கவர்ந்திருக்கக் கூடும். அந்த லயன்கள் பற்றிய அவர்களது மதிப்பீடு என்ன என்பது பற்றிய அவர்களது பதிவுகளும் அரிதாகவே காணப்படுகின்றன. பங்கேற்றல் களஆய்வுகளினூடாக இவ்வாறான செய்திகளாக வெளிக்கொண்டுவர இயலும்.

நிறைவாக மலையக வாய்மொழிப் பாடல்களை வெறுமனே மலையக மக்களது அனுபவங்கள் என்பதைவிட, புலம்பெயர்த்த ஒரு கூட்டத்தார் எதிர் கொண்ட பிரச்சினைகளாகவே அவற்றைக் கட்டமைக்க முடியும். எனவே தான் மலையக வாய்மொழிப் பாடல்கள் தமிழில் புலம்பெயர் இலக்கியத்தின் முன்னோடி முயற்சிகள் என்கிறோம்.

அடி அளந்து வீடு கட்டும் நம்ம
ஆண்டமனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலை தாண்டி வந்தோம்
பஞ்சம் பொழைச்சு நம்ம
பட்டனம் போய் சேரலியே
கப்பல் கடந்து
கடல் தாண்டி இங்க வந்தோம்
காலம் செழிச்சு நம்ம
காணி போய் சேரலியே

(1) உசாவியவை
புறநானூறு – கழக வெளியீடு
தனிப்பாடற்திரட்டு – கழக வெளியடு
சாரல்நாடன் - மலையக வாய்மொழி இலக்கியம்

தூங்கிக் கிடந்த இந்திய துணைக்கண்ட மக்களை ஆன்மிக ரீதியாகத் தட்டியெழுப்பி, இந்து மதத் தத்துவங்களையும் வேதாந்தத்தின் செழுமையையும் இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கும் அறியச் செய்த புரட்சித் துறவி விவேகானந்தர் மட்டுமே. இன்று இந்துக்கள் ஏராளமான இந்து பகவான்களையும், ரிஷி, மாத்தாஜிகளையும் வழிபடுகிறார்கள், பின்பற்றுகிறார்கள். ஏன் இவர்களை வழிபட்டு பின்பற்றுகின்றார்கள் என்பதற்கு அடிப்படையில் ஒரு பொதுவான காரணத்தை பின்பற்றுவோர் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறவிகள் செய்யும் மந்திர தந்திரங்களே இவர்களைப் பின்பற்றுவதற்கான பிரதான காரணம் என்பதே உண்மை. ஏனெனில் இத்தகையோரின் உபதேசங்களைப் பார்த்தோமானால் அவற்றில் எந்தப் புதிய விஷயத்தையும் காண முடியாது. ஏற்கனவே விவேகானந்தர் சொல்லிவிட்டுப் போனவற்றையும், எடுத்தாண்டவற்றையும் தான் இவர்கள், ஒரே மாலை தோசையாகவும் இட்லியாகவும் வார்ப்பதைப் போலவே, திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது, ஊன்றிப் பார்ப்பவர்களுக்கே புரியும்.

விவேகானந்தர் தான் இந்து மதத்தை ஆங்கில மூலம் வெளியுலகத்துக்கு முதலில் அறிமுகமெ செய்தவர். உலக மதங்களையும் உலக சரித்திரங்களையும் நன்கு கற்றிருந்த அறிவாளியாகவும், சுயமாக சிந்திக்கத் தெரிந்த அப்பழுக்கற்ற துறவியாகவும் விளங்கியவரே விவேகானந்தர். ஆனால் இந்துக்கள் மத்தியில் இன்று இத்தகைய பெருந் துறவிக்கு மதிப்பில்லை. அற்புதம் செய்யும் மற்றும் ஊடகங்களைப் பயன்படுத்தத் தெரிந்த சாமிகளுக்குத் தான் இன்று மரியாதை. இது, இந்த மக்களின் துரதிஷ்டம்.

கடந்த செப்டெம்பர் 15ம் திகதி அறிஞர் அண்ணாதுரையின் நூற்றாண்டு பிறந்தது. 1909ம் ஆண்டு செப்டெம்பர் 15ம் திகதி ஒரு சாதாரண நெசவாளர் குடும்பத்தில், காஞ்சிபுரத்தில் பிறந்தார் சி.என்.அண்ணாதுரை. 1969ம் ஆண்டு பிப்ரவரி 3ம் திகதி தான் வளர்த்த தம்பியை தமிழக அரியணையில் ஏற்றி, தமிழக முதலமைச்சராக மரணமடைந்தார் அறிஞர் அண்ணா. இவரென்ன அறிஞர் என்று கூடச் சிலர் சொல்வதுண்டு. இன்றைய தமிழக அரசியல் போக்கையும், அரசியல்வாதிகளையும், இரசியல் பண்பு, மாண்புகளை வைத்துப் பார்க்கும் போது, அவர் உண்மையாகவே பேரறிஞராக இருந்ததால்தான் எளிமையானவராக, பண்பாளராக, நல்லவராக, ஆளுமையும் ஆற்றலும் கொண்டவராக திகழ முடிந்தது என்பது புலனாகின்றது. இவருடன் கலைஞரை ஒப்பிட்டுப் பார்த்தாலேயே உங்களுக்கு அது புரியும்.

அண்ணாதுரையும் புதிதாக எதையும் சொல்லிவிடவில்லை தான். ஏனெனில் இலட்சக்கணக்கான தம்பிமார் அவருக்கு இருந்த போதிலும், விவேகானந்தருக்கு ஒரு பரமஹம்சர் குருவாக இருந்ததைப் போலவே, அண்ணாவின் தன்னிகரற்ற குருவாகத் திகழ்ந்தவரே தந்தை பெரியார். விவேகானந்தரின் குரு படித்தவரல்ல. பெரியாரும் படித்துத் தேர்ந்தவரல்ல. ஒரு அறிவாளி இளைஞன் படிக்காத ராமகிருஷ்ணரிடம் சரணடைந்ததைப் போலவே எம்.ஏ.பொருளாதாரம் படித்திருந்த அண்ணா தமிழையும் தமிழ்ச் சமுதாயத்தையும் குண்டுச் சட்டியில் இருந்து மீட்டு குன்றின் விளக்காக்குவது எப்படி என்பதை படிக்காத பெரியாரிடம் இருந்துதான் கற்றுக் கொண்டார்.

அண்ணாவின் பொது வாழ்வை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது, பெரியாரின் பிரதம சீடராக அவர் சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றிய காலம். இரண்டாவது, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கோஷத்தோடு தி.மு.க. வின் தலைவராக அவர் நேரடி அரசியலில் பிரவேசித்து முதலமைச்சரான காலம். இவ்விரண்டு காலப் பகுதியையும் (1934ல் பெரியாரை சந்தித்தது முதல் 1949ல் தி.மு.க. ஆரம்பிக்கப்படுவது வரையில் முதல் பருவம். 1949 முதல் 1969 வரையில் இரண்டாம் பருவம்) அதாவது 35 ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்க் கலைத் துறை வளர்ச்சிக்கும், முற்போக்கு சிந்தனைக்கும் அண்ணா ஆற்றிய சேவைகள் மிகப் பிரமாண்டமானவை. அந்த 35 வருட காலத்தில் அறிஞரின் பேச்சும், எழுத்தும், நேரடி வாழ்க்கை அனுபவங்களும் தமிழகத் தமிழர்களை மட்டுமின்றி உலகத் தமிழர்களையும் எழுச்சி கொள்ளச் செய்தது.

விவேகானந்தருக்கு முன்னர் இந்துசமயம் சர்வதேச அறிமுகம் ஒன்றை, எழுச்சியுடன் கூடியதாக பெற்றிருக்கவில்லை 'கோவணாண்டிகளின் விந்தை சமயம்' என்றிருந்த பெயரை மாற்றி ஜீவனுள்ள விஞ்ஞான மதம் ஏன்ற தோற்றத்தை முதலில் ஏற்படுத்திய விவேகானந்தர் தன் குருவான ராமகிருஸ்ணரை சந்தித்தது 1881ம் ஆண்டில் தான். அவர் 39 ஆண்டுகள்தான் உயிர் வாழ்ந்தார். இந்து மதத்தைத் துருவி ஆராய்ந்து உலக மக்கள் முன்பாக அவர் எடுத்துச் சென்றதெல்லாம் அடுத்து வந்த 21 ஆண்டுகளில் தான். எனினும் இக்குறுகிய காலத்தில் இந்த அளவுக்கு இவருக்குப் பின்னர் வேறு எவருமே தன்னலமற்ற தொண்டு ஆற்றியதில்லை. இராமகிருஸ்ணரிடம் பெற்றவற்றை அவர் மக்களுக்குத் தந்ததைப் போலவே பெரியாரிடம் பெற்றவற்றை தன் வானளாவிய ஆளுமையின் ஊடாக தமிழர்களிடம் சென்றடையும் வகையில் தந்தார் அண்ணா.

ஈ.வே.ரா. பெரியார் கடுமையான நாத்திகர். பிள்ளையார் சிலையை போட்டுடைத்தவர். இராமர் படத்தை வீதியில் எடுத்துச் சென்று செருப்பால் அடித்து ஊர்வலம் போனவர். கடவுளை நம்புகிறவன் முட்டாள், கடவுளை படைத்தவன் காட்டுமிராண்டி என்பதை சுயமரியாதை சுலோகமாகவே வைத்திருந்தவர். பெரியாருக்கு முன்னர் வாழ்ந்த அயோத்திதாசர் இந்து சமயத்தின் மீது கடுமையான விமர்சனங்களை வைத்திருந்தபோதிலும், பொதுவாக மதங்கள் மீதும் குறிப்பாக இந்து சமயத்தின் மீதும் மிகக் கடுமையான விமர்சனங்களை வைத்திருந்த பெரியார் அதை மக்கள் மத்தியில் சமூகப் போராட்டமாக முன்னெடுத்துச் சென்றார்.

தமிழுக்கு சுயமரியாதை வேண்டும்; அவன் எவற்றுக்கும் அடிமைப்பட்டிருத்தல் கூடாது; அவன் சிந்திக்கும் ஆற்றல் அற்ற, விஞ்ஞான ரீதியாக செயல்பட முடியாத, குறிப்பிட்ட ஒரு சுற்று வட்டத்துக்குள் முடங்கிக் கிடக்கின்றவனாக இருக்கிறான் என்பதால் அவனை அவ்வாறு அடக்கி வைத்திருக்கும் இந்து சமயத்தில் இருந்தும் மூட நம்பிக்கைகளில் இருந்தும் அவன் விடுதலை பெற வேண்டும் என்றும் பெரியார் விரும்பினார்; நம்பினார். எனவே பெரியாரின் முக்கிய கவனம் இந்து சாதி அமைப்பின் மீது திரும்பியது. உண்மையைச் சொன்னால் திராவிட சிந்தனையாளர்களின் முக்கிய பிரச்சினை, கடவுளோ இந்து சமயமோ அல்ல. வர்ணாசிர தர்மம் தான் அவர்களின் பிரச்சினை. ஒரு மதம் எப்படி மனிதனை கூறு போட்டு ஒரு பிரிவு உயர்ந்தது என்றும் மற்றொரு பிரிவு தாழ்ந்தது என்றும் முடிவு செய்ய முடியும் என்பதே இந்து சமயத்தின் மீது வைக்கப்படும் கடுமையான விமர்சனம். இந்த சாதிய பிரச்சினை அடக்குமுறை வடிவத்தை கொண்டதாகவும் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான முட்டுக்கட்டையாகவும் இவர்களால்

நோக்கப்படுகிறது. பெரியாரின் குரலுக்கு தமிழகத்தில் ஆதரவு திரண்டதற்கான காரணம், சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் பெரியாரை மீட்பராகக் கருதியதேயாகும்.

பெரியாரிடமிருந்து பிரிந்து சென்று தி.மு.க.வை அமைத்த அறிஞர் அண்ணா அரசியலில் வெற்றி பெற வேண்டுமானால் சில விட்டுக் கொடுப்புகளுடன் இணங்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருந்தார். இதனால், கடைசி வரை கடவுள், சமய நம்பிக்கையற்றவராகவே வாழ்ந்த அறிஞர் அண்ணா, அனைத்து மக்களையும் கவர வேண்டியதன் அவசியம் காரணமாக 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கோஷத்தை முன் வைத்தார். பெரியாரின் கருத்துக்களை விரும்பினாலும் அவரது கடுமையான நாத்திகம் காரணமாக விலகி நின்றிருந்த இலட் சக்கணக்கான தமிழ் பேசும் மக்களை அண்ணாவினால் ஆகர்ஷிக்க முடிந்தது.

அண்ணாவை மாத்திரமே சிறந்த சீடராக பெரியார் வளர்த்து விட்டிருந்தார். அண்ணாவே ஏராளமான தம்பிமாரையும் பல லட்சம் தொண்டர்களையும் ஆல விருட்சம் போல ஒரு கட்சியையும் உருவாக்கினார், குறுகிய ஒரு காலப்பகுதியில், ஆசைத் தம்பி, நெடுஞ்செழியன், கலைஞர், மதியழகன், பேராசிரியர் என ஆற்றல் மிகு தம்பிமாரையும், சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர், கலைவாணர், நடிப்பிசைப் புலவர் ராமசாமி, கண்ணதாசன், பாரதிதாசன் போன்ற ஆற்றல் மிகு கலைஞர், படைப்பாளர்களையும் உருவாக்கினார் அல்லது அவர்களது முழு ஆதரவையும் பெற்றிருந்தார் அண்ணா.

ராமகிருஷ்ண பரமஹம்சரும் ஒரு சீடரைத்தான் உருவாக்கிச் சென்றார். விவேகானந்தரைப் பார்த்த ரவீந்திரநாத் தாகூர், உன் கண்கள் யோகியின் கண்களைப் போல உள்ளன என்றாராம், அண்ணாத்துரையை மொழி பெயர்ப்பின் பொருட்டு முகம்மது அலி ஜின்னாவைச் சந்திப்பதற்காக தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார் பெரியார். அண்ணாவின் மொழி ஆளுமையை அவதானித்த ஜின்னா எதிர்காலத்தில் பையன் பெரிய ஆளாக வருவான் என்றாராம்.

சாதி இந்துகள் தாழ்த்தப்பட்டவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல்களை இப்போதும் நடத்துகிறார்கள் என்றால் விவேகானந்தரின் காலத்தில் சாதியம் வட இந்தியாவில் எவ்வளவு மோசமாக இருந்திருக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் இந்து மதத்தை அதன் வேர்களில் இருந்தே புரிந்து கொண்டிருந்த விஞ்ஞான ரீதியாக அறிந்திருந்த விவேகானந்தர், சாதீயத்தைக் கடுமையாகச் சாடினார். பௌத்த மதத்தை தன் எதிரியாக இந்து சமயம் ஒரு சமயத்தில் கொண்டிருந்தது. எனினும் சாதீயத்துக்கு எதிராக பௌத்தம் நடத்திய போராட்டத்தை வியந்து போற்றும் விசால மனதை விவேகானந்தர் கொண்டிருந்தார்.

குறுகிய காலப்பகுதியில் இந்தியர்களின் பார்வையைத் தன்பால் ஈர்த்துக்கொண்ட விவேகானந்தர் சிக்காக்கோ சர்வ மத காங்கிரசின் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர், மிகவும் மரியாதைக்குரிய துறவியானார். மேல் நாடுகளில் இந்து மதத்தின் கீர்த்தியை நிலை நிறுத்தினார். பல சீடர்களை வளர்த்திருந்த அவர், சேவையின் சின்னமான இராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். கோவில் அனுஸ்டானங்கள், பூஜை புனஸ்காரங்கள் என்றிருந்த இந்து சமயத்தை, இராமகிருஸ்ண மிஷன் ஊடாக மக்கள் சேவை செய்யும், மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளும் சமயமாக தோற்றமளிக்கச் செய்தார்.

விவேகானந்தரின் லாகூர் சொற்பொழிவு, கொழும்பு பிரசங்கம் என்பன எழுச்சி மிக்கவை. உங்களில் அதிர்வை ஏற்படுத்தக் கூடியவை. இந்தியன் கூனிக் குறுகியவனாகவும் சோம்பேறியாகவும் பிற்போக்கு சிந்தனை கொண்டவனாகவும் இருக்கவே கூடாது என்பதற்காக உழைத்தவர் விவேகானந்தர். பெரியாரும் அண்ணாவும் தமிழர்கள் அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் கூனிக் குறுகி இருக்கவே கூடாது என்பதற்காகக் கடுமையாகப் பாடுபட்டவர்கள்.

விவேகானந்தர் தன் மதத்தை எவ்வளவுக்கு நேசித்தாரோ அவ்வளவுக்கு அதில் மலிந்திருக்கும் மூடநம்பிக்கைகளையும் சாபக்கேடுகளையும் தைரியமாக, அண்ணாவைப் போலவே சாடவும் செய்தார். சென்னைக்கு வந்திருந்த சுவாமிகள் “எனது போர்முறை” என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு, இதை எடுத்துக் காட்டுகிறது. இந்த உரை, பெரியாரும், அம்பேத்கரும் அண்ணாவும் உங்கள் மனதில் தோன்றச் செய்யும அதன் சில பகுதிகளை மட்டும் உதாரணமாகக் கொள்வோம்.

“….. இந்த அறிவாளிகளாகிய சீர்திருத்தக்காரர்களால் நடத்தப்பெறும் பத்திரிகையைப் படித்தேன். அதில் நான் ஒரு சூத்திரன் என்றும். ஒரு சூத்திரன் சந்நியாசியாவதற்கு என்ன உரிமை இருக்கிறதென்றும் ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறேன். குற்றம் கூறு முன் இப்பத்திராதிபர் (அச் சஞ்சிகையை நடத்துபவர்) நமது சரித்திரங்களை சற்று ஆராய்ந்துணர்ந்திருக்க வேண்டும். பிராம்மண, ஷைத்திரிய வைசியருள் எவருக்கும் சந்நியாசம் ஏற்க பாத்தியம் உண்டென்பதையும் இம் மூவர்ணத்துக்கும் வேதங்களில் சமமான உரிமையுண்டு என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். என்னை சூத்திரன் என்று அழைத்துவிட்டதால் எனக்கு எவ்வகையிலும் குறைவு ஏற்பட்டு விடாது. எனது முன்னோர்கள் ஏழைகளுக்கு இழைத்த கொடுமைகளுக்கு சற்று பரிகாரமாக இருக்குமென எண்ணியே இங்கே இதைச் சொல்ல நேர்ந்தது. நான் பறையனாக பிறந்திருப்பேனானால், இன்னும் அதிகம் சந்தோஷமடைந்திருப்பேன். ஏனெனில், பிராம்மணருக்கெல்லாம் பிராம்மணராயிருந்ததும் ஒரு பறையனுடைய இல்லத்தைச் சுத்தஞ் செய்ய விரும்பிய ஒரு மஹானுபாவரின் (பரமஹம்சர்) சீடன் நான். உண்மையில் அப்பறையன் அதற்கு சம்மதிக்கான். ஒரு பிராம்மண சந்நியாசி தனது வீட்டை சுத்தம் செய்வதைப் பார்க்க அவன் எப்படி சம்மதிப்பான்? ஆனால் அப் பிராம்மண சந்நியாசி நடுநிசியில் எழுந்து அப்பறையனின் வீட்டினுள் புகுந்து மலம் கழிக்கும் கக்கூஸ் முதலான இடங்களை சுத்தம் செய்து அவ்விடத்தை தம் தலைமயிரைக் கொண்டு துடைத்தார். தன்னை எளியோர்க்கும் அடியவராய் ஆக்கிக் கொள்ளும் வகையில் பல தரம் அவ்வாறு செய்தார். இம் மஹானுபாவரின் பாதங்களையே சிறியோனாகிய நான் சதா தலைமீது தாங்கி நிற்கிறேன்.

“……மேல் நாடுகளில் நான் அடிமை, பலவீனன் என்ற மயக்கத்தில் ஆழ்ந்திருந்தவன் விழித்தெழுந்து தானும் ஒரு மனிதன் என்பதை உணர்கின்றான். நம்முடைய இந்த நாட்டில் (இந்தியா) நம்முடைய மக்கள் நூற்றுக் கணக்கான வருஷங்கள் இத்தகைய மயக்கங்களில் ஆழ்ந்திருக்கிறார்கள். இது எவ்வளவு வருத்தமான விஷயம்! அவர்களைத் தொட்டால் தீட்டாம்! அவர்களுடன் சேர்ந்து உட்காரக் கூடாதாம்! அவர்கள் எவ்வித உயர்ந்த எண்ணங்களும் இன்றி பிறந்திருப்பதால் அவர்கள் அந்நிலையிலேயே இருக்க வேண்டுமாம்! இதனால் இவர்கள் நாளுக்கு நாள் தாழ்ந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். இது அறிவற்றவர்கள் செய்யும் காரியம். துண்மையுடன் முன் வந்து உங்கள் குறைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்…”

“..எவனொருவன் இந்த வாழ்கையிலேயே கடவுளை அனைவரிடத்திலும் சமமாகக் காண்கிறானோ, அவனே கடவுளை அடைந்தவனாகக் கருதப்படுவான்..”

இவை அனைத்தும் மேலோட்டமாகப் பார்த்தால் திராவிட சிந்தனைகள் போலிருக்கின்றன அல்லவா! எனினும் இந்து மதத்தை நன்குணர்ந்திருந்த விவேகானந்தர் மொழிந்தவை.

எனினும் விவேகானந்தரின் சீர்திருத்தக் கருத்துக்களை இன்று எவரும் பொருட்டாகக் கொள்வதில்லை. இதே சமயம் பெரியாரின் தீண்டாமை எதிர்ப்பு, பெண் உரிமை, மதத்துக்கு அடிமையாகாமை, தமிழன் என்ற வகையில் தன்னைத்தானே உணர்ந்து கொள்வது போன்ற சீர்திருத்தக் கருத்துக்கள் தி.மு.க. வினது கொள்கைகளாக இருநத்தால் நலிந்தோருக்காக பேசும் கட்சியாக (அண்ணா காலத்தைப் போல அல்லவானாலும்) தி.மு.க. இன்றும் திகழ்கிறது. எனினும் இது போதியதாக இல்லை. விவேகானந்தரை இந்துக்கள் வசதியாக மறந்துவிட்டார்கள். சாதீயம், கடவுள் பக்தரான விவேகானந்தர் சொல்லியும் சரி, சாதியையும் மூடநம்பிக்கைகளையும் கரையும் படி திராவிட சிந்தனையாளர்கள் பிரசாரம் செய்த போதும் சரி, அவை ஒழிந்த பாடாக இல்லை.

உதாரணத்துக்கு சரஸ்வதி பூஜையை எடுத்துக் கொள்வோம். பண்டைய காலங்களில் தான் நிலத்துக்கும், நீருக்கும், ஏன் யோனிக்கும் கூட சிறு தெய்வங்களை ஓ.ய.சி. மாதிரி பொறுப்பு தெய்வங்களாக வைத்துக் கொள்ளும் வழக்கம் உலகின் பல பாகங்களில் காணப்பட்டது. ஏனைய பகுதிகளில் இவ்வழக்கம் அழிந்துபோக, இந்து சமயத்தில் மாத்திரம் கல்விக்கும், செல்வத்துக்குமாகக் கடவுள்கள் “உயிர்” வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனினும் இந்தியாவில் சரஸ்வதி பூஜையை பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் நடத்தும் வழக்கம் கிடையாது. வீடுகளிலும் கோவில்களிலும் பூஜை வழிபாடுகள் நடைபெறுவதோடு சரி. ஆனால் இலங்கையில் எல்லா பாடசாலைகளிலும் சரஸ்வதி பூஜை நடக்கிறது. உயர்கல்வி போதிக்கும் பல்கலைக்கழகங்களிலும் இச்சிறு தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. பத்திரிகைக் காரியாலயங்களிலும் வர்த்தக நிறுவனங்களிலும் கல்விக் கடவுள் வழிபடப்படுகிறாள். பத்திரிகை ஸ்தாபனங்களே மூடநம்பிக்கைகளை கைக்கொண்டால் எப்படி!

கல்விக்குக் கடவுள் இருந்தால், இந்த வழிபாடுகளை அக் கடவுள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அமெரிக்கர்கள் மற்றும் பிரிட்டிஷ்காரர்களை விட தமிழர்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். எனினும் தம்மை வழிபடாதாவர்களுக்குத் தான் கல்விக் கடவுள் அருள்வார் போலும்! வேண்டுமானால், கல்வியறிவற்றவனுக்கே சரஸ்வதி அருள் தேவை என்பதால், சரஸ்வதி வழிபாடு செய்பவர்களை பாமரர்கள் எனக் கொள்ளலாம். தமிழர்கள், குறிப்பாக மலையக மக்கள் இத்தகைய மூடநம்பிக்கைகளில் இருந்து விடுபட வேண்டும். மலையகம் முன்னேற சாதீயம், மூடநம்பிக்கை மற்றும் பெண் அடிமைத்தனம் என்பனவற்றில் இருந்து புதிய மலையக சமூகம் விடுபட்டாக வேண்டும். இது தான் புதிய சிந்தனை புதிய மலையகம்.

இதை அவர்கள் அண்ணா நாமத்தாலும் செய்யலாம். விவேகானந்தர் பெயராலும் செய்யலாம்.

# மலையக தெலுங்கரும், மலையாளிகளும் ஒரு நோக்கு

ஆர்.மகேஸ்வரன்
சிரேஷ்ட துணை நூலகர், பேராதனை பல்கலைக்கழகம்

மலையகத்துடன் ஒன்றித்துள்ள திராவிடர்களான தெலுங்கரும், மலையாளிகளும் தமிழர்களாகவே வாழ்கின்றனர். பெரும்பாலானோர் இந்துக்கள்.

இவர்கள் "ஆண்ட பரம்பரை" என மார்தட்டுபவர்கள். தமிழ் பரம்பரையை போலவே இவர்களது பரம்பரையும் ஆண்ட பரம்பரையே. இவர்கள் முற்றுமுழுதாக இந்து, தமிழ் கலாசாரத்தினை கொண்டிருந்தாலும் வீட்டில் பேசும் மொழி மூலம் தனித்துவம் பேணுகின்றனர். இவர்களது வரலாற்றினையும் மலையக வரலாற்றுடன் ஆய்வு செய்ய வேண்டும். இக் கட்டுரை ஒரு அறிமுகம் மட்டுமே.

திராவிட மொழிகளில் ஒன்றான மலையாள மொழி மலையான்ம, மலயாய்ம எனவும் அழைக்கப்பட்டது. மலையாளம் என்பது ஒரு நாட்டையும் பின்னர் மொழியையும் குறித்தது. மலையாள நாட்டை அல்லது மலையாளிகளை "மலபார்" என அரேபியரே முதலில் அழைத்தனர். இதனையே சிலர் கேரள மொழி என அழைத்தனர். கேரளா என்பது தென்னை நாடு என பொருள்படும்.

கன்னியா குமரி முதல் கோகர்ணம் வரை மலையாள தேசம் என அழைக்கப்பட்ட போதும் பிற்காலத்தில் கன்னியா குமரி தமிழ் நாட்டுடன் இணைந்தது. இதில் பூமி நாடு, கற்கா நாடு, குட்ட நாடு, குட நாடு ஆகியவையும் அடங்கியுள்ளன. பரசுராமன் மலையாள பூமியை கடலினின்று மீட்டு வந்தார் என புராணக் கதைகள் கூறுகின்றன. மலையாள தேசம் கேரள தேசம் என்றே அழைக்கப்படுகிறது. மலையாள தேசமும், கோயம்புத்தூரும், சேலம் மாவட்டமும் சேரருடைய ஆட்சியில் இருந்துள்ளது. எனவே இது சேர நாடு எனவும் அழைக்கப்பட்டுள்ளது. கேரள மாநில மக்களான மலையாளிகள் தமிழ் நாட்டில் சேலம், வட ஆற்காடு, அம்பேத்கார், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி பெரியார் மாவட்டங்களிலும், சேர்வராயன் மலை, கொல்லி மலை, சவ்வாத்து மலை, ஏலகிரி மலை, பச்சை மலை பகுதிகளிலும் வாழ்ந்தனர்.

மலையாளிகளிடமும் வெள்ளாளர், கொங்க வெள்ளாளர், மலைக்கவுண்டன், கவுண்டன் என பல சாதிகள் இருந்தன.

மலையாளிகள் பொதுவாக ஆவியுலக கோட்பாடு, மந்திரம், மந்திர ஜாலம் ஆகியவற்றி நம்பிக்கையுடையவர்கள். விஷ்ணுவ அதிகம் வழிபடுவர். கரியராமர், தர்மராசா, அய்யனார், காளி, கருப்பன், பிடாரி, மாரி போன்ற தெய்வங்களையும் வழிபடுவர். மலையாளிகளே 'வர்மனை' அதிகம் வழிபடுவார்கள். அவர்கள் பச்சைக் குத்திக் கொள்ளும் பழக்கமுடையவர்கள்.

"தெனுகு", "திரிலிங்கமு", "ஆந்திரமு" என சொல்லப்படும் தெலுங்கு மொழி இந்தியாவில் முக்கிய மொழிகளில் ஒன்றாகும். இதுவும் திராவிட மொழிகளில் ஒன்றாகும். தெலுங்கு பிரதேசத்தினை தெலுங்கு நாடு என்றும், ஆந்திரா நாடு என்றும் அழைக்கின்றனர். விஜயநகர பேரரசு, நாயக்கர் காலம் என்பதெல்லாம் இவர்களது காலமேயாகும். ஆந்திராவின் தலைநகர் விஜய நகராகும். தெலுங்கு நாட்டைப் பொறுத்த வரை 1509 - 1530 ஆட்சி புரிந்த ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் மிக முக்கியமானவர். அவர் காலத்தில் தென்னகத்தில் ஆட்சி புரிந்த வல்லரசனாக

திகழ்ந்தார் என வரலாறுகள் கூறுகின்றன.

விஸ்வாமித்திரர் காலத்தில் அம் மக்கள் ஆரிய சமூகத்தில் இருந்து நீக்கப்பட்டு ஆந்திரராகி விந்திய மலைக்கு தெற்கில் வாழ்ந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இவர்கள் கோதாவரி பிரதேசத்தில் வாழ்ந்த தெலுங்கரோடு கூடி ஆந்திரா ராஜ்யத்தினை ஏற்படுத்தினர் என்பது வரலாறு. தெலுங்கு என்பதற்கு த்ரிலிங்கு தேசம் என்பது பொருள். ஸ்ரீ சைலம், தாஹாராமம் (பீமேசுரம்), காளேசுரம் என மூன்று தெலுங்கு தேசத்தினை கொண்டது.

தெலுங்கர் மூலமே கோலாட்டம் பாடலு, படவ பாடலு, ஏதம் பாடலு, லாலி பாடலு (தாலாட்டு), பெள்ளி பாடலு (கலியாணப் பாடல்), ரோகடி பாடலு (தானியம் இடிக்கும் போது அல்லது குத்தும் போது பாடும் பாடல்) என்ற பதம் பாவிக்கப்பட்டது.

இவர்களது மூதாதையரான தியாகையர் சிறந்த பக்திக் கவிஞர். இவர் இயற்றிய பக்திப் பாடல்கள் சங்கீதத்திற்கு ஆரம்பமாயிற்று. சங்கீதத்தின் தந்தையான இவர் *1767 - 1847* காலப்பகுதியில் வாழ்ந்தவர். கர்நாடக சங்கீதத்தின் ஆரம்பகர்த்தாவாக கொள்ளப்படுகிறார். இவர்களிடையே ஒன்பது பிரிவுகள் உள்ளன. "உகடி" வருடப் பிறப்பு "டுசார" பெருநாள் மற்றும் மொகாரம் இவர்களால் கொண்டாடப்படுகிறது. இன்றும் இலங்கையில் கிட்டத்தட்ட *1,50,000* தெலுங்கர் இருப்பதாக கூறப்படுகிறது. இவர்கள் இப் பெருநாளினை கொண்டாடுகிறார்கள். இவர்களில் பலருக்கு நாயுடு, ரெட்டி, ராவ் என்ற பெயர்கள் உண்டு. இவர்களது ஒன்பது பிரிவில் இவையும் அடங்கும். இலங்கையில் இவர்களை இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தற்போது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இலங்கையில் இவர்களின் வரலாற்றினை நோக்குவோமாயின் இலங்கை தெலுங்கு மக்கள் இந்திய தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆந்திரா அல்லது தெலுங்கு தேச வழித்தோன்றல்களேயாகும். ஆந்திராவில் கோயா, செஞ்சு, சாவரா இனக்குழுவினர் களின் வழித்தோன்றல்களே தமிழ் நாட்டு தெலுங்கர்கள். மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் ஆந்திரர்கள் ஆட்சிக்கு வந்தனர். இந்த ஆந்திர ஆட்சிக்காரருள் ஒருவர் பல்லவ வம்ச மன்னர் வீரகுரச்சவர்மாவிற்கு தன் மகளை மணமுடித்ததன் பின்னர் வீரகுரச்சவர்மா தனது மாமனாரிடம் அரசின் தென்பகுதியை வாரிசுரிமையாக பெற்றுள்ளான். இது காஞ்சி வரை காணப்பட்டுள்ளது.

ராஜ ராஜ சோழர் காலத்தில் ஆந்திர நாட்டின் தென் மாவட்டங்கள் பட்டாபி, ரேநாடு, நெல்லூர் ஆகியவற்றை சோழர்கள் ஆண்டனர். சோழர்களுக்கு காகிதிய வம்சம் உதவியது. காகதிய வம்சம் ஆட்சிக்கு வந்தது. இதன் பின்னர் கடைசி காகிதிய அரசன் வராங்கல்லின் பிரதாப ருத்ர தேவாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் *1323*ல் துணைத் தலைவராக இருந்த ஹரிஹரா புக்கா விஜயநகர அரசை உருவாக்கினான். இதன்பின் விஜய நகர பேரரசு ராஷசா தெங்காடி போரில் வீழ்ந்தது. பின்னர் படிப்படியாக தெலுங்கு நாடு குதுப்ஷாஹிகளின் கட்டுப்பாட்டிலும் பின்னர் ஹைதராபாத் நிஜாமின் கீழும் வந்தது. குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி விசாக மாவட்டங்கள் நிஜாமால் ஆங்கிலேயரிடம் பரிசளிக்கப்பட்டன. காக்கிநாடா, ஏனம் பிரான்சுகாரர்கள் வைத்திருந்தனர். தேலுங்கர்கள் இந்து மதக் கூறுகளை உள்வாங்கியிருந்தாலும் தங்கள் சொந்த இயற்கை ஆண், பெண் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.

சோழ மன்னர்கள் வங்கக் கடலுக்கு அப்பாலும் புலிக் கொடியுடன் ஆண்டனர். 9ம் - 12ம் நூற்றாண்டு தமிழர் வரலாற்றில் ஒரு பொற்காலம். அக்காலத்தில் சோழர் சாளுக்கியருடன் போர் புரிந்துள்ளனர். சோழ மன்னன் இராஜராஜன் வேங்கி நாட்டைத் தாக்கினான். வேங்கியிலிருந்து பொண்ணையும் பொருளையும் கொண்டு வந்து இராசராசேசுவரர் கோயிலைக் கட்டினான். இக்காலத்தில் வேங்கையரசன் சோழ அரசுடன் திருமண உறவு கொள்ள காரணமாயிற்று. கீழைச் சாளுக்கியரில் ஒருவனான விமலாதித்தியன் (கி.பி.1015 - 1022) இராஜராஜன் மன்னன் மகள் குந்தவையை திருமணம் புரிந்தான். இதைத் தொடர்ந்து சோழ, சாளுக்கிய மன்னர்களது திருமணங்கள் நடைபெற்றன. சாளுக்கிய அரச பரம்பரையில் வந்த இராஜராஜ நரேந்திரன் (1022 - 1061) சோழ அரசனான முதலாம் இராஜேந்திரனுடைய மகளாகிய அம்மங்கை தேவியை மணந்தான்.

இராஜராஜ நரேந்திரனுடைய மகன் தாய் வழியில் கங்கை கொண்ட சோழனது பேரன். இவரையே இரண்டாம் இராசேந்திரன் என்று அழைப்பர். இவர் தழிழைப் பயின்று தமிழராகவே நடந்தார். இளவரசனான இவனே பின்னர் அரசனானான். இவனே குலோத்துங்க சோழன் என அழைக்கப்பட்டான். இதன் மூலம் சோழ நாடும் வேங்கி நாடும் இணைந்தது. வேங்கி நாடு சோழ நாட்டின் ஒரு பகுதியானது. இதன் மூலம் தெலுங்கு நாட்டுப் பகுதிகள் தமிழ் நாட்டின் ஆட்சிக்குட்பட்டன. குலோத்துங்க சோழன் தந்தை வழியால் சாளுக்கியனாகவும் தாய் வழியில் சோழனுமாக விளங்கினான்.

குலோத்துங்கனுக்கு திறை செலுத்தி வந்தவன் கலிங்கநாட்டரசன். இவ் அரசன் அனந்தவர்மன் (சோழகங்கன்) திறை செலுத்த மறுத்ததால் குலோத்துங்கன் படை கரணாகர தொண்டமான் தலைமையில் கவிங்கத்தின் மீது போர் தொடுத்தது. குலோத்துங்கன் கலிங்கத்தினை வென்றான். இதுவே கலிங்கத்துப்பரணி எனப்படும். சயங்கொண்டார் இவ்வெற்றியை பாடினார். குலோத்துங்க சோழன் தன்னுடைய மக்களாகிய இராஜஇராஜ மும்முடி சோழன், வீர சோழன், சோழங்கன், விக்கிரம சோழன் ஆகியோரை ஒருவர் பின் ஒருவராக வேங்கியை ஆளச் செய்தான். அதன் பின் தெலுங்கு நாட்டு சோழருள் ஒருவனான சோடன் வேங்கிநாட்டு தலைவரானான். இதன் பின் விக்கரம சோழனும் அதன் பின அவன் மகன் 2ம் குலோத்துங்க சோழனும் பட்டத்துக்கு வந்தனர். இதன்பின் 3ம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் தெலுங்கர் திறை செலுத்த மறுத்தனர். இதன் பின் 3வது இராஜஇராஜ சோழன் ஆட்சிக்கு வந்தான். இதன் பின் சோழ அரசு வீழ்ச்சியடைந்தது.

சடையவர்மன் சுந்தர பாண்டியன் காரணமாக பாண்டியர் எழுச்சியுற்றனர். சுந்தர பாண்டியன் காஞ்சியின் மீது படையெடுத்து கோபாலன் எனும் தெலுங்கு சோழனை வென்றான். இவருக்குப் பின் வந்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். இவன் தனது மகன் சுந்தரபாண்டியனுக்கு அரசை வழங்காமல் வைப்பாட்டியின் மகனான வீரபாண்டியனுக்கு முடி சூட்டினான். இக் காலத்தில் ஏற்பட்ட போர் காரணமாக சுந்தரபாண்டியன் முகம்மது பின் துக்ளக் துணையை வேண்டினான். மாலிக்கபூர் சுந்தரபாண்டியனைப் பற்றியோ வீரபாண்டியனைப் பற்றியோ கவலையில்லாமல் மதுரை மீது படையெடுத்து கோயில்களை சூறையாடினான். மாலிக்கபூருக்குப் பின்னர் பல முஸ்லீம்கள் தமிழ் நாடு மீது படையெடுத்தனர். தமிழ் நாட்டில் இஸ்லாம் ஆரம்பம் உருவாகியது. இதன் பின்னரே விஜயநகர கிருஷ்ண தேவராயர் படையெடுத்து ஆட்சியை மீட்டு பாண்டியருக்கு வழங்கி வரும்படி நாகம நாயகனை படையுடன் அனுப்பினார். இந்த

கிருஷ்ண தேவராயரே தெலுங்கு மன்னராவார். இவர் அனுப்பிய நாகம நாயகர் முதல் நாயகர் பெயர் தொடங்குகிறது. நாகம நாயகர் போரில் வென்று பாண்டியனிடம் நாட்டை கொடுக்காது தானே ஆட்சி செய்தான். இதற்கு எதிராக மகன் விசுவநாதநாயகரை அனுப்பி தந்தையுடன் போரிட செய்தார். மகன் வென்றான். விசுவநாதநாயகரை கிருஷ்ண தேவராயர் மதுரைக்கு தலைவராக்கினார். *1559* ஆண்டிலிருந்து பாண்டி நாடு நாயகருடைய ஆட்சிக்குட்பட்டது.

பாண்டி நாடு விஜய நகர பேரரசுக்கு கீழ் வர முன்னரே தெலுங்கு மக்கள் பலரும் தமிழ் நாட்டில் குடியிருந்தனர். இவர்களே பாளையக்காரர்கள் என அழைக்கப்பட்டனர். விசுவநாதருக்குப் பின் அவரது புதல்வர் குமார கிருஷ்ணப்ப நாயகர் பட்டத்துக்கு வந்தார். இவர் இலங்கையின் மீது படையெடுத்தார். கண்டியை வென்று தம் மைத்துனர் விஜயகோபால நாயகரை தம் பிரதிநிதியாக அமர்த்தினார். விஜய நகர அரசனாகிய 2ம் ஹரிகரனும் *(1379 - 1406)* 2ம் தேவராயனும் *(1438)* இலங்கையைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். கடலாதெனிய, லங்காதிலக விஹாரைகள் விஜய நகர சிற்ப முறையில் கட்டப்பட்டுள்ளன. 14ம் நூற்றாண்டில் கம்பளை இராசதானிக் காலத்தில் இந்தியக் கட்டிடக் கலை நிபுணர்களையும், சிற்பக் கலை நிபுணர்களை - கணேஷ்வர ஆச்சாரியார் இஸ்தாபதிராயர் ஆகியோர்களை வரவழைத்து இவ்விஹாரைகளை கட்டியுள்ளனர். இவ்விஹாரையஜனை கட்டியபோது அதில் மலையாளிகளும் பணிபுரிந்துள்ளனர். பிரதான கூரையினை வடிவமைத்து செய்தவர் ஒரு மலையாளி ஆகும். இலங்கையுடன் விஜயநகர மன்னர்கள் பலர் தொடர்புபட்டுள்ளனர்.

முதலாம் ஹரிஹரன் *(1336)*, முதலாம் புக்கன்*(1356)*, 2ம் ஹரிஹரன்*(1377)*, இரண்டாம் புக்கன்*(1404)*, முதலாம் தேவராயன்*(1406)*, வீர விசயன்*(1422)*, 2ம் தேவராயன்*(1425)*, வீரபாஷர்*(1465)*, ப்ரொட் தேவராயன்*(1485)*, வீர நரசிம்மன்*(1486)*, இம்மடி நரசிம்மன்*(1492)*, கிருஷ்ண தேவராயன்*(1509)* இதில் 2ம் ஹரிகரனே இலங்கையில் காணிக்கை பெற்றதாகவும் லக்கண்ணா தலைமையில் இலங்கை மீது படையெடுத்தோடு இவரது கடற்படை இலங்கையை கைப்பற்றியுள்ளது. விஜய நகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தெலுங்கு மொழி அரசின் ஆதரவை இழந்து விட்டது. மதுரை நாயக்க மன்னர்களும், தஞ்சை அரசுகளும் தெலுங்கு மொழிக்கு ஆதரவு வழங்கினர். 15ம், 16ம், 17ம், நூற்றாண்டுகளில் தெலுங்கர் தெலுங்கு நாட்டில் இருந்து குடி பெயர்ந்து தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் நிரந்தரமாகத் தங்கினர். தஞ்சை, மதுரை, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் தெலுங்கு மொழி பேசுவோர் அதிகம் வாழ்ந்தனர். தஞ்சையையும், மதுரையையும் ஆண்ட நாயக்க மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் தெலங்கர் பல இடங்களுக்கும் குடிபெயர்ந்தனர்.

தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயகர் *(1600 - 1631)* இரண்டாவது கிருஷ்ண தேவராயர் என்றே அழைக்கப்பட்டார்.

மலைநாட்டினைப் பொறுத்தவரை நாயகர் ஆட்சி முக்கியத்துவம் பெறுகிறது. நாயகர் வம்சம் எவ்வாறு ஆட்சிக்கு வந்தது என்பதை நோக்கில் சேன சம்பத் விக்ரமபாக *(1473 - 1511)*, ஜயவீர*(1511 -1551)*, கரலியத்த பண்டார*(1551 - 1581)*, 1ம் இராஜசிங்கன்*(1581 - 1590)* 1ம் விமலதர்மசூரியன்*(1590 - 1604)*, செனரத்*(1605 - 1635)*, 2ம் இராஜசிங்கன்*(1635 - 1687)*, 2ம் விமலதர்மசூரியன் *(1687 - 1706)*, மகன் நரேந்திரசிங்கன் *(1706 - 1739)* ஆட்சியாளனானார்கள். 2ம் விமலதர்மசூரியன் தஞ்சாவூர் மன்னனின் மகளை திருமணம் செய்தான். 1706ல் கண்டிய மன்னனுக்கு

ஸ்ரீ வில்லிபுத்தூர். கோவில்பட்டு, இராஜபாளையம், திருநெல்வேலி பகுதிகளில் குடியேறியுள்ளனர். இங்கு தொழில் காரணமாகவும், பஞ்சத்தினாலும் தேனி மாவட்டத்தில் குடியேறினர். இங்கு நாயகர்கள் இவர்களை ஆதரித்தனர். பிறர் இடையூறு செய்துள்ளனர். தெலுங்கு மன்னர்கள் நாயகர்கள் தம் ஆட்சி எல்லையை விரிவுபடுத்தியபோது தெலுங்கு பிராமணர்களையும், தெலுங்கு சக்கிலியர்களையும் உடன் அழைத்து வந்துள்ளனர். இவர்கள் மதுரையில் திருமலை நாயகர் அரண்மனையைச் சுற்றி பத்துதூண், விளக்கத்தூண், அனுப்பானடி பகுதிகளில் தங்குவதற்கும், நெசவு தொழில் செய்வதற்கும் ஆடை துவைத்தலுக்கும் குடியமர்த்தினர். பிராமணர்களுக்கு வைகை ஆற்றின் தென் பகுதியை வழங்கி வேதபராயணம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்தினர். தெலுங்கு சக்கிலியர்களுக்கு ஊரின் ஒதுக்குப்புறமாக இடமளித்து காலணி உற்பத்தி, நகர சுத்திகரிப்பு ஆகியவற்றில் ஈடுபடுத்தினர். இவர்களிடையே சாதி முரண்பாடு ஏற்பட குடும்பங்களோடு விரும்பிய பகுதியில் தொழில் செய்ய சென்றனர். இவர்கள் நாயகர் ஆட்சிக் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் இலங்கைக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

மலையாளிகளின் இலங்கை விஜயம் பற்றி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளது. எல்லாளன் மன்னன் துட்டகாமினியால் தோற்கடிக்கப்பட்ட ஏழாவது நாளில் இவரின் மருமகன் பல்லுவ அல்லது வல்லுகன் தலைமையில் 6000 வீரர் கொண்ட படை மாந்தோட்டத்தில் வந்திறங்கியுள்ளனர். இப்படை துட்டகாமினியின் படைத்தளபதி புஸ்ஸதேவ என்பவரால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்தப் படையில் மலையாளிகளும் தெலுங்கரும் இருந்துள்ளனர்.

கரிகால சோழன் (110 - 112) 12000 இலங்கையரை சிறைப்பிடித்து காவிரிக்கு அணை கட்டினான். கஜபாகு மன்னர் இவர்களை மீட்டதோடு இருமடங்கு தமிழரை மீட்டு வந்தார் எனக் கூறப்படுகிறது. இவர்களோடு வந்தவர்களுள். மலையாளிகளும் தெலுங்கர்களும் இருந்துள்ளனர். இந்த மீட்பு சேரன் செங்குட்டுவனுடன் நட்பு ரீதியாக திகழ்ந்ததாக சில வரலாற்று நூல்கள் கூறுகின்றன. சேர நாடு தமிழ், தெலுங்கு மக்களைக் கொண்டதாகவே காணப்பட்டது. கஜபாகு கொண்டுவந்தவர்களை 'பெரும்பாகம்' என்ற இடத்தில் குடியமர்த்தினார். இவர்களுல் பெரும்பாலானவர்களை குடியேற்றியதால் பெரும்பாகம் எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதையே மகா - தளய என்றும் இப்போது மாத்தளை என்றும் பெயர் வரக் காரணமாயிற்று. இவர்கள் அநேகமானோர் தெலுங்கு வம்சாவழிகளே எனக் கருத வேண்டியுள்ளது.

பூஜாவலி என்ற நூலிலே 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகனிடம் 44000 வீரர்களும், ஜெயபாகுவிடம் 40000 வீரர்களும் இருந்ததாக கூறப்படுகிறது. சூழவம்சப்படி ஜெயபாகுவுக்கு துணையாக 44000 கேரள படை வீரர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனை சில நூல்கள் கேரள தமிழர்கள் எனக் கூறுகிறது. இவர்கள் மலையாளிகளாகவும் இருக்கலாம் அல்லது மலையாளிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். இக்காலத்திலேயே அதிக மலையாளிகள் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். 1590களில் அரசியல் காரணங்களினால் தோற்கடிக்கப்பட்ட மலபார்கள் (மலையாளிகள்) இலங்கைக்கு வந்து குடியேறியுள்ளனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் குடியேறிய பரவர்கள் திருமண உறவுகளை மலையாளிகளுடன் ஏற்படுத்தியுள்ளனர். இதன்பின் டச்சுக்காரர்கள்

பெண்கேட்டு மதுரைக்குச்சென்ற தூதுக்குழுவில் சிதம்பரநாத், அடையப்பான் என்ற அரண்டு தமிழர்கள் இருந்துள்ளனர். அவர்கள் தம்முடன் எடுத்துச்சென்ற விண்ணப்பம் சிங்களம் தமிழ் தெலுங்கு மொழிகளில் இருந்துள்ளது. இக்காலத்தில் தமிழ் நாட்டினர் போர் வீரர்களாக வந்தனர். இவர்களை 'வடகத்தையர்' என அழைத்தனர். இவர்களுள் தெலுங்கரும், மலையாளிகளும் காணப்பட்டனர். தஞ்சாவூர் அரசியின் மகனே நரேந்திரசிங். நரேந்திரசிங்கனின் மனைவியின் சகோதரனே ஸ்ரீ விஜயராஜசிங்கன் (1739 - 1747) அவனது மனைவியின் சகோதரனே கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747 - 1781) அவனது சகோதரன் இராஜாதி இராஜ சிங்கன் (1781 - 1798) அவரது மனைவியின் சகோதரனே விக்ரமராஜசிங்கன் (1798 - 1815) நரேந்திர இராஜசிங்கனுக்குப் பின் வந்த நாயகர்கள் இவர்கள் 76 ஆண்டுகள் ஆண்டுள்ளனர். இவர்கள் காலத்தில் தெலுங்கரும், மலையாளிகளும் பலர் குடும்பம் குடும்பமாக இங்கு வந்துள்ளனர்.

நாயக்கமன்னர்களினால் தலதா மாளிகை கட்டப்பட்டபோது தலதாமாளிகை கூரையினை வடிவமைத்து செய்தவர் ஒரு மலையாளி ஆவார். தலதாமாளிகைகட்டும் பொழுது பல மலையாளிகளும் தெலுங்கர்களும் பணிபுரிந்ததாக தலதாமாளிகை வரலாற்று நூல்களில் கூறப்படுகின்றது.

மலையாளிகள் வாழ்ந்த வீதி மலபார் வீதி என கண்டியிலும், கம்பளையிலும் உள்ளது. மலபார் வீதி என்பது முன்னர் நாயக்கர்கள் வாழ்ந்த வீதி. அப்போது, அது குமரப்பா வீதி என அழைக்கப்பட்டது. இராஜசிங்கனின் இரண்டாவது மனைவியாக மலையாளி ஒருவரை திருமணஞ் செய்த பின்னர், அவரது குடும்பத்தினர் இங்கு குடியமர்ததப்பட்டனர். இவர்கள் மன்னருக்கு விசுவாசமானவர்களாக இருந்தனர். எனவே இவர்கள் இவ்வீதியில் குடியமர்த்தப்பட்டதால் குமரப்பா வீதி, மலபார் வீதி ஆயிற்று. இக்காலத்திலேயே மன்னர்களை தெய்யோ எனவும் நாணக்கர்களை நாயக்க தெய்யோ எனவும் மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

1710களில் மாப்பிள்ளை நாயகர், நரெனப்ப நாயகர், நடுகாட்டு சாமி நாயகர், கபடதுரை நாயகர், நாம் நாயகர் எனப் பலரும் குடும்பங்களுடன் இங்கு வந்து செல்வாக்குடன் வாழ்ந்துள்ளனர். நரெனப்ப நாயகரின் மகளே விஜயராஜசிங்கனின் மனைவியாகும். விக்கிரமராஜசிங்கனின் ஆட்சிக்குப் பின் ஆங்கிலேயருக்குப் பயந்து நாயக்க வமிசத்தினர் குருநாகல், மெல்சிரிபுர, கலிகமுவ, ஜோசப்வாஸ்புரம், வில்பாவ (வீரபாகுபுரம்) ஆகிய பகுதிகளுக்கும் ஹங்குரங்கெத்த, ஹாரகம, ஊருகொல்ல, குண்டசாலை பகுதிக்கும் சென்றுள்ளனர். கம்பளை ஆட்சிக் காலத்தில் அளகக்கோனார் குடும்பத்தினரின் ஆட்சி வலுப்பெற்று விளங்கியுள்ளது. இவர் சேர நாட்டு தலைநகரான வஞ்சியில் இருந்த பிரதான குடும்பத்தவர்கள். இவர்கள் றைகமவில் வாழ்ந்ததோடு அமைச்சர்களாகவம் விளங்கினர்.

கண்டி மன்னரின் கடைசிகாலத்தில் முன்னூறு மலபார்கள் காவலில் அமர்த்தப்படாது சுதந்திரமாக திரிகின்றனர் என்ற செய்தி தேசாதிபதி பிரவுண்றிக்குக்கு கிடைத்துள்ளது. இதுவும் கண்டி படைவலிமை குறைந்துள்ளது என்பதை அவருக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

நாயகர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு பேசும் பல்வேறு சாதியினர் ஆந்திராவிலிருந்து இடம் பெயர்ந்து முதலில் இராமநாதபுரம், அரும்புக்கோட்டை, விருதுநகர்,

காலத்தில் டச்சுக்காரர்கள், யாழ்ப்பாணத்தமிழர்களை மலபார் என்ற அழைத்துள்ளனர். மலையகத்தில் வழ்ந்த இந்திய வம்சாவளி கேரள மலையாளிகள் வேறு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1796ல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரங்களை கைப்பற்றிய போது இங்கு வரி சேகரிப்பதற்காக துபாசிகள் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் மலையாளிகளாகவும், தெலுங்கர்களாகவும் இருந்துள்ளனர்.

1818ல் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிரான சிங்களவரின் கிளர்ச்சியை அடக்குவதற்கு ஐந்தாயிரம் தென்னிந்தியர்கள் கொண்டு வரப்பட்டனர். இவர்களிலும் மலையாளிகளும் தெலுங்கர்களும் அடங்கியிருந்தனர்.

இதன் பின் கோப்பி மற்றும் தேயிலை பயிர்ச்செய்கையின் ஆரம்பகாலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கூலி தோட்டத் தொழிலாளர்களுல் மலையாளிகளும் தெலுங்கரும் இருந்துள்ளனர். நாயுடு பெயருடைய பலர் இக்காலத்தில் வருகை தந்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. இறுதியாக செட்டியார்களைப் போல வியாபார நோக்குடன் "கொச்சி" வியாபாரிகள் என அழைக்கப்படும் மலையாளிகள் வருகை தந்துள்ளனர்.

இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சி செல்வாக்கு செலுத்திய காலத்தில் தெலுங்கர் பல நாடுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். ஆங்கிலேயர் காலத்து தொழிலாளர்கள் வருகை பற்றி பல்வேறு நூல்கள் உண்டு. இதில் சாதி அடிப்படையில் விகிதாசாரங்கள் தொகைகள் கூறப்பட்டுள்ளன. நாயுடு, ராவ், நாயர் சாதியினர் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

கேரள நாட்டின் அல்லது மலையாளிகளின் முக்கிய நகரமாக கொச்சின் விளங்குகிறது. கேரள இலங்கையைப் போல தென்னை மரங்கள் உண்டு. தென்னை சாராயத்திற்கும், கல்லுக:கம் பிரசித்தி பெற்ற இடம். இலங்கையிலும் கேரளக்காரர்களே அதாவது மலையாளிகளே அதிகம் பார்கள் அல்லது தவரணைகள் நடத்தினர். சாராயம், கல்லு இவர்களது முக்கிய வியாபாரமாகும். இவர்களது தவரணைகள் "கொச்சி தவரணை" அல்லது "கொச்சி பார்" என்றே அழைக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள கேரள வம்சாவழி மலையாளிகள் ஓனம் பண்டிகை, விசு ஆகிய பெருநாள்களை கொண்டாடுகின்றனர். இது தைப் பொங்கல் போல சூரியனுக்கு புது அறுவடையினை வழங்கும் விழாவாகும்.

எனவே இவ்விரு பிரிவினரைப் பற்றியும் தனித்தனியாக ஆராய வேண்டியதும் இவர்களது பதிவுகளை முன்கொணர வேண்டியதும் அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்


1. அரங்கநாதன்.பு.சு, 1974, விஜய நகரப்பேரரசு கிரட்டிண தேவராயர், சென்னை, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்.
2. சர்மா, சி.ஆர், 1987, தெலுங்கு இலககியம் ஒரு கண்ணோட்டம் சென்னை, தமிழ்நாடு பாரி நிலையம்.
3. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏஈ 1966, தென் இந்திய வரலாறு, இலங்கை அரசாங்க பாஷைப்பகுதி.
4. மாணிக்கம், தா.சா, 1974, தமிழும் தெலுங்கும், சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி - பத்து, 1988, தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

# மலையகத்தில் முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டுகள்

ஐ.எ.றஸ்ஸாக்
கலாபூஷணம்

இலங்கை முஸ்லிம்கள் தழிழுக்கு ஆற்றிய பங்களிப்பை ஆராயும் பொழுது மத்திய இலங்கை முஸ்லிம்களின் அர்ப்பணிப்பும் ஆக்கமுமே முக்கிய இடம் வகிப்பதை ஆயிரத்து எண்ணூற்றின் இறுதிக் காலப் பகுதியின் ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றது.

தென்னிந்திய முஸ்லிம்கள் இலங்கை வர முற்பட்ட காலம் தொடக்கம் தமது சமய, பண்பாட்டு, அறபு மொழி அறிவு பலவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழை வளர்ப்பதிலும் அதனைக் கற்றுக் கொள்வதிலும் மிக்க ஆர்வமுடையவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

இப்பணிகளுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களில் கண்டியில் பிறந்து வளர்ந்து தமது அன்றாட வாழ்க்கையில் எல்லாம் தமிழை முன்னெடுத்துச் சென்றவர்கள் வரிசையில் அறிஞர் சித்திலெப்பையும் அவரோடு நெருக்கமாகப் பழகிய புலவர் அருள்வாக்கி அப்துல் காதரும் தொடக்கி வைத்த இந்தப் பணியை அதன் பின்னர் தோன்றிய தலைமுறையினர் இன்று தொடர்கின்றனர்.

இஸ்லாமிய சமயத்தலங்கள் ஊடாகவே இப் பணியை ஆரம்பித்த அறிஞர் பெருமக்கள் அனைத்தையும் விட தமது சமயத்தையும் அதன் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கியதன் காரணமாக தமிழையும் அறபு மொழியையும் சமகால மொழியாகக் கருதி எழுதப் பழக்கப்பட்டனர். இந்த ஆர்வமே முஸ்லிம்களை தமிழ் கற்கவும் முறையாகப் பேசவும் வகை செய்தது. தாம் படைக்கும் இலக்கியங்கள் மூலம் சமூக சீர்திருத்தங்களை கவிதைகள், தனிப்பாடல்கள், நாவல்கள், சிறுகதைகள் மற்றும் உரை நடைகள் ஊடாக முஸ்லிம்களை ஈர்த்துக்கொள்வதில் காட்டிய ஆர்வத்தின் ஊடாகவே பல இலக்கிய கர்த்தாக்களையும் உரை நடையாளர்களையும் மத்திய இலங்கையில் தோற்றுவிக்க முடிந்தது.

அறிஞர் எம்.ஸி.சித்திலெப்பை அவர்களுக்கு வாப்பிச்சி மரைக்கார், ஐ.எல்.எம்.அஸீஸ் ஆகியோர் கல்வி மேம்பாட்டுக்கும் அக்குறணையில் வாழ்ந்த கஸாவத்தை ஆலிம் அப்பா சமயத்தோடு இணைந்த படைப்புகளுக்கும் தெல்தோட்டை புலவர் அருள்வாக்கி அப்துல் காதர் இலக்கிய துறைசார்ந்த முயற்சிகளுக்கு தமது முழுப்பங்களிப்பையும் வழங்கியமையால் மக்களை அறியாமையில் இருந்தும் தட்டி எழுப்ப அறிஞர் சித்திலெப்பை "முஸ்லிம் நேசன்" வார இதழை வெளியிட்டதன் மூலம் இவர்களது பணி மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

முஸ்லிம்களின் விழிப்புணர்ச்சிக்கு தமது பத்திரிகையில் களம் அமைத்து கொடுத்ததன் மூலம் மத்திய இலங்கை முஸ்லிம்கள் மாத்திரம் அல்லாது கொழும்பு வாழ் முஸ்லிம்களும் கல்வி, சமய, இலக்கிய கருத்துப் பரிமாற்றங்களை முன்னெடுக்கக் கிடைத்த வாய்ப்பை உருவாக்கிய அறிஞரின் பணிகள் என்றும் நிலை கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். அக்காலப் பகுதியில் வெளிவந்த "முஸ்லிம் நேசன்" உட்பட இஸ்லாமிய மித்திரன், முஸ்லிம் பாதுகாவலன், போன்ற

பத்திரிகைகள் முஸ்லிம் தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு உந்து கோலாக அமைந்தும் விட்டன.

பேரின்ப ரஞ்சித மாலை (1881) சந்ததித் திருப்புகழ் (1909) கண்டிக் கலம்பகம்(1903) காரணபிள்ளைத் தமிழ் (1895) பிரபந்த குஞ்சகம் (1901) தைக்கா சாகிப் ஒலியுல்லா (1908) சந்தத் திருப்புகழ் (1909) போன்ற நூல்களைக் கொண்ட கவிதைகளை வெளியிட்ட அருள் வாக்கி மலையக இலக்கிய முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவர். 1881 -1918 வரையிலான கவிதை முன்னோடி அருள்வாக்கியே.

இவரைத் தொடர்ந்து பதுளையில் வாழ்ந்த முகியித்தீன் என்பவர் புனைபெயரில் (தாலிபுல்இல்மு) கட்டுரைகளையும் கவிதைகளையும் முஸ்லிம் நேசன் இதழில் (1885 வைகாசி) வெளிவர தம்மை அர்ப்பணித்தவராவர். அவரது கவிதையில் வருகின்ற கங்கையாம் .... மங்கையாம்.....சந்தமாய்.......... சிங்கமாய்.........போன்ற எதுகை மோனைகள் கொண்ட கவிதையாப்பு முக்கியத்துவம் பெறுவதாகும்.

கம்பளையைச் சேர்ந்த கவிஞர் எஸ்.எம்.அப்துல் ரகுமான் என்பவர் யார்த்த ஆசிரிய விருத்தத்தில் சீர்பெருநர்......ஊர்பெருகு.....பேர்பெருக.....நேர்பெருக....மற்றும் சீரேரு, திரபேறு.....பேரேறு போன்ற வகைகளைக் கொண்ட கவிதை (ஆஸ்லிம் நேசன் 1888 தை23) வெளிவந்துள்ளமையும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

அக்குறணைப் பிரதேசத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களில் கஸாவத்தை ஆலிம் அப்பா கவிஞர் ஐ.எஸ்.ஹமீத், பாலையொளி சகாப்தீன் ஆகியோரும் சிறந்த பல்கலையை வழங்கியுள்ளனர்.

கல்ஹின்னை

மத்திய இலங்கையில் குட்டித்தமிழகம் என வர்ணிக்கப்படும் தலமாக கல்ஹின்னை அமைந்துள்ளது. அங்கு தமிழ் மன்றம் அமைத்து மாணவர்களையும் தமிழ் அபிமானிகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில் சட்டத்தரணி எஸ்.எம்.ஹனீபா ஆற்றிய தமிழ்ப் பணியை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமிழ்பேசும் நல்லுலகத்திற்கு எடுத்தியம்பியது குறிப்பிடத்தக்கது. இவரைத் தொடர்ந்து மணிக்குரல் ஆசிரியர் கலாபூஷணம் எம்.சி.எம்.சுபைர், கலாபூஷணம் எம்.எச்.ஹலீம்தீன், டாக்டர். கலாபூஷணம் எச். சலாகுத்தீன் (மௌலவி) நாவலாசிரியர் (மாமா) எஸ்.எம்.ஹனீபா ஆகியோரின் பணிகள் அளப்பரியவை.

மாத்தளை

பண்ணாகமத்துக் கவிராயர் பாருக், கலா பூஷணம் எ.எம்.புவாஜி, எ.எம்.நஜிமுதீன்(வரலாற்றாசிரியர்),கலாபூஷணம் ரைத்தலாவை அஸீஸ், யு.எல்.எம்.குவைலித் போன்றோரும் கம்பளையில் புலவர் பாவலர் நல்லதம்பி எல்.கே.என்.சாகிபு, கலாபூஷணம் நயிமா எ. சித்திக், உடுதெனிய கலாபூஷணம் றியாழ் ஆகியோரும் ஊடகத்துறையில் ஆர்வம் உள்ளவர்களான ஸ்டார் ராஸிக், எம்.எஸ்.குவால்தீன், எச்.எம்.மன்சூர், ஊசி ஆசிரியர் எ.எச்.எஸ்.ஹாசிம், கவிஞர் மடவளை கலீல், இனிகலை முஜீப் ஆகியோரின் தமிழ் ஆர்வமும் அவர்களின் முன்னெடுப்பும் குறிப்பிடத்தக்கவைகளாகும். கலாபூஷணம் பி.எம்.புன்னியாமீனுக்கு தனியான களம் அமைத்துக் கொடுக்கலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அறிஞர் சித்திலெப்பையின் 19ம் நூற்றாண்டுகால தமிழ்ப் பணிகளின் பின்னர் கண்டியில் இந்தப் பணியை முன் தொடர ஆக்கபூர்வமான படைப்புக்களை வழங்கி வரும் எஸ்.எம்.எ.ஹஸனை இங்கு மனநிறைவோடு எழுத்துலகில் தடம் பதிக்கலாம்.

இவரைப்பற்றி ஒரு தனிப்பந்தி எழுத மனம் இருப்பினும் இக் கட்டுரைத் தொடரை சுருக்கமாக நிறைவ செய்ய வேண்டியிருப்பதால் அவரைப்பற்றி ஒரிரு அம்சங்களை மாத்திரம் எழுதக் கருதுகிறேன். கலாபூஷணம் ஹசனைப் பற்றிய பாராட்டு மலர் ஒன்றை கலாநிதி எம்.எஸ்.எம்.அனஸ் 2004 ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஹஸனைப் பற்றி கருத்துரை வழங்கி இருப்பவர்கள் நாடறிந்த இலக்கிய கர்த்தாக்கள், ஊடகவியலாளர்கள், பொதுச் சேவையாளர்கள் என வகைப்படுத்திக் கூறலாம். இந்த வெளியீட்டை அணுகி அலசுவார்களாயின் மலைமுகடு போன்று ஹஸனின் தமிழ்ப்பணிகள் இடம் பெற்று வருவதை நோக்கலாம். அவர் ஒரு கல்விமான் இலக்கியவாதி, உரையாசிரியர், விரிவுரையாளர், சிறந்த நிர்வாகி, சாகித்திய பரிசுகளைத் தட்டிக்கொண்டவர். மலையக தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் பேச்சு, சொல், நடை, உடை, பாவனை என்பவற்றை நன்கு அறிந்தவர் என்ற வகையில் மலையக தமிழ்ப் பணிக்கு அவர் ஆற்றி வரும் சேவை தொடர வேண்டுமென்பதே எமது அவா. இவருக்கென பல பக்கங்களில் அவர் ஆற்றிய தமிழ்ப்பணியை தாராளமாக வெளிக் கொணர சந்தர்ப்பம் இனி வரும் காலங்களில் கிடைக்குமாயின் அலசி ஆராயலாம்.

# நவீன சினிமாவும் மலையக இளைஞர்களும்

இரா சிவலிங்கம் BA.DIP in Edu. Mphil. Teacher Talawakelle T.N.V.

மலையகத்தில் பெரும்பாலான பெருந்தோட்டப் பிரதேசங்களில் தென் இந்தியாவில் இருந்து காவிக் கொண்டு வந்த தென் இந்திய கலாசாரமும், மேற்கத்தேய கலாசாரமும் புரையோடிக் கிடக்கின்றன. இந்த தென் இந்திய கலாசாரத்தில் பல நல்ல விடயங்கள் காணப்படுகின்றன என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு உலகத்தில் தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ள நாடு இந்தியா என்றால் அது மிகையாகாது. இவ்வளவு அதிவுயர் கலாசாரத்திற்குரிய நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. இன்றைய நவீன சினிமாக்கள் உலகில் பாமர மக்களைப் படுத்தும் பாடு பெரும்பாடு. இந்த சினிமாக்களின் சீரழிவில் இருந்து இன்றைய இளைஞர்கள் மீள முடியாதவாறு சினிமாவின் ஆதிக்கம் இவர்களை ஆட்டிப்படைக்கின்றது என்பதை நாம் பல்வேறு ஊடகங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இன்று அநேகமாக பெருந்தோட்டப் பிரதேசங்களில் டிஸ்க் என்டனாக்கள் காணப்படுகின்றன. இதில் இந்தியாவிலிருந்து ஒளிபரப்பப்படும் அலைவரிசைகளே அதிகமாக உள்ளன. இந்த ஒவ்வொரு அலைவரிசையிலும் சினிமா சம்பந்தமான விடயங்களுக்கே முன்னுரிமைக் கொடுக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

குறிப்பாக திரைப்படங்கள், தொடர் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்பட பாடல்கள், திரை விமர்சனம், திரைக் கண்ணோட்டம், திரைக் கலைஞர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இன்று அறிவு பூரணமான நிகழ்ச்சிகள் என்பது மிக மிகக் குறைவு.

குறிப்பாக இன்று மலையகப் பிரதேசங்களில் உள்ள வீடுகளில் இந்த அலைவரிசைகளின் ஆதிக்கம் சக்கைப்போடு போடுகின்றது. வீடுகளில் எது இருக்கோ, இல்லையோ தொடர் நாடகம் இருக்கிறது. இவர்களின் வாழ்க்கையே இன்றும் நாடகமாக இருக்கின்றது. அதற்கொரு விடிவைத் தேடுவதற்கு வழி கண்டுப் பிடிக்கப்படவில்லை. இவர்களோ இந்திய அலைவரிசைகளில் காட்டப்படும் நாடகங்களில் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

இன்றையப் படங்களில் காட்டப்படும் பாலியல் ரீதியான காட்சிகளை பார்க்கும் இளைஞர் யுவதிகள், பாடசாலை மாணவர்கள் பல விபரீதமான ஆசைகளுக்குட்பட்டு தன்னுடைய வாழ்க்கையையே குட்டிச் சுவராக்கிக் கொள்கின்றார்கள்.

குறிப்பாக பால்ய திருமணங்கள் (இளவயது திருமணங்கள்) இன்று மலையகப் பிரதேசத்தில் தோன்றியுள்ளன. சில இளைஞர்கள் யுவதிகள் தோட்டத்தில் பெயர் பதிந்தவுடன் அல்லது 18-20 வயது வந்தவர்களும் உடனடியாக பரஸ்பரம் வாழ்க்கையில் பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறான வகையில் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றார்கள். அல்லது தாம் விரும்பும் இளைஞர்களை அழைத்துக் கொண்டு போய் விடுகின்றார்கள். சில இளைஞர்கள் பெண் பிள்ளைகளை பெற்றோர் அனுமதி இன்றி அழைத்துக் கொண்டு சென்று விடுகின்றார்கள்.

இதனால் இவர்களுக்கு சிறுவயதிலேயே குழந்தைகள் கிடைப்பதாலும் தொடர்ந்து பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமையும், வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாமையிலும் வாழ்க்கையில் தோல்வியும் மனவிரக்தியும் வரும் போது சிறு வயதிலே (வாழ்க்கையை ஆரம்பிக்கத் தேவையான வயது) எத்தனையோ வருடங்கள் வாழ்ந்து சலித்த ஒரு உணர்வு ஏற்பட்டுவிடுகின்றது. சிலரின் வாழ்க்கை விவகாரத்து வரை சென்றுவிடுகின்றது. இதற்கு சினிமாவும் தொடர் நாடகங்களும் ஒரு முக்கிய காரணியாகும்.

சிறு வயதில் ஏற்படும் ஆசைகளின் வெளிப்பாடு இறுதியில் சிலரின் வாழ்க்கையையே விபரீதங்களுக்கு உள்ளாக்கி விடுகின்றது. உதாரணமாக சினிமாப் பாடல்களை குடும்பத்துடன் கேட்கவும் ரசிக்கவும் முடியாது. வசிகரா பாடலும் (பாடல் காட்சிகளும்) கட்டிப்புடி கட்டிப்புடிடா, கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடி போலாமா, நான் ரெடி, நீங்க ரெடியா? போன்ற எத்தனையோ பாடல்களில் வெட்ட வெளிச்சமாக ஆபாச வார்த்தைகளும் காம உணர்வை தூண்டக் கூடிய காட்சி அமைப்புகளும் பாடல் வரிகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான பாடற் காட்சிகளைப் பார்க்கும் இளைஞர் யுவதிகள் சிறுவர்கள் மனம் தடுமாறி தன்னுடைய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு அப்பால் ஒரு படி மேலே சென்று தங்களுடைய குடும்ப கௌரவத்தையே வீதிக்கு கொணடு வந்து விடுகின்றாகள். இன்று பல சினிமாக்களில் வருகின்ற நகைச்சுவைக் காட்சிகளில் கூட அப்பட்டமாக செக்ஸ் வார்த்தைகளே காணப்படுகின்றன அத்துடன் படங்களில் வருகின்ற கதைகள், பெண்களின் உடைகள், பாடல் காட்சிகள், எல்லாம் இளைஞர் யுவதிகளை வேறு ஒரு உலகத்திற்கு அழைத்துச் செல்வதோடு ஒரு சில பெண்கள், ஆண்கள் சினிமாவில் வருகின்ற நவநாகரிக ஆடைகள் என்ற புதிய கலாசாரத்திற்குள் மூழ்கி தன்னுடைய நடையுடை பாவனையையே மாற்றிக் கொள்கின்றார்கள். சில குடும்பப் பெண்கள் கூட தொடர் சீரியல் பாாப்பதற்கு அடிமையாகி விட்டார்கள். இதனால் வீட்டில் கணவன் பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் முறையாகக் கவனிக்க முடியாமல் போகும் நிலை அநேகமான வீடுகளில் காணப்படுவதை அவதானிக்கலாம். சில வீடுகளில் குடும்பச் சண்டைகள் வருவதற்குக் கூட இந்த சீரியல்கள் காரணமாக இருக்கின்றன.

ஒரு சில வீடுகளில் முழுக் குடும்பமுமே தொலைக்காட்சி பெட்டிக்குள் மூழ்கிக் கிடப்பதே மிகக் கேவலமான விடயமாகும். வீட்டிற்கு யாராவது புதியவர்கள் வரும் போது கூட யார் அவரை வரவேற்பது யார் கதவைத் திறப்பது யார் உபசரிப்பது என்ற பல சங்கடங்கள் இவர்கள் மத்தியில் ஏற்படுகிறது. தொடர் பார்க்கும் போது சில முக்கியமான விருந்தினர்கள் வந்தாலும் கூட அவர்களை மனசார வரவேற்பதற்கு கூடத் தயங்குகின்றார்கள் காரணம் T.V சீரியல்களில் காட்டப்படும் சிளைமாக்ஸ் காட்சிகள். சில பெண்கள் தங்களது வீட்டு வேலையைக் கூட அவசர அவசரமாக செய்து வருகின்றார்கள். கோயில், விருந்தினர் வீடுகளுக்குச் சென்றால் அன்றைய தொடரைப் பார்க்க முடியாது என்ற ஏக்கத்துடனே வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள்.

அண்மையில் வட மாகாண பகுதிக்கு EYE அலைவரிசையை ஒளிபரப்புவதற்கு, அம்மக்களிடம் எவ்வாறான நிகழ்ச்சிகளை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என கேட்ட போது அவர்கள் தெரிவு செய்த நிகழ்ச்சிகள் க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் போன்ற பாடங்களில் புலமைப் பெற்ற ஆசிரியர்களின்

கலந்துரையாடல்கள் சாஸ்த்திரீய சங்கீதம், மருத்துவ நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒளிபரப்பும் படி கேட்டுள்ளார்கள்.
ஆனால் எமது பிரதேச மக்களை இவ்வாறு கேட்டிருந்தால் இவர்கள் தெரிவு செய்திருக்கும் நிகழ்ச்சிகளோ மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு (வடமாகாண) எதிர்மாறாக இருந்து இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றாக இருந்து ஒருவரை ஒருவர் முகம் பார்த்து கதைப்பது மிக மிகக் குறைந்து வருகின்றது. எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை கடைப்பிடிக்கும் பாக்கியம் இல்லாமல் போகின்றது. சில பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் படி படி என சொல்லி விட்டு, தாங்கள் தொடர் நாடகமும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்ப்பது எந்த விதத்திலும் நியாயம் ஆகாது. எமது பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி நிலை உயர்வுக்காக சில விடயங்களை தியாகம் செய்ய வேண்டும் (மதுவுக்கு, வீண் செலவு, ஆடம்பர செலவு, விழாக்கள், கொண்டாட்டச் செலவுகள்) பிள்ளைகளும் இதனை உணர்ந்து படிக்க வேண்டும்.

சில சமூகங்களில் உள்ள பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு வரும் வரை வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் பாவனையையும், வீண் செலவுகளை மிகக் குறைவாக வைத்திருப்பதைக் காணலாம். அவர்களின் ஒரே நோக்கம் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி நிலை உயர்வே என்பதை எமது சமூகம் உணர்ந்து அதன் படி செயற்பட வேண்டும்.

இன்று சில தோட்டங்களில் பகல், இரவு நேரங்களில் எல்லாம் இந்திய அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை சிறுவர் தொடக்கம் முதியோர் வரை பார்ப்பதை அவதானிக்கலாம்.

இன்று CD யில் படம் பார்ப்பதும் அதிகரித்து விட்டது. பாடசாலை மாணவர்களின் புத்தகங்களோடு ஒரு CD இருப்பதைக் காணலாம். உதாரணமாக ரெஸ்லின், விளையாட்டுச் CD, மற்றும் இன்றும் வாழ்க்கைக்கு உதவாத நிகழ்ச்சிகள் பற்றிய விடயங்களை காவிக் கொண்டு திரிவதைக் காணலாம். இன்றைய மாணவர்களில் பலர் செய்திகள், சிறுவர் நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் (கிரிக்கட் தவிர) போன்றவற்றைப் பார்ப்பது மிக மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

சினிமாவில் வருகின்ற சில சம்பவங்கள் எமது வாழ்க்கையில் நடந்திருக்கலாம். ஆனால் சினிமாவே வாழ்க்கையாகக் கூடாது. சினிமா வேறு, யதாரத்த வாழ்க்கை வேறு என்பதை சமூகத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் உணர வேண்டும். சினிமாவில் இருந்து விடுபடுவதற்கு கற்ற சமூகத்தவரும், புத்தி ஜீவிகளும், ஆசிரியர்களும் வழிகாட்ட வேண்டும். இதனை ஒரு சமூகப் பொறுப்பாக கொண்டு செயற்பட வேண்டும். எமது சமூகம் ஏனைய சமூகங்களைப் பார்த்தாவது திருந்துவதற்கு முயற்சிக்க வேண்டும். இன்று எமக்கு ஒரு சுய மரியாதைப் பிரச்சினை இருக்கின்றது. இதிலிருந்து விடுபடாவிட்டால் நாம் கல்வி நிலையில் மேலும் பின்னடைந்து செல்ல வாய்ப்புள்ளது. குறிப்பாக கல்வி கற்கும் மாணவர்கள், இளைஞர் யுவதிகள், குடும்பத்தில் உள்ள அனைவரும் சினிமா உலகில் பொறுப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சி என்பது ஒரு மிகச் சிறந்த ஊடகம். அது ஒரு பல்கலைக்கழகம். அதனை நாம் அனைவரும் முறையாகவும், நேர்த்தியாவும், திட்டமிட்டும் பயன்படுத்திக் கொண்டால் இது போன்று ஒரு ஊடகம் இருக்க முடியாது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், அலைவரிசைகளையும் தேர்ந்தெடுத்து பார்த்து ரசிக்கும் பழக்கத்தையும். மனப்பக்குவத்தையும் சிறுவயது முதலே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக கல்வி கற்கும் மாணவர்கள் இந்த விடயத்தில் மிகக் கவனமாகவும், நிதானமாகவும் இருக்க வேண்டியது அவர்களது கடமையும், பொறுப்பும் ஆகும்.

எனவே சினிமா என்பது ஒரு அற்புதமான ஊடகம். அதனைப் பயன்படுத்துவதிலேயே ஒரு சமூகத்தின் வெற்றி தங்கியுள்ளது. மலையகப் பிரதேசம் இன்னும் பல முன்னேற்றப் படிகளை தாண்டிச் செல்ல வேண்டி உள்ளது. இதனை உணர்ந்து இச் சமூகம் எதிர்காலத்தில் ஒவ்வொரு விடயங்களையும் தீர நோக்கோடு சிந்தித்து செயற்பட வேண்டும்.

# கல்வி மொழியும் சிந்தனையும்

எம்.ஜே.எப். முக்ரிமா
உதவி விரிவுரையாளர், முகாமைக் கற்கைத் துறை - பேராதனைப் பல்கலைக்கழகம்

வகுப்பறையில், குழந்தைகள் அவர்களது நல் வளர்ச்சிக்குத் தேவையானவற்றையும் சமுதாய முன்னேற்றத்துக்கு தேவைப்படுவன போன்று உதவுக் கூடியவற்றையும் கற்க ஆசிரியரது கற்பித்தல் துணை புரிகிறது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படையாக ஆசிரியர் - மாணவர்களிடையே காணப்படும் கருத்துப் பரிமாற்றம் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இக் கருத்துப் பரிமாற்றமானது பாடசாலைகளில் மொழி வழியே பெரும்பாலும் நிகழ்கிறது. ஆசிரியரது விளக்கங்கள், தொடுக்கும் வினாக்கள், எழுத்து, பேச்சு, மாணவர்களின் பதில்கள், தெரியாதவிடத்து மாணவர்கள் விளக்கம் கேட்பது, விடை எழுதுவது போன்றன யாவும் "மொழி" சார்ந்த கருத்து தொடர்புக்கு உதவுகின்றன.

வகுப்பறையில் ஆசிரியர், மாணவர்களிடையே கருத்து தொடர்பில் அல்லது கற்றலில் மொழி முக்கிய பங்கினை வகிக்கிறது. அதாவது கருத்துப் பரிமாற்றமானது மாணவர்களது அறிவையும் திறமைகளையும் வளர்க்க துணை செய்ய வேண்டும். இங்கு கருத்துத் தொடர்பு என்பது ஆசிரியர் கூற மாணவர்கள் கேட்பது மட்டுமன்று. மாணவர் கூறுவதை ஆசிரியர் கேட்பதுமாகும். எனவே கருத்துப் பரிமாற்றம் என்பது இரு முனைப்பட்டதாகும். (Reciprocal) இதில் ஆசிரியர் மாணவரது இடைவினை தொடர்பு (Interaction) அடங்கியுள்ளது. வகுப்பறை இடைவினையின் முக்கிய கருவியாக பயிற்று மொழி உள்ளது.

இங்கு பயிற்று மொழி அல்லது மொழி என்பது தாய் மொழியைக் குறிப்பதாக அமைகிறது. பிற மொழிகளைப் பொறுத்தவரை முக்கியமாக ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர் மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கான பயனுள்ள சாதனமாக அமைதல் இயலாது. அதனாற் தான் வகுப்பறையில் கற்றுக் கொடுப்பதற்குரிய மொழியாக எந்த மொழி அமையலாம் என்ற வினாவிற்கு "யுனெஸ்கோ" போன்ற உலகளாவிய நிறுவனங்கள் படிக்கும் மாணவரின் தாய் மொழியே அமைய வேண்டும் என்பதை பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளன.

மனிதன் மாத்திரமே மொழியைத் தொடர்பு கொள்ளும் ஊடகமாகப் பயன்படுத்தும் இயற்கையான ஆற்றலினைப் பெற்றுள்ளான். "மொழி" என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்தினால், ஒழுங்கமைக்கப்பட்ட ஒலிக் குறியீடுகளின் ஒரு தொகுப்பு எனக் கூறலாம். இந்த ஒலிக் குறியீடுகளைப் பயன்படுத்தியே மனிதன் சிந்திக்கின்றான். சிந்திக்கின்றவற்றை வெளிப்படுத்துகிறான், அவ்வகையில் ஒரு குழந்தையின் மொழி வளர்ச்சியில் ஆரம்பச் சூழல் அக் குழந்தையின் பெற்றோரும் உறவினருமாவர். அவர்களிடமிருந்தே சொற்களைப் பெற்று களஞ்சியப்படுத்திக் கொள்கிறது. பிரித்தானியக் கல்வியில் அறிஞரான "அல்பிரட் வைட்" என்பவர் "மனிதன் பிறந்தது முதல் ஐந்து ஆண்டுகளிலே மொழியைக் கற்றல் என்ற சிறப்பான ஆற்றலைப் பெற்றுக் கொள்கின்றான். இது ஒரு புதுமையான செயற்பாடாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கற்பதைச் சரியாகப் புரிந்துக் கொண்டு கற்பதற்கும், புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துவதற்கான படைப்பாற்றலைப் பெறுவதற்கும், கல்விக்கும் சமூகத்திற்குமான ஒன்றிணைப்பினை ஏற்படுத்துவதற்கும், கற்பதை தெளிவாக விரைவாக, எளிதாக,

முழுமையாகக் கற்பதற்கும் தாய் மொழியில் கற்பதே உகந்தது என கல்வியியல், உளவியல், சமூகவியல் துறை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கல்வியைச் சமூகமயமாக்குவதில், பரவலாக்குவதில் அச் சமூகத்தின் மொழி முக்கிய பங்காற்றுகிறது எனலாம். கற்றோருக்கும் கல்லாதோருக்கும் அல்லது மற்ற சமூகத்தினருக்கும் இடையில் இடைவெளி இருக்கக் கூடாது. கல்வியும, வாழ்வும் இணைந்திருத்தல் வேண்டும். ஒருவர் தாம் பெற்ற கல்வியால் தானும் பயனடைந்து பிறருக்கும் அதனைப் பயன்படச் செய்தல் வேண்டும். ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையினராக வாழும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆங்கிலம் பேசாத மக்களுக்கு அவர்களின் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று 1976ல் சட்டம் இயற்றப்பட்டது. அந்தளவுக்கு தாய்மொழியில் கற்பவர்கள் விரைந்து கற்கின்றனர் என்பதையும், அவர்கள் தெளிவாகக் கற்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் முடிவாகக் கூறியிருக்கின்றார்கள்.

மேலும் கல்வியை சமூகத்திற்காகப் பயன்படுத்துவதில் "மொழி" அடிப்படையாக அமைகிறது. இதன் மூலம் கற்பிக்கப்படும் கல்விக்கும் கற்கும் சமுதாயத்திற்கும் தொடர்பிருத்தல் மிக மிக அடிப்படையான அம்சம் எனப் புலப்படுத்தப்படுகிறது. தாய்மொழி வழிக் கல்வி என்பது ஒரு கல்வித் தத்துவம் என்பதோடு சமூகப் பண்பாட்டு வளர்ச்சியையும், மன நிறைவையும் நோக்கமாகக் கொண்டதாகும். சமூகத்தின் எல்லா நிலையிலுள்ள மக்களுக்கும் உரிய ஒன்றாக ஆக்குவதில் தாய்மொழி மூலமான கல்வி முக்கிய பங்காற்றுகிறது. (ஏனைய, பிற மொழிகளுடன் ஒப்பிடுகையில்)

ஒரு குழந்தை எந்த மொழியோடு வளர்கிறதோ, எந்த மொழியோடு வாழ்கிறதோ அந்த மொழியே அக் குழந்தையின் சுய சிந்தனைக்கும், அதன் வெளிப்பாட்டிற்கும் உகந்த மொழியாக அமையும் என்பதில் எந்த வித ஐயமுமில்லை. மூளையில் தோன்றும் சிந்தனையானது அடுத்த கனமே, தாய்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறுகின்றன என்பது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும். கற்பித்தலின் மிகப் பிரதான நோக்கமே சிந்தனையைத் தூண்டுவது தான். இதன் மூலம் ஆளுமை வளர்ச்சியும், சுய சிந்தனா சக்தியும் மேலோங்கி உயர் நிலையை அடையச் செய்கிறது. பிற மொழிகளை விட சிந்தனை மொழியாக, சிந்தனைக்குரிய கருவியாகத் தாய் மொழி இருப்பதனால் கற்றல். கற்பித்தல் செயற்பாட்டிற்கு சிறந்தவொரு வாய்ப்பாக அமைகிறது எனலாம்.

மற்றும் தாய்மொழி மூலம் கற்றல் என்ற எண்ணக்கருவினை சற்று ஆழமாக உற்று நோக்கினால், இத் தாய்மொழியானது உள்ளத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது. உளவியல் நோக்கில் கல்வித் துறைகளில் தாய் மொழி மூலம் கல்வி அவசியமாகக் கருதப்படுகிறது. ஒருவன் ஒரு மொழியைக் கற்கலாம், கற்பிக்கலாம், இன்னொருவருடன் கருத்துப் பரிமாறலாம். ஆனால் ஒருவன் சிந்தனை செய்வதென்பது அவன் அறிந்தும் அறியாமலும் தாய்மொழியில் உருவாகியப் பின்னே இன்னொரு மொழி மூலமாக அல்லது பிற மொழி மூலமாக அமைகிறது. பிற மொழிகளைவிட சிந்தனையைத் தூண்டும் திறன் தாய் மொழிக்கே மிக அதிகமாகக் காணப்படுகிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். காரணம் பிற மொழிகளை மொழிப் பெயர்க்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இது சிந்தனையைத் தூண்டுவதிலும் பார்க்க மொழி பெயர்ப்பதில் அதிக காலம் செலவழிக்கப்படுவதாக அமைகிறது. அறிவு, பண்பு என்பவற்றை வளர்ப்பதை

அடிப்படை நோக்கமாகக் கொண்டமைந்த கல்வி ஒருவனின் சுய சிந்தனையில் தாக்கத்தினை ஏற்படுத்துமாயின் அதுவே அவன் பெற்ற கல்வியின் வெற்றிச் சின்னமாகும். ஒருவனின் சுய சிந்தனை மற்றும் படைப்பாற்றல் ஆகியன உள்ளத்தோடு சம்பந்தப்பட்டவையாகும். ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு தாய்ப்பால் எப்படியோ, ஒருவனின் உள வளர்ச்சிக்குத் தாய் மொழி மூலமான சிந்தனை அவசியமாகும். ஆகவே பிற மொழிகளைவிட, தாய்மொழி மூலம் கற்றலானது செயற்திறனாக அமைகிறது.

"பூசல்களும் போர்களும் மனித உள்ளங்களில் தான் தொடங்குகின்றன. எனவே உலக அமைதிக்கான அரண்கள் அவற்றிலே தான் அமைக்கப்பெற வேண்டும். இதற்கான முக்கியக் கருவியாக கல்வி உருப்பெறுதல் வேண்டும்" (யுனெஸ்கோ" அறிக்கை)

# மலையகத் தமிழ் இளைஞர்களும் மனித உரிமை நிலையும்

## UP- COUNTRY TAMIL YOUTHS AND STATE OF HUMAN RIGHTS

இரா. ரமேஸ்
அரசறிவியல் துறை - பேராதனை பல்கலைக்கழகம்

I. அறிமுகம்

இலங்கையின் பெருந்தோட்ட பயிராக்கவியல் செயற்பாடுகளுக்கென பிரித்தானியரால் இத்தீவுக்கு கொண்டு வரப்பட்டவர்கள்தான் இன்றயை மலையத் தமிழர்கள். 18ம் நூற்றாண்டின் குறுதி கசிந்த சோக வரலாற்றின் உலகறியாத மக்கள் கூட்டமாக இன்று இம்மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும், மனித குல நாகரீகம் வெட்கித்து நிற்குமளவுக்கு இம்மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு கிடந்தபோதும், நாளம் சிவக்கும் வண்ணம் தம் அயராத உழைப்பின் மூலம் இந்நாட்டின் மத்திய மலைநாட்டின் காணக வெளிகளில் இந்நாட்டுக்கு பெரும் கீர்த்தியையும் பொருளாதார ஊற்றையும் உருவாக்கி இலங்கையின் ஒட்டுமொத்த அபிவிருத்தியிலும் காத்திரமான பங்களிப்பினை வகித்து வருகின்றார்கள்.

மனித நேயம் வென்றெடுத்த நாகரீகத்தின் எந்தவொரு வினைப்பயனையும் இம்மக்கள் அனுபவிக்க கூடாது என்பதிலும் அம்மக்கள் ஒரு அரசியல் சக்தியாக வளர்ந்துவிடக்கூடாது என்பதிலும் தமக்கென எத்தகைய உரித்தையும் கொண்டிருக்க கூடாது என்பதிலும் காலம் காலமாக பதவிக்கு வந்த அதிகார வர்க்கத்தினர் மிகவும் சிரத்தையுடன் இருந்தனர். வேறு வார்த்தையில் கூறுவதாயின் இம்மக்களை நவீன அடிமைகளாக வைத்து மலிவு ஊழியர்களாக (Cheap Labour) பயன்படுத்தி தொடர்ச்சியாக சுரண்டினர்.

நாட்டின் பொருளாதார கட்டுமானத்தை பலப்படுத்த அயராது பாடுபட்ட இம்மக்களின் உழைப்பு நாடு வெள்ளையரிடமிருந்து விடுதலைப் பெற்றுக் கொள்வதில் பெரிதும் பங்காற்றியது என்பதனை மறந்துவிட முடியாது. ஆனால், இங்கு வேடிக்கை என்னவென்றால் நாடு சுதந்திரம் பெற்ற போது இம்மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டமையாகும். வாழ்வுரிமை மறுக்கப்பட்டமையானது இம்மக்களை அரசியல் அநாததைகள் என்ற அசாதாரணமான நிலைக்கு தள்ளியதுடன் அனைத்து அரசியல் சமூக பொருளாதார உரிமைகளையும் அனுபவிக்க முடியாதவாறு ஒடுக்கப்பட்டார்கள்.

இதன் விளைவாக ஏனைய சமூகத்தவர்கள் அனுபவித்த அடிப்படை மனித உரிமைகளை இம் மக்கள் அனுபவிக்க முடியாத நிலை உருவாகியது. சர்வதேச ரீதியாக இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல மனித உரிமை நியமங்களையும் (International Human Rights Standards) அனுபவிக்க முடியாத நிலைக்குள்ளானர்கள். சுமார் மூன்று தசாப்த காலமாக சகல அடிப்படை மனித உரிமைகளையும் அனுபவிக்க முடியாத, மனித கௌரவத்துடன் (Human Dignity) வாழ முடியாத ஒரு மக்கள் கூட்டமாக இந்நாட்டில் காட்சியளித்தார்கள். குறிப்பாக 1970 ம் ஆண்டு ஆகும் வரையில் தாம் இழந்த அரசியல் மற்றும் ஏனைய சமூக பொருளாதார உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்தனர்.

1970 களுக்கு பின்னரும் சகல மனித உரிமைகளுடனும், ஒரு நாகரீகமான மக்கள் கூட்டமாக வாழும் சூழமைவு உருவாகவில்லை. படிப்படியாக தேசிய மற்றும்

சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நியாயப் பரசாரங்களின் ஊடாகவே (Lobby and Advocacy) ஓரளவேனும் அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுக்க முடிந்தது என்பது மனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.

## II. மலையக தமிழ் இளைஞர்கள்

18- 35 வயதுக்கிடைப்பட்டவர்களை இளைஞர்கள் என்பது வழக்கமாகும். மலையக சமூகத்திலும் இத்தகைய வயதுக்கிடைப்பட்ட லட்சகணக்கான இளைஞர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் சகல பெருந்தோட்ட மாவட்டங்களிலும் பறந்தும் செறிந்தும் வாழ்கின்றார்கள். இவர்களின் எண்ணிக்கையினை சரியாக வரையறுப்பது கடினமாகக் காணப்படுகின்றது. அது குறித்த சரியானத் தரவுகள் திரட்டப்பட்டதாக இதுவரையில் தெரியவில்லை. ஆயினும், மொத்த இளைஞர்களில் சுமார் 48% மானோர் தொழில் அற்றவர்களாக காணப்படுகின்றார்கள். போதிய கல்வித் தேரச்சியின்மை, குறைந்த மட்ட விஞ்ஞான தொழிநுட்ப அறிவு, குறைந்த மட்ட தொழில் திறன், குறைந்த வெளி உலக அனுபவம், குறைந்த மட்ட துறைசார் பயிற்சி ஆகிய பல பிரச்சினைகள் இவர்கள் மத்தியில் காணப்படுகின்றன. அதனையும் தாண்டி, ஒரு சில படித்த இளைஞர்களும் அரச தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சம் தோட்ட முகாமைத்துவ தொழில்களில் பாரபட்சம் அரச சேவைகளில் பாரபட்சம் புறக்கணிப்புக்கள் அந்நியப்படுத்தல் ஆகிய பல பாகுபாடுகளுக்கு உட்பட்டு வருகின்றார்கள். அதற்கு விதிவிலக்காக ஒரு சிலர் தான் பாடசாலைக் கல்வியில் பெற்றுக் கொண்ட அறிவினை மூலதனமாகக் கொண்டு ஒரு சில ஏற்றங்களை அடைந்து கொள்கின்றார்கள். இன்னும் சிலர் நீண்ட பிரயத்தனங்களின் மூலம் பல்கலைக்கழக மற்றும் கல்வியியல் கல்லூரியில் அனுமதிப் பெற்றுக் கொள்வதன் மூலம் தமது எதிர்காலத்தை செம்மைப்படுத்திக் கொள்கின்றார்கள்.

உண்மையில், மலையக இளைஞர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற தொழில் வாய்ப்பு என்பது ஆசிரியர் தொழிலுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதானது வருந்தத்தக்க விடயமாகும். ஏனைய துறைகளில் இவர்களின் பங்கு ஒப்பிட்டளவில் மிக குறைவாகும். எவ்வாறாயினும், போதிய கல்வித் தேர்ச்சி இன்மையால் நீண்ட காலம் நிரந்தர தொழில் இன்றி பெற்றோர்களின் உழைப்பில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றார்கள். இவ்வாறு நீண்ட காலம் தங்கியிருப்பதனால் ஏற்படும் வறுமை மற்றும் அதிகரித்த குடும்ப சுமை காரணமாக தோட்டங்களை விட்டு புலம்பெயர்ந்து நகரப்புறங்களை நோக்கி தொழில் நாடி செல்கின்றார்கள். இவ்வாறு தொழிலுக்கு செல்லும் இவ் இளைஞர் யுவதிகள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளளும் மனித உரிமை பிரச்சினைகள் அதிர்ச்சியூட்டுவனவாக காணப்படுகின்றன.

## III. மனித உரிமை நிலை குறித்த மதிப்பீடு

1980 களின் பின்னர் நாட்டில் ஆயுத மோதல் அதிகரிக்கலாயின. அதனுடன் இணைந்த வகையில் மனித நாகரிகத்திற்கு முரணான செயற்பாடுகளும் அதிகரித்தன. குறிப்பாக, மனித உரிமை மீறல்கள் சட்டத்திற்குப் புறம்பான எதேட்சை கைது, தடுத்து வைத்தல், தடுப்புக் காவலில் சித்திரவதை செய்தல், காணாமல் போதல் ஆகிய சட்ட விரோத செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் அதிகரித்தன. ஆரம்ப காலங்களில் இடம்பெற்ற சட்டத்திற்குப் புறம்பான கைது, தடுப்ப மற்றும் சித்திரவதை ஆகியன மலையக இளைஞர்களை பொருத்தவரை ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கவில்லை. ஆயினும் 90 களின் பிற்பகுதியிலும்,

அதே போல் இன்றைய சூழ்நிலையில் இவ் இளைஞர்களை பொறுத்தவரை இது மபெரும் பிரச்சினையாகவே காணப்படுகின்றது. அந்தவகையில், இக் கட்டுரையானது மலையக தமிழ் இளைஞர்களின் அடிப்படை மனித உரிமைகளை முடக்குவதில் பயங்கரவாத தடுப்பு சட்டமும் (Prevention of Terrorism Act) அவசரகாலச் சட்டமும் (Emergency Regulations) எவ்வாறு பாதிப்பு செலுத்துகின்றன என்பதனை ஆராய்வதாக அமைகின்றது.

மலையக இளைஞர்களை சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்வதிலும் (Arbitery Arrest), நியாயமான காரணங்கள் இன்றி நீண்ட காலம் தடுத்து வைப்பதற்கும் (Arbitery Detention), சித்திரவதைகளை மேற்கொள்வதற்கும் மேற்சொன்ன இரு சட்டங்களும் காத்திரமான பங்களிப்பினை வகிக்கின்றன. சில சமயங்களில் சாதாரண குற்றவியல் சட்டத்தின் (Criminal Law) கீழ் கைது செய்து அவசரகால அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்படுகின்றார்கள். வேறும் சில சந்தர்ப்பங்களில் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்து பயங்கரவாத சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்துவைக்கப்படுகின்றார்கள். அண்மைக் காலங்களில் இடம்பெற்ற கைதுகள் மேற் கூறிய எந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன என்ற தெளிவற்றத் தன்மையினை ஏற்படுத்தின.

எவ்வாறாயினும், இன்று மலையக தமிழ் இளைஞர்கள் கொழும்பு கண்டி மற்றும் பெருந்தோட்டங்களை அன்டிய நகர்ப்புறங்களில் தொழில் செய்து வருகின்றார்கள். இவர்கள் பொதுவாக கடைகள், காரியாலயங்கள், உணவகங்கள், ஆடை தொழிற்சாலைகள், விடுதிகள், நடைபாதை வியாபாரம் ஆகிய முறைசார்ந்த மற்றும் முறை சாரா தொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். சிலர் தொழில் புரியும் இடத்திலும் வேறும் சிலர் வேறு இடங்களில் தங்கியிருந்தும் தொழில் செய்து வருகின்றார்கள். மிகக் குறைந்த ஊதியத்திற்கு கடின உழைப்பில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கின்ற அந்த வருமானத்தை நாளாந்தம் அல்லலுறும் தனது குடும்பத்திற்கு அனுப்பி வைக்கின்றார்கள். தனது குடும்பத்தை முன்னேற்ற வேண்டும், தம்பி தங்கைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும், வருமையின் கொடுரப் படியில் இருந்து தனது குடும்பத்தை மீட்க வேண்டும் என பல கனவுகளுடன் தொழில் செய்து வருகின்றர்கள்.

ஆனால் நாட்டில் இடம்பெற்றுவருகின்ற யுத்த சூழல் மற்றும் அவ்வப்போதும் தொடர்ச்சியாகவும் இடம்பெறுகின்ற பதற்ற நிலமைகள் இவ்விளைஞர் யுவதிகளின் மனித உரிமைகைளை வெகுவாகவே பாதித்துவிடுகின்றன. அண்மைய பல்கலைக்ழக ஆய்வொன்றின் படி இன்று ஏனைய சமூகத்து இளைஞர்களைவிட மலைய தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படும் விகிதம் அதிகமாக காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இதற்கு இவர்கள் தமிழர் என்ற அடையாளத்தை கொண்டிருப்பது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றன என்பது கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். மறுபுறமாக, இத்தகைய சூழ்நிலைகளில் கைதுகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டமும், அவசரகால சட்டமும் ஒரு முக்கிய உபாயமாக பயன்படுத்தப்படுகின்றன.

மலையகத்திலும் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள், அதற்கு ஆதரவானவர்கள், அதனுடன் தொடர்புடையவர்கள் ஊடுருவியுள்ளார்கள் என்ற நியாயமற்ற, போதிய ஆதாரம் இல்லாத வாதங்களை முன்வைத்தே மலையக தமிழ் இளைஞர் யுவதிகளின் மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய பின்புலத்திலேயே அண்மைக்காலங்களில் நகர்ப்புறங்களில் தொழில் செய்து வரும் பெருந்தொகையான இளைஞர் யுவதிகள் சட்டத்துக்குப் புறம்பாக நியாயமற்ற முறையில் கைது செய்து நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுவதுடன், கொடூரமான சித்திரவதைகளுக்கும் ஆளாகின்றார்கள். இவ்வாறான கைதுகள் அவர்களுக்குள்ள பல அடிப்படை மனித உரிமைகளை பாரதூரமான முறையில் மட்டுப்படுத்தி விடுகின்றன. மறுபுறமாக இவை வெறுமனே மனித உரிமை மீறல்களாக மாத்திரம் அன்றி சுதந்திரமாக வாழ்வதற்குள்ள உரிமையினையும் மட்டுப்படுத்துவதாக அமைகின்றன.

இடம்பெறுகின்ற அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கெதிராக சட்ட நிவாரணம் (Legal Redress) பெறும் வழிமுறைகள் இவர்களுக்கு தெரிவதில்லை. அதற்கான கல்வி பின்புலமும் இவர்களுக்கிருப்பதில்லை. உண்மையில், இடம்பெறுகின்ற கைதுக்கான காரணங்களை பார்க்கும் போது அவை பெரும்பாலும் நியாயமற்றவையாகவும், சில காரணிகள் வேடிக்கையானவையாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக, தொழில் செய்யும் போதும், தொழில் முடிந்து தங்குமிடத்திற்கு திரும்பும் போதும், தொழிலுக்கு செல்லும் போதும், இரவு வேளையில் உணவருந்தி தங்குமிடத்திற்கு திரும்பும் போதும், இரவில் நடமாடும் போதும், திரைப்படங்களுக்கு செல்லும் போதும், தமது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அரச அலுவலகங்களுக்கு சென்று வரும் போதும் கைது செய்யப்படுகின்றார்கள். ஒரு சிலர் கமரா பொருத்திய கையடக்க தொலைப் பேசியை வைத்திருந்தமைக்காகவும், இரவு புகையிரதத்தில் தமிழில் உரையாடியமைக்காகவும், அடையாள அட்டை, பொலிஸ் பதிவு, கிராம மற்றும் தோட்ட முகாமையாளரின் அத்தாட்சிக் கடிதம் ஆகியன இருந்தும் தமிழர் என்பதற்காக கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். வேறும் சில சந்தர்ப்பங்களில் மேற்சொன்ன அடிப்படை ஆவணங்களில் ஏதேனும் ஒன்று இல்லாத காரணத்தினால் தமிழர் என்ற அடையாளத்தினை மனதில் கொண்டு கைது செய்கின்ற ஒரு பரிதாபகரமான நிலைக்கு மலையக இளைஞர்கள் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பட வேண்டிய விடயமாகும்.

கைது செய்யும் போது அதற்கான நியாயமான காரணங்களை பொலிஸார் தெளிவுப்படுத்துவதில்லை. எத்தகைய அறிவித்தல்களும் இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். குறித்த நபரை கைது செய்தமை தொடர்பாக அவரின் வீட்டாருக்கு உறவினர்களுக்கு அல்லது நண்பர்களுக்கு அறிவிக்கும் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. கைதினை உறுதிப்படுத்தி ரீது வழங்கப்படுவதில்லை. குறித்த காலத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவதில்லை. அவர்களை விடுதலை செய்வது குறித்து காவல் துறையினர் அக்கறைக் காட்டுவதில்லை. வீணான ஒழுங்கு விதிகளையும், கால தாமதத்தினையும் கடைப்பிடிப்பர். மறுபுறமாக, பொலிஸ் தடுப்பின் போது இவ்விளைஞர்களின் ஆடைகள் களையப்பட்டு பல துஸ்பிரயோகம் மற்றும் வார்த்தைகளால் சொல்ல முடியாத சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றார்கள். ஆயினும், இது குறித்த தகவல்களை இவர்கள் வெளியிடுவதில்லை. அதற்கு தன்மானம், சுய கௌரவம் மற்றும் எதிர்காலம் மீதான அச்சம் ஆகியன தடையாக காணப்படுகின்றன.

கைதுகளின் போது மலையக தமிழ்ப் பெண்கள் ஒரு அசாதாரணமான நிலைக்கு உள்ளாகின்றார்கள். குறிப்பாக, போதிய பாதுகாப்பற்ற நிலையில் தடுத்து

வைக்கப்படுகின்றார்கள். சில சமயங்களில் ஆண் பொலிஸாரின் அச்சுறுத்தல் மற்றும் பலாத்காரம், தவறான வார்த்தைப் பிரயோகம், பாலியல் துஸ்பிரயோகம் ஆகிய பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார்கள். இத்தகைய துஸ்பிரயோகங்களை இப்பெண்களும் வெளிப்படுத்த விரும்புவதில்லை. எதிர்காலம் மீதான அச்சம், குடும்ப கௌரவம், தனது சுய கௌரவம், எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மை ஆகிய காரணங்களால் இது குறித்த உண்மைகளை வெளிப்படுத்துவதில்லை.

எவ்வாறாயினும், இத்தகைய மனித உரிமை மட்டுப்பாடுகள் அல்லது மீறல்கள் யாவுமே வெறுமனே ஒரு குற்றமாக மாத்திரம் அன்றி அரசியல் திட்டத்தின் மூன்றாம் அத்தியாயத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சித்திரவதைக்கும் இழிவான மனித நடத்தைக்கும் உட்படாதிருக்கும் உரிமை (உறுப்புரை 11), சட்டத்தின் முன் சமப் பாதுகாப்பினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை, ஏதேட்சை கைது (உரு 13(1), ஏதேட்சை தடுப்பு (13(2), ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை, ஒன்று கூடுவதற்குள்ள உரிமை (14(1), கலாசார உரிமை (14(1)ஊ), தொழில் உரிமை (14(1)எ), நடமாடும் உரிமை (14(1)ஏ), பேச்சு சுதந்திரம் (14(1)ஆ), விரும்பிய இடத்திற்கு செல்வதற்கும் வசிப்பதற்குமான உரிமை ஆகிய பல அடிப்படை மனித உரிமைகளை பாரதூரமான வகையில் மட்டுப்படுத்தி விடுகின்றன என்பது மனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.

எமது நாட்டை பொருத்தவரை இத்தகைய உரிமை மீறல்களுக்கு எதிராக நிவாரணம் பெறும் பொறிமுறைகளும் சரியாக இயங்குவதில்லை. எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய அசாதாரணமான சூழ்நிலையின் காரணமாக மலையக தமிழ் இளைஞர் யுவதிகளின் மனித உரிமைகள் பாரிய அச்சுருத்தலுக்கு உள்ளாகி வருகின்றது என்ற யதார்த்தத்தினை பற்றி சிந்திப்பது அவசியமாகும். உண்மையில் அரசியல் திட்ட உரிமைகள் மாத்திரம் அன்றி இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள பல சர்வதேச மனித உரிமை நியமங்களையும் இத்தகைய ஏதேட்சை கைது , தடுப்பு மற்றும் சட்டத்துக்கு புறம்பான சித்திரவதைகள் ஆகியன வெளிப்படையாவே மீறிவிடுகின்றன.

மேற்சொன்ன அரசியல் திட்ட அடிப்படை உரிமைகள் யாவும் இலங்கை ஏற்றுக் கொண்டுள்ள சர்வதேச மனித உரிமை நியமங்களான அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், (Universal Declaration of Human Rights) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (International Convention on Civil and Political Rights), சமூக பொருளாதார கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் International Convention on Economic Social and Cultural Rights) சித்திரவதைக்கெதிரான சர்வதேச சமவாயம் (Convention Against Torture) அனைத்து வகையான இனரீதியான பாகுபாடுகளுக்கெதிரான சர்வதேச சமவாயம் (Convention on Elimination of All forms of Racial Discrimination) ஆகியவற்றிலும் வளியுருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

இதில் சித்திரவதைக்கெதிரான சமவாயம் 1994ம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தில் உள்நாட்டு சட்டமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் நடைமுறையில் நியாயமற்ற சந்தேகத்தில் கைது செய்யப்படும் மலையக தமிழ் இளைஞர் யுவதிகள் தடுப்புக்காவலின் போது அதிக சித்திரவதைகளையே அனுபவித்து வருகின்றார்கள் என்பதனை அண்மைய பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் அறிய முடிந்தமை மனங்கொள்ள வேண்டிய விடயமாகும். அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திலும் சித்திரவதைகளில் இருந்து பாதுகாப்பு

பெறும் உரிமை எச்சூழ்நிலையிலும் பாராதீனப்படுத்த முடியாது என வலியுறுத்தப்பட்டுள்ளமை ஒரு விசேட அம்சமாகும். ஆனபோதிலும் நடைமுறை அதற்கு எதிர்மறையாகதாகவே காணப்படுகின்றது. சந்தேக நபர்களிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தமிழில் பதிவு செய்யப்படுவதில்லை. பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையில், இது தாய் மொழியில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்குவதற்கான உரிமையினை மறுதலிப்பதாக அமைகின்றது.

இன்று மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தேசிய மட்டத்தில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திற்கும் நிவாரணம் பெற்றுக்கொள்ளவும் அதற்கான நியாய பிரசாரங்களை மேற்கொள்ளவும் பரந்தளவில் வாய்ப்புக்கள் உள்ளன. ஆயினும் அதற்கான கல்வி பின்புலம் மற்றும் மனித உரிமை தொடர்பான விழிப்புண்வு, சர்வதேச வலைப்பின்னல் இன்னும் எமது சமூகத்தில் பூரணமாக வளரவில்லை என்றே சொல்ல வேண்டும். உண்மையில் இது ஒரு வருந்ததக்க விடயமாகும்.

IV. முடிவுரை

எவ்வாறாயினும், மலையக தமிழ் இளைஞர் யுவதிகள் அண்மைக்காலமாக தொடர்ந்தும் மனித உரிமை பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள் என்பது எவராலும் மறுதலிக்கப்பட முடியாத யதார்த்தமாகும். இது குறித்து சிந்திப்பதும், அதற்கெதிரான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இன்றைய அவசரத் தேவையாகும். இத்தகைய நடவடிக்கைகளை அரசாங்க மட்டத்திலும், மலையக சமூக மட்டத்திலும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, அரசாங்க மட்டத்தில் விசேட கொள்கைத்திட்டங்களை உருவாக்கி, மலையக இளைஞர் யுவதிகளுக்கான மனித உரிமை பாதுகாப்பு பொறிமுறை (Human Rights Protection Mechanism) ஒன்றினை உருவாக்க வேண்டும். அதன் மூலம் இவ்விளைஞர்களின் அடிப்படை மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்த வேண்டும். இதற்கு அரசியல் திட்ட ரீதியான மற்றும் நிறுவன, அரசியல் ரீதியான ஏற்பாடுகள் பெரிதும் அவசியமாகும்.

மலையகத்தில் செயற்பட்டு வரும் சிவில் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இது குறித்து அதிக கரிசனை காட்ட வேண்டும். மனித உரிமை விழிப்புணர்வினை இவ்விளைஞர் யுவதிகள் மத்தியில் ஏற்படுத்த துணை புரிய வேண்டும். நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் சட்ட உதவிகளை தெளிவுப்படுத்த வேண்டும். மலையகத் தமிழ் இளைஞர்களின் மனித உரிமைகளுக்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நியாய பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்திற்கும் அதன் எதேட்சைத்தனமான செயற்பாடுகளுக்கும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வழிசெய்ய வேண்டும்.

மலையக அரசியல் தலைமைகள் இது குறித்த மிக அக்கறையுடன் செயலாற்ற வேண்டும். கைது செய்தல், தடுத்து வைத்திருத்தல் மற்றும் சித்திரவதைகளுக்கான அடிப்படைக் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்து இளைஞர் யுவதிகளினதும் அடிப்படை ஆவணப் பிரச்சினைகளை தீர்க்க விசேட கொள்ளைத் திட்டம் ஒன்றினை வகுக்க வேண்டும்.

நகர் புறங்களில் தொழில் செய்யும் மலையக இளைஞர்களின் பாதுகாப்புக்காக மனித பாதுகாப்பு பொறிமுறை (Human Security Mechanism) ஒன்றினை குறித்த நகர

பொலிஸ் தலைமையகத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். இதற்காக நகர்ப்புறங்களில் தொழில் செய்யும் இளைஞர்கள் தொடர்பான சரியான தரவுகளைத் திரட்ட வேண்டும். அவற்றைக் குறித்த பொலிஸ் பிரிவில் ஒப்படைக்க வேண்டும். புதிதாக தொழிலுக்குச் செல்பவர்களை அதில் பதிவு செய்து கொள்ள வேண்டும். கல்வித் தேர்ச்சி குறைந்தோரும் நிரந்தர தொழில் அற்றவர்களுமே இச்சட்டங்களின் கீழ் அதிக அளவில் கைது செய்யப்படுகின்றார்கள். ஆகையால் இப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அறிவு சார் சமூகம் ஒன்றினை கட்டியெழுப்புவது அவசியமாகக் காணப்படுகின்றது.

கைது செய்தல் தொடர்பாக காணப்படுகின்ற சட்ட செயன்முறையினை (Procedures) சரியாகப் பின்பற்ற வழிசெய்ய வேண்டும். தொழில் செய்யும் மலையக இளைஞர்களுக்கும், மலையக அரசியல் தலைமைகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், மனித உரிமை சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றுக்கிடையில் ஒரு சீரான வலைப்பின்னலை (Network) உருவாக்க வேண்டும். இவை இடம்பெறுகின்ற எதேட்சைக் கைதுகளை, தடுப்புக்களை மற்றும் சித்திரவதைகளை உடனுக்குடன் அறிந்துக் கொள்ளவும், குறித்த நபரின் வீட்டாருக்கு, உறவினர்களுக்கு அறிவிக்கவும் விடுதலைச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பெரிதும் துணைபுரியும். அதேவேளை இவ்விளைஞர்களும் தற்பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு பதற்ற சூழ்நிலைகளில் அநாவசியமாக நடமாடுவதனை தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும்.

எவ்வாறாயினும், மேற்கூறிய கடமைப்பாடுகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம், மலையக அரசியல் தலைமைகள், மனித உரிமை சிவில் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இச்சமூக புத்திஜீவிகள் அனைவருக்கும் பங்குண்டு என்பது மனங்கொள்ள வேண்டிய விடயமாகும். உண்மையில், இத்தகைய நடவடிக்கைகள் ஏதோவொரு வகையில் மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் எதிர்கொள்ளும் மனித உரிமை பிரச்சினைகளை கட்டுப்படுத்தவும் அதிலிருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்கும். பெரிதும் புத்தூக்கம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

1. விஜயசந்திரன், எஸ். இந்திய வம்சாவழி தமிழர் பற்றிய மீள் மதிப்பீட்டு ஆய்வு (சமூக நிலை மாற்று நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, 2005) பக் -1-5
2. அண்மையில் பல்கலைக்கழக ஆய்வு ஒன்றுக்காக நுவரெலியா மாவட்ட தமிழ் இளைஞர் யுவதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட முறைசாரா கலந்துரையாடல் மற்றும் நேர்காணல்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.
3. அண்மைய பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் வெளிக்கொணரப்பட்டவை (பேராதனை பல்கலைக்கழகம்-2008)
4. அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைக்கு சமர்ப்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவை
5. பொலிஸ் சோதனைகளின் போது அடையாள அட்டையில் காணப்படும் பெயர்களையும். கலாசார அடையாளங்களையும் பார்த்த பின்னர் ஒதுக்குபுறமாக நிற்குமாறு மலையக இளைஞர்கள் பணிக்கப்படுகின்றார்கள்
6. சாதாரண சட்டத்தின் கீழ் 24 மணித்தியாலம். பயங்கரவாத தடைச் சட்டதின் கீழ் 72 மணித்தியாலம்
7. See Democratic socialist Constitution of Sri Lanka 1978, Government Publication, 1978.
8. நீதித்துறை. மனித உரிமை ஆணைக்குழு. ஒம்புட்ஸ்மன் மற்றும் மனித உரிமை சிவில் அமைப்புக்கள்.
9. கொடூரமான சித்திரவதைகளின் மூலம் சந்தேக நபர்களுக்கு எதிரான வாக்கு மூலங்களைப் பெறுதல் மற்றும் இதன் மூலம் நிரபராதிகளை குற்றவாளிகளாக்குதல்.
10. United Nations Organization, UN Human Rights Council, International Criminal Court, International Human Rights Organizations
11. Constitutional and Institutional Arrangements
12. மலையக இளைஞர். யுவதிகளின் அடிப்படை ஆவணப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சகல பிரதேசங்களிலும் நடமாடும் சேவையினை நடாத்துதல். அதற்காக விசேட பணிக்குழு ஒன்றினை அமைத்தல்.
13. அதனை ஒரு செயன் முறையாக மேற்கொள்ள வேண்டும்.
14. பதற்ற சூழலில் இரவு நேரங்களிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் தேவையற்ற காரணங்களுக்காக வெளியிடங்களில் நடமாடுவதனை தவிர்த்தல்

# மனித நேயப் பண்புகள்

சொக்கலிங்கம் மகேஸ்வரி (ஆசிரியை)
மா- இறத்தோட்டை இந்து மகா வித்தியாலயம் - இறத்தோட்டை

இன்றைய உலகில் மனித நேயம் அருகி வருகிறது. இன்று விருட்சம் போல வளர்ந்திருக்கும் சமூகச் சிக்கல்களுக்கும் போர் வழிப்பட்ட உலகுக்கும் மனித நேயம் அற்றுப் போனமையே காரணமாகும். மனித வாழ்வின் அகநிலையிலும், புறநிலையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒருவனது புறவாழ்க்கையில் அவன் வாழ்வது அகநிலையிலிருந்து முரண்பட்ட வாழ்க்கையாகும். இது மனித நடத்தையில் பிறழ்வை ஏற்படுத்துகிறது. அகநிலையில் ஒருமைப்பாடு உடையவர்களே புறவாழ்க்கையில் பிறருடன் ஒன்றுபட்டு வாழமுடியும்.

அன்பு, இரக்கம், சகோதரத்துவம் சகிப்புத்தன்மை என்பன மனித மனங்களில் காணப்படுமாயின் அதுவே மனித நேயமாகும். உலகில் காணப்படும் ஒவ்வொரு சமயங்களும் இதனையே வலியுறுத்துகின்றன. இந்துக்களின் கீதை, கிறிஸ்தவரின் பைபிள், இஸ்லாமியரின் குர் ஆன், பௌத்தரின் தர்மபதம் யாவும் வலியுறுத்துவது மனித நேயத்திற்குரிய பண்புகளையே. இவை சிறுவயது முதலே மனதில் ஆழப் பதியப்பட வேண்டும். அதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் வழிகாட்ட வேண்டும். அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அவரது மகனின் கல்வி பற்றி அவரது ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில். "எனது மகனுக்கு வெற்றியைப் போலவே தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துங்கள். ஏமாற்றுவதை விட தோற்பது மேல் எனக் கூறுங்கள். யார் எதை சொன்னாலும் பொறுமையுடன் கேட்கப் பழகுங்கள். எல்லோரும் பிழை என்று சொன்னாலும் தனது கருத்தில் விசுவாசம் கொள்ள கற்பியுங்கள். பிறரில் அன்பு செலுத்தவும் பிறரை மதிக்கவும் பிறர் துன்பத்தில் பங்கு கொள்ளவும் போதியுங்கள்" என எழுதப்பட்டிருந்தது. இங்கு மனித நேயமிக்க ஒரு பிரஜை எவ்வாறு உருவாக்கப்படுகிறான் என்பது காட்டப்படுகிறது.

கணிப்பின்றி வளர்க்கப்படும் பிள்ளை
பிறரை தூற்றப் பழகுகிறது.
அமைதியின்றி வளர்க்கப்படும் பிள்ளை

சண்டையிட பழகுகிறது.
அடக்கத்துடன் வளர்க்கப்படும் பிள்ளை
அமைதியை கடைப்பிடிக்க பழகுகிறது.
அணைத்து வளர்க்கபப்டும் பிள்ளை பிறர்மீது
அன்பு செலுத்த பழகுகிறது.
பரிவுடன் வளர்க்கப்படும் பிள்ளை.
பிறர் மீது இரக்கம் காட்ட பழகுகிறது.

எனவே சிறுபராயத்திலிருந்தே பண்புகள் விதைக்கப்பட வேண்டும். அப்போதே மனித நேயம் வளரும். மனித நேயத்தின் அடிப்படை அன்பு. அன்பு மனிதனின் மன அமைதியை ஏற்படுத்துகிறது. அன்புக்கு மட்டுமே மன்னிக்கும் குணம் உண்டு. அன்பு குறையும் போது தவறுகள் பெரிதாகத் தெரியும். முரண்பாடுகள் தோன்றும்.

அப்போது மனித நேயம் மறந்து போகும் உண்மை, அன்பு மனதில் இருக்குமாயின் சகிப்புத் தன்மை மன்னிக்கும் சுபாவம் என்பன ஏற்படும். இனம் மொழி கடந்த பரஸ்பர நல்லுறவுக்கு மனிதனை இட்டுச்செல்லும். கிறிஸ்து "உன்னைப் போல் அயலானையும் நேசி" என அன்பின் அடிப்படையை விளக்கியுள்ளார். அவ்வாறு நேசிக்கும் போது பிறருக்கு துன்பம் விளைவிக்க மனம் இடம் தராது. அயலாரின் துன்பத்தை தன் துன்பம் போல கருதி துயர் துடைக்க மனம் துணியும். இதுவே மனித நேயமாகும். பிறரின் கஷ்டங்களில் பங்கெடுப்பது உன்னதமான மனிதப் பண்பாகும்.

இங்கு நட்பு அத்தகைய பண்புடையதாக அமையும். ஆபத்தில் உதவுவதே உயர்ந்த நட்பு. துன்பம் வரும் போது கைவிடும் நட்பை நாம் இழக்கும் போது எண்ணினாலும் உள்ளத்தை வருத்தும் என வள்ளுவர்.

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும்" என்ற குறளில் காட்டியுள்ளார்.

சகிப்பு தன்மையும் மனித நேயத்தை வளர்க்கும் பண்பாகும். சகிப்புத் தன்மை பற்றி கீதையில் "ஒரு காலத்தில் புகழ் பெற்றவன் மறுகாலத்தில் பழி எய்துவது மரணத்தை விடக் கொடுமையானது." அத்தைகைய கொடுமையை சகித்துக் கொள்பவன் எவனோ அவனே பூரண மனிதன் எனக் கூறப்படுகிறது.

நமக்கு வரும் துயர், பிறர் புரியும் தீங்கு, கோபம் என்வற்றை சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் தேவை. நாம் செய்யும் அனைத்தையும் பணிவோடு செய்தால் கடவுள் நமக்கு அன்பு காட்டுவார். நீ உயரும் போது அதே அளவுக்கு பணிந்து நட, அப்போது ஆண்டவன் முன்னிலையில் உனக்கு பரிவு கிட்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே நாம் சகிப்புத் தன்மையையும் பணிவையும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே உலகில் மனித நேயம் காணப்பட வேண்டுமாயின் தனி மனித மனங்களில் அன்பு, இரக்கம், பணிவு, சகிப்புத்தன்மை என்பன மிளிர வேண்டும். அப்போது தான் மனிதரிடையேயான வேறுபாடுகள் களைக்கப்படும். குரோத உணர்வுகள் வேறுக்கப்படும். ஐக்கியமான மக்கள் சமூகம் ஒன்றை காணமுடியும்.

## சரித்திரம் புகழும் மலையகமே

# விழித்தெழு

சரித்திரம் போற்றிடும்
சாகித்திய விழாவை
சாதனை விழா வாய்

சங்கத்தமிழ் போற்றும்
சிங்கத்திரு நாட்டினிலே

எழில்மிகு மலையகத்தின்
குளிர்மை தரும் நகரிலே

குதூகலமாய் கொண்டாடும்
இத்திரு நாளிலே

சாகித்திய நாயகனே
சிலையின் அழகு சிற்பியின் கையில்
இச் சிறுபான்மை மக்களின் உயர்வு

அருள்சாமியே உனது சாணக்கிய
அரசியல் பணியில் !

மலையகமே விடியலுக்காக
காத்திருக்கிறாயா
கவலைகளை விட்டு
விழித்தெழு

உனக்காக காலம் காத்துக்கிடக்கிறது
இனி உன் வாழ்வில்
வெற்றிப் பாதைகள் தான்

உன்னுள் புதைந்து கிடக்கும்
திறமைகளை வெளிக் கொண்டுவர
சந்தர்ப்பம் தரும்
தருணம் இது

சாதனைகள் பல புரிய வைக்கும்
சாகித்தியமாய்

சாகித்திய விழாவில்
காலடி வைத்து
விடியலைத் தேடி
புறப்படு !

இவன் உனுகளையூர் M. P. சுப்பிரமணியம்
(S.P) எல்கடுவ.

# யன்னல் வழி புகும் காற்று

இறுக்கப்பட்ட
உணர்வுகள்
எரிக்கப்பட்ட
உடமைகள்
அறுக்கப்பட்ட
அரும்புகள்
மனித பண்புகள்
மானமிழந்து - பின்
மண் தின்னும்
பிணமாகியது

முற்றி வீக்கமுற்ற
இருதய வாழ்வுகள்
வெடித்து சிதறி – பின்
வேகமாய்
துடிதுடிக்கிறது

இரத்த வடிதல்
பல ரேகைகளை
பதித்து
புத்தேச வரிபடத்தை
வரைவிலக்கணமாக்கியது

குற்றக் கருக்கள்
குதறப்பட்டு
நாற்று மேடையில்
விதைக்கப்படுகிறது

பசுந்தோல்
மினுக்கும்
பதிகள்
விஷம் விழுங்கிய
வேலிகள்
களமிறங்கி
பலத்தை நிரூபிக்க
பலத்தச் சமர்!

மென்று
விழுங்க முடியாத
முற் கம்பிகள்
தொண்டையில் இருகி....
சமிபாடடையாத
தோட்டாக்கள்
குதம் வழியில் முழுதாய்!
பாவிகள், புண்ணியவான்கள்
எல்லாம் துறந்த
முனிவர்கள் - அத்தனை பேரும்
ஏதோ தொலைத்த
ஏமாளிகளாய்......

யதார்த்தத்துள்
அத்தனையும்
யன்னல் வழி புகுந்த காற்றாய்

அன்பு சொல்லும்
தத்துவம் மட்டும்
இன்னும் இன்னும்...
பிரசவ வழியில்!.....

மாரிமுத்து சிவகுமார்
ஹட்டன்.

# ஒரு விடிவெள்ளியாக
# பழைய கல்லறை

பாரத தேசம் விட்டு
பஞ்சம் பிழைப்பதற்காய்
பாக்கு நீரிணையின்
அக்கரைக்கு சென்றவளே
நூற்றாண்டுகள்
கடந்த பின்பும் - உனக்காய்
கரிசகாட்டில்
நான் கல்லறையாய்
காத்துக்கிடக்கின்றேன்...

நான் ஆயிரம் மந்தைகளுக்கு
சொந்தக்காரன் - நீ
மந்தை மேய்ப்பவன் மகள்
என்பதாலா – நாம்
நட்டுவைத்த காதல் செடி
கருகிப் போனது

பருவ பெயர்ச்சியில்
வந்துவிடுவேனென்று – கண்ணில்
உப்பளம் செய்து
சென்றவளே – நீ
வராமலேயே
போய்விடுவாயோ....?
என உனைக்காண
கண்டி சீமைக்கு
கடல்தாண்டி ஓடோடிவந்தேனே
ஞாபகம் இருக்கின்றதா...?

என் வாழ்க்கையில்
அதிவிசித்திர விபத்து – நம்
காதல் மட்டும்தான்
என்றிருந்தேன் - ஆனால்
அதையும்
தாண்டி – என் உயிரின்
அணுக்களெல்லாம்
உடைந்து நொருங்கியது
கண்டி சீமையில்
உன்னை கண்டபோது....

நீ கஞ்சுகலயம்
சுமந்தாலே – உன் கால்கள்
வழித்திடுமோ வென்று – என்
இரத்த குழாய்கள்
பதைபதைக்கும் - இப்போது
கரும்பாறை நடுவே
உன் அனிசம் பூ மேனியில்
கொழுந்து கூடை சுமக்கிறாயே
நான் என்னாவேன்?

என்னைப்போல
பளிங்குபாறையும் பார்த்து
அதிசயித்துப்போன
உன் வதனம் - எண்ணெய்
வழிந்தோடி
இருண்டதைக் கண்ட– என்
பகலெல்லாம்
இரவாகப் போனது ....

பிஞ்சு குழந்தையின்
முத்தங்களை ஒத்த – உன்
சிவந்த கரங்கள்
தவறி – என்னை தீண்டிய
போதெல்லாம்
நான் தவணைமுறையில்
பிறந்தேன் - இன்று
தேயிலை செடிகள் தனது
கரடு முரடான உதட்டால்
உந்தன் கரங்களை – முத்தம்
இட்டே
சேதப்படுத்தி
சொரசொரப்பாக்கி விட்டன போல
ஐயகோ – தூரம் நின்று
இதை பார்த்த
என் இதயம் - தன்
உயிர்துடிப்பை
நிறுத்தி நொடிக் கொருமுறை
தற்கொலை செய்கின்றதே
ஆயினும் - அது

மரணிக்கவில்லை
மறுபடி உயிர் பித்தது
ஏன் என குழம்பிபோனேன்
பிறகுதான் தெரிந்து – என்
இதயம் முழுதும் இருப்பது
உனது நினைவுகளென்று.....
பாத சரம் போட்டு
காதல் சுரம் பேசும் - உன்
பாதங்களை தேடினேன் - அது
வெயிலால் வீரல் விட்டிருந்த
நம்மூர் மண்ணைப்போல
உருமாறி இருந்ததைக்கண்டு
கண்ணீரில் - என்
ஜீவன் கரையத்தொடங்கியது

இறுதியாக
என்னை தொலைத்து தொலைத்து
நான் தேடிய – உன்விழிகளை
பார்த்தேன்
கடவுளே – அந்த விழிகளுக்குல்
இன்னொருவன்
குடியேறிவிட்டானா...?
என் சுவடு கூட
தெரியவில்லையே – அடியே
என் நினைவுகளை மட்டும்
சுமந்தவாறே
உயிரின் விழிம்புவரை
நடைபோடுவேன் - என்றவளே
இன்றெப்படி
இன்னொருவன் உயிரை
உன் உயிரில் கலந்து
சுமக்கிறாய்

யாரும் அறியாது
நீ சுவைக்க –
என்பண்ணைத்தோட்டத்து
மாம்பழங்களை
திருடித்தந்தேனே – அன்று
நான் சுவைக்காமலே இனித்த
என் சுவை அரும்புகள் - இன்று
நீ இன்றி
அறுந்து விழ அழுகின்றது...

எல்லாம்
எனக்கு புரிகிறது - இருந்தும்
உன் சின்ன சின்ன நினைவுகளை
என்னுள்
திரையிட்டு பார்க்கின்றேன்
இன்னும் பார்ப்பேன்
உன் உறவுகளுக்காய்
நீ – என்னை
முடிச்சிட்டு வான்வெளியில்
எறிந்தபின்பும்
நான் நீ இருக்கும்
திசைப்பார்த்தே
விடிவெள்ளியாய்
ஜொலித்துக்கொண்டிருப்பேன்.

MS. K. சுகுனா
மிடில்டன் எஸ்டேட்
தலவாக்கலை.

## சாகித்திய விழா - 2008 சாகித்திய விருது பெறுவோர்


01


02


03


04


05


06


07


08


09


11


12


13


14


16


17


18


19


20


21


22


24


25


26


27

28

29

30

31

32

# சாகித்திய விழா - 2008
# சாகித்திய விருதுக்கான பெயர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 01 | ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயர் சிவசங்கரக்குருக்கள்<br>ஸ்ரீ சண்முகநாத தேவஸ்தானம், மஸ்கெலியா | ஆன்மீகத் துறை |
| 02 | திரு. கனகசபை இராஜபுவனீஸ்வரன்<br>செயலாளர் விவேகானந்த சபை, கொழும்பு | ஆன்மீகத் துறை |
| 03 | திரு. இரகுநாதன் இராஜேந்திரன்<br>18/4, 8 வது ஒழுங்கை, சொய்சாகல, நாவலப்பிட்டிய | ஆன்மீகத் துறை |
| 04 | திரு. முத்துக்கருப்பன் சோமசுந்தரம்,<br>வலயக் கல்விப் பணிப்பாளர், ஹங்குரங்கெத்த | கல்வித் துறை |
| 05 | செல்லையா ஜெயகுமார்,<br>88 ரொசிட்டா வீடமைப்பு, கொட்டகலை | கல்வித் துறை |
| 06 | திருமதி சீவரட்ணம் - மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்விப் பணியகம், கண்டி | கல்வித் துறை |
| 07 | திரு. சிதம்பரம் பெருமாள் ரெட்டியார்,<br>204/3, டிம்புள்ள வீதி, புருட்ஹில், அட்டன். | சமூக சேவை |
| 08 | திரு. பழனியாண்டி மோகன் சுப்பிரமணியம்<br>இல. 88/2, டன்பார் வீதி, ஹட்டன் | சமூக சேவை |
| 09 | திரு. சந்தனம் பிரான்ஸிஸ் வசந்தன்,<br>14ம் குறுக்கு வீதி, காலவத்தை, கட்டுகஸ்தோட்டை | சமூக சேவை |
| 10 | திரு. ப.அ. பாஸ்கரன்,<br>130, சமாமிமலை வீதி, மஸ்கெலியா | சமூக சேவை |
| 11 | திரு. சந்தனம் பிரான்ஸிஸ் வசந்தன்,<br>14 குறுக்குவீதி, காலவத்தை, கட்டுகஸ்தோட்டை | கலைத் துறை |
| 12 | திரு. எஸ். செல்லதுரை<br>எஸ்கடேல் தமிழ் வித்தியாலயம் | கலைத் துறை |
| 13 | திரு. எஸ். ஆறுமுகம் ராஜா,<br>2ஆம் பிரிவு, ஆம்பன்பிட்டிய தோட்டம், நகரம் கலிகமுவ | கலைத் துறை |
| 14 | திரு. பிரதீஸ்குமார்,<br>பரிசுத்த திரித்துவ கல்லூரி, நுவரெலியா | கலைத் துறை |
| 15 | திரு. எம். எஸ். ஸ்ரீ தயாளன்<br>இல. 24, பைசர் அவன்யு தெஹிவல | கலைத் துறை |
| 16 | திரு. அருணாசலம்பிள்ளை பொன்னம்பலம்,<br>23 கோவில் வீதி, கொட்டகலை | ஊடகத்துறை |
| 17 | திரு. சிவலிங்கம் சிவகுமார் | ஊடகத்துறை |
| 18 | திரு. சுப்பிரமணியம் ஜெ.ப்ரி ஜெபதர்ஷன், News 1st செய்தி வாசிப்பாளர்,<br>லோவர் வென்சர் தோட்டம், வென்சர் குரூப், நோர்வூட் | ஊடகத்துறை |
| 19 | திரு. பெரியசாமி இராஜேந்திரன்<br>இல. 504, நுவரெலியா வீதி, புசல்லாவ | ஊடகத்துறை |
| 20 | திரு. இரா செல்வராஜா,<br>135, மிஹிந்த மாவத்தை, கொழும்பு 12 | ஊடகத்துறை |
| 21 | திரு தேவராஜன் வசந்தகுமார்<br>27/1, அத்துலத்முதலிகம, மத்துகம | ஊடகத்துறை |
| 22 | திரு கருப்பையா திருநாவுக்கரசு,<br>கவரவில தமிழ் மகா வித்தியாலயம், சாமிமலை | விளையாட்டுத் துறை |
| 23 | திரு. ரெங்கநாதன்<br>கிரான் ஹோட்டல் நுவரெலியா | விளையாட்டுத் துறை |
| 24 | திரு. அப்துல் ஜப்பர் மொஹமட் பாமிஸ்,<br>இல 55, டன்பார் வீதி, ஹட்டன். | தொழில் அதிபர் |
| 25 | திரு. காளிமுத்து சுந்தராஜ்,<br>88/6, எ. மென்டீஸ் பிளேஸ், அட்டன். | தொழில் அதிபர் |
| 26 | திரு. லோகநாதன்<br>இல. 125, ப்ரியா ஸ்டோர்ஸ், டீ.எஸ். சேனநாயக்கா வீதி, கண்டி. | தொழில் அதிபர் |
| 27 | திரு. நல்லன் இராமசாமி இராமகிருஷ்ணன்.<br>3 யு. குவாட்டஸ், டிரேட்டன் தோட்டம், கொட்டகலை | தொழிற் சங்கத்துறை |
| 28 | திரு. ச. ஜேசுநேசன் | அரச நிருவாகத்துறை |
| 29 | திரு. பாலேந்திரா, கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம்,<br>கந்தப்பளை. | கௌரவிப்பு |
| 30 | திரு. மகேஸ்வரன், மெதைஸ் தமிழ் வித்தியாலயம்,<br>கந்தப்பளை (கௌரவிப்பு) | கௌரவிப்பு |
| 31 | செல்வன் தயாளன் (கௌரவிப்பு) | இளம் விளையாட்டு வீரர் |
| 32 | செல்வி லக்னபிரியா (கௌரவிப்பு) | இளம் விளையாட்டு வீரர் |

# நீதி மன்றங்களினால் வழங்கப்படும் இடைக்காலத் தடை

நீதி மன்றங்களினால் இன்று வழங்கப்பட்டு வரும் நீதித் துறையை உயர்த்தும் நடவடிக்கைகளில் " இடைக்காலத் தடை" என்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான இடைக்காலத் தடையானது ஒவ்வொரு வழக்கைப் பொறுத்தும் ஒரு காரியத்தை மேற்கொள்வதற்கும், அக்காரியத்தை இடைநிறுத்துவதற்காகவும் நீதிமன்றங்களினால் வழங்கப்படுகின்றது. நீதிமன்றம் ஒன்றினால் எவரேனும் ஒருவருக்கு எதிராக இடைக்காலத் தடை ஒன்று வழங்கப்படுமேயானால் அத் தடையை அவரால் மீற முடியாது. அவ்வாறு மீறினால் "நீதிமன்ற அவமதிப்பிற்கு" குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

இடைக்காலத் தடையொன்று பெறப்படவேண்டுமானால் ஒருவருக்கு வழக்கெழு காரணம் இருக்க வேண்டும். அவர் இன்னொருவருக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்திருக்க வேண்டும். வழக்கொன்றை தாக்கல் செய்யாது இடைக்காலத் தடையொன்றை பெற முடியாது. இடைக்காலத் தடையொன்றைப் பெற வழக்கு ஆரம்பிக்கும் வரையிலோ அல்லது வழக்கு முடியும் வரையிலோ காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வழக்கைத் தாக்கல் செய்யும் போதே இடைக்காலத் தடையை கேட்டு விண்ணப்பிக்கலாம்.

மிகவும் அத்தியாவசியமானதும், அவசியமானதுமான சந்தர்ப்பங்களில் " பொதுவான விடயங்களில்" நீதிமன்றங்கள் இடைக்காலத் தடையை வழங்கலாம். உதாரணம் : அத்தியாவசிய சேவைகள். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் தமது அங்கத்துவத்தை அரசியல் கட்சிகள் நீக்கக்கூடாது என இடைக்காலத் தடை வாங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. தொழிற்சங்கங்கள் தமது வருடாந்த கூட்டத்தை கூட்டும்போது அதனை எதிர்ப்பவர்கள் கூட்டத்தை நடத்தவிடாமல் இடைக்காலத் தடையை வாங்குவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது

இலங்கையின் நீதி முறைச்சட்டத்தின் இரண்டாம் இலக்கம் 1978ஆம் ஆண்டின் 54வது பிரிவின்படி இடைக்காலத் தடைவழங்குவதுப் பற்றி கூறப்பட்டுள்ளது. எதிராளிக்கும் வழக்காளிக்கும் ஏதேனும் காரணம் இருப்பின் இக்கட்டளையைப் பெற்றுக்கொள்ள இப்பிரிவு இடமளிக்கின்றது. இத்தடை உத்தரவை எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்பதைப்பற்றி இலங்கை குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை பிரிவு 662 தொடக்கம் 667 வரை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அசையும் அசையாத பொருட்கள் தொடர்பில் மேற்படி தடையை பெற்றுக்கொள்ளலாம். மேற்படி இடைக்கால தடையை கேட்பவர் முதல் தோற்றத்திலேயே தனது பக்கத்தில் நியாயமிருக்கின்றதா என்பதையும் தனது உரிமை பாதிக்கப்படுகின்றதா என்பதையும், நீதிமன்றம் மேற்படி விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என்பதையும் நிரூபிக்கக் கூடிய வகையில் தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். இடைக்காலத் தடை உத்தரவானது நீதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்பதால் நீதிபதி திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் மட்டுமே மேற்படித் தடை உத்தரவு வழங்கப்படும். அல்லாவிடில் வழங்கப்பட மாட்டாது.

மேற்படி விடயமானது "நீதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டது" என்ற போதிலும் இடைக்கால தடையை வழங்குவது தொடர்பாக அடிப்படையாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடுகள் யாது எனக் கூறும் மூன்று முக்கிய வழக்குகள் உள்ளன.

(1) 1981 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க ஸ்ரீலங்கா சட்ட அறிக்கையின் 287 ஆம் பக்க

(2) 1984 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க ஸ்ரீ லங்கா சட்ட அறிக்கையின் 85 ஆம் பக்க

(3) 1995 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சட்ட அறிக்கை (2) 104 ஆம் பக்க வழக்குகள் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன.

இவற்றுல் முதன்மையானதாக 1981 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க ஸ்ரீலங்கா சட்ட அறிக்கையின் 287ஆம் பக்கத்தில் உள்ள பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எதிர் அரசப்படக் கூட்டுத்தாபன வழக்கு கருதப்படுகின்றது. இவ்வழக்கின் அடிப்படையில்

(1) இடைக்கால தடை சம்பந்தமாக விண்ணப்பிப்பவர் சார்பில் சிறப்பான வழக்கெழு காரணம் உள்ளன என நீதி மன்றம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில்

(2) இடைக்கால தடை வழங்குவதால் எதிர்க்கட்சியினருக்கு கடுமையான பாதிப்பு எதுவும் எற்படாது என நீதி மன்றம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில்

(3) இடைக்கால தடை சம்பந்தமாக விண்ணப்பிப்பவரின் நடத்தையும் அதற்கு எதிரானவரின் நடத்தையையும் கருத்திற் கொண்டு விண்ணப்பிப்பவரின் பக்கத்தில் நியாயமுள்ளது என நீதி மன்றங்கள் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இடைக்கால தடை உத்தரவை வழங்குகின்றது. மேற்படி விடயங்களை கருத்திட் கொண்டு இடைக்கால தடை வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது.

14 நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகும் இடைக்காலத் தடை (Enjoining Orders)

இடைக்காலத் தடை கேட்டு விண்ணப்பிக்கும் ஒருவருக்கு இத்தடையைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் உண்டு என நீதி மன்றம் கண்டால் அந்தத் தடையை நிரந்தரமாக வழங்குவதற்கு முன்னர், “நிகழ்ந்துவிடக் கூடியதும், நிகழ்ந்த பின்னர் நிவர்த்தி செய்ய முடியாததுமான” ஏதேனும் கேடினைத் தடுப்பதற்காக நீதிமன்றங்கள் 14 நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகும் தற்காலிக இடைக்காலத் தடையை வழங்கும். இவ்வாறு வழங்கப்படும் தற்காலிக இடைக்காலத் தடையானது ஒவ்வொரு 14 நாட்களுக்கு ஒரு முறையும் நீடிக்கப்படலாம். இதற்கிடையில் நிரந்தர இடைக்காலத் தடைக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அது வழங்கப்பட்டால் தற்காலிகமாக வழங்கப்பட்ட இடைக்காலத் தடை அழிந்து விடும்.

நீதிமன்றம் கட்டளையை மதிக்காதது நீதித்துறை கௌரவத்தை சிதைக்கும் ஒரு செயல் என்பது சட்டமா அதிபர் எதிர் டைம்ஸ் நியூஸ் பேப்பர் லிமிட்டட் என்ற வழக்கில் பிரபுக்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.இதனடிப்படையில் இடைக்காலத் தடை உத்தரவை மீறுபவர்கள் நீதிமன்றத்தை அவமதித்ததாக கருதப்படுவார்கள்.

மாவட்ட நீதிமன்றங்கள் வழங்குகின்ற இடைக்காலத் தடையை நீக்குமாறு ஒருவர் கோரியதன் பின்னர் அந்நீதிமன்றம் மேற்படித் தடையை நீக்க மறுத்தால் அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம். அத்தோடு அக்காலப்பகுதியில் அவ்வழக்கை விசாரிக்க கூடாது என்றக் கட்டளையை வழங்குமாறு கேட்கலாம் அக்கட்டளை “Stay Order” என அழைக்கப்படும்.

பிழையான விதத்தில், நிகழ்வுகளைத் திரித்துக் கூறி ஒரு பிரிவினரால் தடை உத்தரவு பெறப்பட்டது என மற்றைய பிரிவினரால் நீதிமன்றம் திருப்திப் படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் தன்னால் வழங்கப்பட்ட தடை உத்தரவை இரத்து செய்யும்

இடைக்காலத் தடை குறித்த மேற்படி கண்ணோட்டத்தின் போது பின்வரும் வழக்குகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

(1) டிஸ்ஜிலரிஸ் கம்பனி எதிர் காரியவசம் (2001. (3) SLR 119)
(2) T.N. இந்திராணி தேவி எதிர் மாநகர சபை இம்பால் (AIR 1958 மணிபுரி 27)
(3) பிரிலங்கா டிரேடிங் கம்பனி லிமிடட் எதிர் இலங்கை வங்கி 1996 (1) SLR 231)
(4) லண்டன் பெக்வெல் இரயில்வே எதிர் குரோஸ் (1985) 31 CH.D 354,369
(5) வனிக் இன் கோபரேஷன் லிமிடட் எதிர் ஜெயசேகர (1997 (2) SLR 365)
(6) சுப்பிரமணியம் எதிர் சகாப்தீன் (1984 (1) SLR 48)
(7) யக்காதுவே ஸ்ரீ பக்னாராம தேரோ எதிர் கல்வியமைச்சர் (1971 NLR 506)

தடையுத்தரவுக்கு எதிரானவர்கள் தடை உத்தரவை நீக்குமாறு அல்லது இரத்து செய்யுமாறு அல்லது சீர்திருத்தம் செய்யுமாறு கோரி இவ்வுத்தரவை வழங்கிய அதே நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்யவேண்டும். இந் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்யாமல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் நேரடியாக மீளாய்வு விண்ணப்பம் செயய் முடியாது. இது குறித்த தீர்ப்பானது 1997 ஆம் ஆண்டு இரண்டாம் இலக்க ஸ்ரீ லங்கா சட்ட அறிக்கையில் 365 ஆம் பக்கத்திலுள்ள வனிக் கோபரேஷன எதிர் ஜெயசேகர என்ற வழக்கில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது இடைக்காலத் தடை உத்தரவு என்பது நீதிமன்றங்களினால் வழங்கப்படுவதற்கு நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் சிறப்பான காரணங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

சிவன்ஜோதி யோகராஜா
சட்டத்தரணி
நுவரெலியா

மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிப்பு

### க.பொ.த (உ/த) - 2007

| மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|
| 01. M.R.F.றியாசா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 02 M.S.M.றிமாஸ் | நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| 03 K.சாம்பவி | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 04. V.மனோஜ் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 05. R.சைலஜா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 06. A.கஜானானன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 07. A.M.A.அம்மானுவேல் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 08. D.திலிபன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 09. N.கருணாகரன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 10. Y.காயத்திரி | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 11. S.சிவசக்தி | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |

### க.பொ.த (சா/த) - 2007

| மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|
| 01. S.சிந்துஜா | க/புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி, கண்டி |
| 02. B.நிரோஷனி | நு/புளியாவத்தை தமிழ் மகாவித்தியாலயம், டிக்கோயா |
| 03. P.மிரியாளினி | நு/மரயா தமிழ் மகாவித்தியாலயம், லிந்துல |
| 04. J.சுஜீவா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 05. K.சக்கரவர்த்தி யாதவன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 06. V.ஆத்மாஜன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |

### தரம் 5ம் புலமைப் பரிசில் பரீட்சை - 2008

| | |
|---|---|
| 01. K.நிலுக்சன் | க/கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி |
| 02 R.மதுஷன் | க/ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா |
| 03. K.டினேஷ்குமார் | க/மலைமகள் இந்துக் கல்லூரி, தெல்தோட்டை |
| 04. K.அகிலன் | க/அசோகா வித்தியாலயம், கண்டி |
| 05. W.அகமட்சனா | க/புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி |
| 06. P.ஷகானா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 07. A.திஷாந்தன் | நு/புனித லேனாட் தமிழ் வித்தியாலயம், ஹல்ஹரனோயா |
| 08. S.கஜலினி | நு/புனித மேரிஸ் தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ |
| 09. S.டிலுக்ஷன் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 10. T.சிரோன்மகாராஜ் | நு/புனித லேனாட் தமிழ் வித்தியாலயம், ஹல்ஹரனோயா |
| 11. A.ஜோண் நர்த்தரலி | நு/வட்டவளை தமிழ் வித்தியாலயம், வட்டவளை |
| 12. M.I.அக்ரம் | நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| 13. R.கலாராணி | நு/கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை |
| 14. M.D.R.C.லக்ஸ்தனா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 15. S.யாதுரி | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 16. P.கபிலர்ஹன் | நு/புனித ஜோன் பொஸ்கோ ம.வி, ஹட்டன் |
| 17. S.துர்கா | நு/நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா |
| 18. T.அக்ஷிகாந் | நு/கொட்டகலை தமிழ் வித்தியாலயம், கொட்டகலை |
| 19. L.ஷவ்யன்னிய பிரதிபா | நு/கொட்டகலை தமிழ் வித்தியாலயம், கொட்டகலை |
| 20. P.பிரேம தர்ஷன் | நு/தங்கல இல1. தமிழ் வித்தியாலயம், லிந்துல |
| 21. D.C.ஜெனிபர் | நு/புனித லேனாட் தமிழ் வித்தியாலயம், ஹல்ஹரனோயா |
| 22. K.L.துர்க்கா | நு/புனித கெபிரியேல் மகளிர் வித்தியாலயம், ஹட்டன் |
| 23. S.கயாளினி | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |

| | |
|---|---|
| 24. S.சினேகா | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 25. S.கம்ஷிகா | நு/புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம்,மஸ்கெலியா |

**கௌரவிக்கப்படவுள்ள அதிபர்கள்.**

**க.பொ.த (உ/த) - 2007**

| அதிபர் | பாடசாலை |
|---|---|
| 01. திரு.வியாசிங் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 02. திரு.R.கிருஷ்ணசாமி | நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| 03. திரு.S.N. குரூஸ் | நு/புனித ஜோன் பொஸ்கோ ம.வி, ஹட்டன் |

**க.பொ.த (சா.த) - 2007**

| அதிபர் | பாடசாலை |
|---|---|
| 01. | க/புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி |
| 02. திரு.S.திரவியம் | நு/புளியாவத்தை தமிழ் மகாவித்தியாலயம், டிக்கோயா |
| 03. திரு.M.ஜெயராமன் | நு/மரயா தமிழ் மகாவித்தியாலயம், லிந்துல |
| 04. திரு.விஜயசிங் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |

**தரம் 5ம் புலமை பரிசில் பரீட்சை - 2008**

| அதிபர் | பாடசாலை |
|---|---|
| 01. திருமதி.எஸ்.செல்வராஜ் | க/கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நவலப்பிட்டி |
| 02. திரு.சந்திரசேகரன் | க/ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா |
| 03. திரு.எஸ்.முத்தையா | க/மலைமகள் இந்துக் கல்லூரி, தெல்தோட்டை |
| 04. | க/அசோகா வித்தியாலயம், கண்டி |
| 05. வண.ரைட்டஸ் ரொறிக்கோ | க/புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி |
| 06. திரு.விஜயசிங் | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 07. ஆ.சிவராஜா | நு/புனித லேனாட் தமிழ் வித்தியாலயம், ஹல்ஹரனோயா |
| 08. | நு/புனித மேரிஸ் தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ |
| 09. C.கணேசன் | நு/வட்டவளை தமிழ் வித்தியாலயம், வட்டவளை |
| 10. திரு.R.கிருஷ்ணசாமி | நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| 11. திரு.வீ.பாலேந்திரா | நு/கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை |
| 12. திரு.S.N. குரூஸ் | நு/புனித ஜோன் பொஸ்கோ ம.வி, ஹட்டன் |
| 13. Sister ரஞ்சனி | நு/நல்யான் மகளிர் கல்லூரி, நுவரெலியா |
| 14. திருமதி.J.D.வேதநாயகம் | நு/கொட்டகலை தமிழ் வித்தியாலயம், கொட்டகலை |
| 15. I.J.A.பிரதீப்குமார் | நு/தங்கல இல1. தமிழ் வித்தியாலயம், லிந்துல |
| 16. திருமதி. R. பழனிவேல் | நு/புனித கெபிரியேல் மகளிர் வித்தியாலயம், ஹட்டன் |
| 17. | நு/புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா |

**கௌரவிக்கப்படவுள்ள ஆசிரியர்கள்**

**தரம் 5ம் புரமைப் பரிசில் பரீட்சை - 2008**

| ஆசிரியர்கள் | பாடசாலை |
|---|---|
| 01. | க/கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நவலப்பிட்டி |
| 02. | க/ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா |
| 03. | க/மலைமகள் இந்துக் கல்லூரி, தெல்தோட்டை |
| 04. | க/அசோகா வித்தியாலயம், கண்டி |
| 05. | க/புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி |
| 06. | நு/ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன் |
| 07. | நு/புனித லேனாட் தமிழ் வித்தியாலயம், ஹல்ஹரனோயா |
| 08. | நு/புனித மேரிஸ் தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ |
| 09. | நு/வட்டவளை தமிழ் வித்தியாலயம், வட்டவளை |
| 10. | நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| 11. | நு/கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை |
| 12. | நு/புனித ஜோன் பொஸ்கோ ம.வி, ஹட்டன் |
| 13. | நு/நல்யான் மகளிர் கல்லூரி, நுவரெலியா |
| 14. | நு/கொட்டகலை தமிழ் வித்தியாலயம், கொட்டகலை |
| 15. | நு/தங்கல இல1. தமிழ் வித்தியாலயம், லிந்துல |
| 16. | நு/புனித கெபிரியேல் மகளிர் வித்தியாலயம், ஹட்டன் |
| 17. | நு/புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா |

## இருகரங் கூப்பி நன்றி நவில்கின்றோம்

- சாகித்திய விழாவுக்கு தலைமை வகித்த மாண்புமிகு அமைச்சர் அருள்சாமி அவர்களுக்கும், பல வழிகளில் உதவி செய்த ஏற்பாட்டாளர்களுக்கும், விழாவில் பங்கேற்ற அதிதிகள், விசேட பிரமுகர்களுக்கும், பலவழிகளில் அனுசரணைகளை வழங்கிய அனுசரணையாளர்களுக்கும், சகல ஆலோசனைகளையும் வழங்கிய அமைச்சின் செயலாளர் ஷிரானி வீரகோன் அவர்களுக்கும்.

- பல வேலைகளின் மத்தியிலும் சாகித்திய விழா வேலைகளை முன்னேடுத்த, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் திரு.எம்.பத்மநாதன், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எஸ். புனிதவதி அவர்களுக்கும், அமைச்சரின் பிரத்தியேக உதவியாளர் திரு.சரவணபவநாதன் அவர்களுக்கும், அமைய பொதுசன தொடர்பாளர் திரு.இராமகிலுஷ்ணன் அவர்களுக்கும், நுவரெலியா பிரதேச காரியாலய பொறுப்பாளர் எஸ்.கிருஷ்ணராஜ் அவர்களுக்கும்

- அமைச்சின் அலுவலர்களான திருமதி. எஸ்.யோகமலர், திருமதி.எஸ்.கிருஸ்ணவேணி திரு.அந்தனி ஜீட் ஆகியோருக்கும் அதுபோலவே அமைச்சின் உத்தியோகத்தர்களான உதவிச் செயலாளர், திருஉபயாநந்த பெரேரா, திரு.லலந்த, திரு. N.G.A.கொந்தகொட, திருமதி. சுபத்ரா ரட்ணாயக்க, திரு.எஸ்.தஸநாயக்க ஆகியோருக்கும்.

- எமது மலர்களுக்கு உபசரணைக்குழு, பொறுப்பாளர் குழு, வெளி அலங்காரக்குழு, கலை நிகழ்ச்சிப் பொறுப்பாளர் குழு, நிகழ்ச்சிகள் பொறுப்பாண்மைக்குழு, வரவேற்புக்குழு, நுவரெலியா மாநகர சபை மேயர் உட்பட மாநகர சபை ஊழியர்களுக்கும்,

- எமது அழைப்பை ஏற்று ஆசிச் செய்திகள் புகைப்படங்கள் ஆகியவற்றைத் தந்து உதவியவர்களுக்கும், விசேடமாக நுவரெலியா பிரதேசத்தில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களுக்கும்,

- மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய அறிவலர்களுக்கும்.

- நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், ஏனைய தனியார் நிறுவனங்களுக்கும்.

- விழாவில் கௌரவிப்பைப் பெற்ற அனைத்துத் துறை மேலாண்மையாளர்களுக்கும்,

- விழாவுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும்,

- மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அரசியல் தொழிற்சங்க பிரமுகர்கள், கல்வித் துறையாளர்கள், இலக்கியவாதிகள் ஆகியோருக்கும்.

- விழாவில் வெளியுலகுக்குப் படைத்ளித்த ஊடகத்துறையைச் சார்ந்தவர்களுக்கும்

- ஒளி, ஒலி அமைப்பாளர்களுக்கும், சகல பணிகளிலும் பங்கேற்ற அனைவருக்கும் அனைத்தும் வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மாகாண வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும்.

# மத்திய மாகாண
# தமிழ் சாகித்திய விழா

# 2008

விழா சிறப்புற நல்வாழ்த்துக்கள்

# ஆஷா டெக்ஸ்டைல்ஸ்

இல. 30, கொட்டுகொடல்ல வீதி,
கண்டி

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா




"கல்வியால் உயர்வடைவோம்"